# வளர்

காலாண்டிதழ் மாசி 2024 இதழ் : 06 வெளியீடு : மகாஜனா '79



உள்ளே ...

• சுப. கிருஷ்ணானந்தன் • செயபாலன் • கௌரி பரா • ஓடைக்காரன் • மனோ • க. வாசுதேவன் • க. ஆதவன்
• விஜி நாகராஜா • தீபிகா • அகர்ன் • சின்னையா ரவீந்திரன் • க. சதுர்சன் • ஆலகாலன்
• தர்மினி • சஞ்சயன் செல்வமாணிக்கம் • சி. ரமேஷ் • புனிதா கணேஸ் • ஆனந்தி பாலசூரியன் • மாயோன்
• ராஜூ கௌ. • கோகிலா மகேந்திரன் • பஞ்சகல்யாணி • வே. கெங்கேஸ்வரன் • இளவாலை விஜயேந்திரன்

- தீதும் நன்றும் பிறர் தர வாரா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் கனவு

1950களின் இலங்கையில் நான்கில் இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்றால் மருத்துவப் படிப்பில் சேரலாம். இரண்டு பாடங்களில் தோல்வியடைந்த ஒருவர் எப்படி மருத்துவக் கல்லூரியில் சேர முடியும் என்று அந்தக் காலத்தில் யாரும் கேள்வி எழுப்பவில்லை. இன்று இந்தச் சூழ்நிலை தலைகீழாக மாறிவிட்டது.

எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் ஆகும்போது நெடுங்கனவு கலைகின்றது. சிறுவயதில் இருந்தே, மக்களுக்குச் சேவை செய்ய மருத்துவம் படிக்க வேண்டும் என்று ஒரு மாணவர் சாதாரண தரப் பரீட்சைக்கு கடினமாகப் படித்து 9A பெற்று உயர்தரம் 2A, B பெற்றும் மருத்துவம் அல்லது பல் மருத்துவத்தில் சேர முடியவில்லை என்றால் அவரின் அடுத்த நிலை என்ன? எதிர்பார்த்த ஆசை நிராசை ஆகும்போது இனி என்ன படிக்கலாம் எனச் சிந்திக்கத் தொடங்குகிறார். இந்த நிலையை எப்படி நல்லதாக மாற்றுவது, இனி என்ன படித்தால் மக்களுக்குச் சேவையும் மனசுக்குப் பிடித்த வேலையும் கிடைக்குமா என ஏங்குகிறது ஏழை மனம். ஏழை மாணவரின் பொருளாதார நிலை அவரது கனவை மீண்டும் சிதைக்கும். இலங்கையில் இந்த நிலைமையை மாற்றியமைப்பது எப்படி? மற்றய துறைகளில் மனிதனுக்கு பயன்படும் வகையில் சிறந்த வேலைகளை உருவாக்குவது எப்படி? சிறந்த வேலை வாய்ப்புக்காக இந்த வகை மாணவர் வாழ்க்கையை எப்படி மாற்றுவது? புத்திஜீவிகள் இந்நிலையை எப்படி மாற்றுவார்கள்?

ஒரு கல்விக் கனவின் சிதைவை அனுபவிப்பது நம்பமுடியாத அளவிற்கு மனச்சோர்வை ஏற்படுத்தும், ஆனால் பின்னடைவுகள் வாழ்க்கையின் இயல்பான பகுதியாகும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். தடைகள் இருந்தபோதிலும் உங்கள் கல்விக்கனவை நிறைவேற்றுவதற்காக நீங்கள் எடுக்கக்கூடிய சில படிகள்.
கடந்த காலத்தை உங்களால் மாற்ற முடியாது என்பதை ஏற்றுக்கொண்டு, நீங்கள் கட்டுப்படுத்தக்கூடியவற்றில் கவனம் செலுத்துங்கள்: அடுத்த தேர்வுக்கு எப்படி வித்தியாசமாகப் படிக்க முடியும்? என்ன தவறு நடந்தது என்பதை மதிப்பீடு செய்து, மேம்படுத்தத் திட்டமிடுங்கள். இந்தத் தருணத்தை ஒரு கற்றல் வாய்ப்பாகப் பயன்படுத்தவும். இது ஒரு சோதனை மட்டுமே. நீங்கள் தோல்வியுற்றவர் அல்ல.

உங்கள் கல்விக் கனவு சிதைவதற்கு என்ன வழிவகுத்தது என்பதைப் பகுப்பாய்வு செய்யுங்கள். இது நிதிக் கட்டுப்பாடுகள், தனிப்பட்ட சவால்கள், கல்விச் சிக்கல்கள் அல்லது வெளிப்புறச் சூழ்நிலைகளா? பின்னடைவுக்கான காரணங்களைப் புரிந்து கொள்வது அவற்றை திறம்பட சமாளிக்க உதவும். நண்பர்கள், குடும்பத்தினர், வழிகாட்டிகள் அல்லது ஆலோசகர்களை அணுகத் தயங்க வேண்டாம். அவர்களது மதிப்புமிக்க ஊக்கம் உங்களின் அடுத்த படிகளை வழி நடத்தும் உதவியை வழங்க முடியும். உங்கள் கல்வி இலக்குகளை அடைய மாற்று வழிகளைக் கவனியுங்கள். இது வேறுபட்ட பட்டப்படிப்பைத் தொடரலாம். சில சமயங்களில் எதிர்பாராத வாய்ப்புகள் அல்லது சவால்கள் எழலாம், மேலும் உங்களை மாற்றியமைத்து அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள உதவும். பின்னடைவை எதிர்கொள்ளும்போது விடாமுயற்சி முக்கியமானது. ஒவ்வொரு சவாலும் உங்கள் எதிர்கால முன்னேற்ற முயற்சிகளைத் தெரிவிக்கக்கூடிய மதிப்புமிக்க பாடங்களைக் கற்பிக்க முடியும். உங்கள் சாதனைகள் எவ்வளவு சிறியதாகத் தோன்றினாலும் அவற்றை அங்கீகரித்துக் கொண்டாடுங்கள். வழியில் உங்கள் முன்னேற்றம் மற்றும் சாதனைகளை அங்கீகரிப்பது உங்களின் கல்விப் பயணத்தில் உந்துதலாகவும் கவனம் செலுத்தவும் உதவும்.

எங்கள் முதல் ஐந்து இதழ்களுக்கான ஆதரவுக்கும் கருத்துகளுக்கும் நன்றி. மற்றும் ஆறாவது இதழுக்கான ஆக்கபூர்வமான விமர்சனத்தை எதிர்பார்க்கிறோம். இந்தக் காலாண்டு இதழில் எழுத முதல் படி எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கிறோம். நமது இதழில் வாசகர்களுக்குப் பயன்படும் உங்கள் வாழ்க்கை அனுபவம் மற்றும் கதை, கவிதை, கட்டுரை எழுதி உங்கள் உள்ளார்ந்த திறமையை வெளிக்கொணரவும். உங்கள் தரமான படைப்புகள் வெளியிடப்படும். ஆக்கங்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பு.

- சுப. கிருஸ்ணானந்தன
(Krishnasubram7@gmail.com)

"வளர்"
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
1979 ம் வருட
உயர்தர வகுப்பு மாணவர்
இலக்கிய குழாமின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
யாழ்ப்பாணம்

# 'படித்த' சமூகம்?

## - ஆலகாலன் பக்கம் -

நம்மைச் சுற்றி நடக்கிற வெட்கக்கேடுகளைப் பற்றி எழுத என்ன இருக்கிறது? சூப்பர் சிங்கர் பிள்ளையை, சாமத்திய வீட்டுக் கொண்டாட்டப் பாணியில் வரவேற்றதாக இருக்கட்டும், ஒற்றுமையற்று ஒரு ஊருக்குள் ஒன்பது மரபுத் திங்கள் நடத்துகிற புலப்பாடுகளாக இருக்கட்டும், திரு. லலீசனை, திரு. ஜெயராஜ்ஜை, திரு. ஆறு. திருமுருகனை எதிர்த்துக் கம்பு சுத்துகிற கைங்கரியங்களாக இருக்கட்டும், அல்லது முற்றவெளியில் முறைகேடாக பனைமரங்களில் தொங்குகிற வெளவால் விளையாட்டுக்களாக இருக்கட்டும். எல்லாவற்றிற்கும் எங்கள் சுயவிமர்சனம் என்ன? குற்றம் சொல்வதைக் காட்டிலும், தீர்வுகளை நமக்குள்ளிருந்து தேடுவதே அவசியமானவை.

எப்படி நம்மை, நம் இளைஞர்களை, ஆற்றுப்படுத்துவது? படித்த, பண்பான, ஆளுமையான மனிதர்கள் ஏன் ஒதுங்கிப் போகிறார்கள்? புரவலர்களிடம், ஒரு சமூகத்தை நெறிப்படுத்தப் போதுமான ஆளுமைத் திறன்கள் உள்ளனவா? வெறுமனே ஈழத்தை வியாபாரத் தளமாக்குகிற, வர்த்தக முதலைகளுக்கு ஈழத்தைப் பலிகொடுக்க அனுமதிக்க முடியுமா? கேள்விகளை முன்வைக்கவும், விமர்சனங்களால் நேர்வழிப்படுத்தவும், ஏன் யாரும் துணிகிறார்களில்லை? உங்களில் பாவம் செய்யாதவர்கள் யார்? என்கிற சுய கேள்வியே, எல்லோரையும் மௌனமாக்குகிறதா? கரட், தங்கத்தின் விலை விற்கிறது எனப் புலம்புகிற நிலத்தில், எப்படி கஞ்சாவுக்கு காசு போய்ச் சேர்கிறது? நிலம் எப்படி? ஏன்? புலத்தைக், காசால் சீரழிக்கிறது?

யாழ்ப்பாணத்தின் படித்த சமூகம், தனது சக இளைஞர்கள் திசை மாறிப் போவதை ஏன் கண்டும் காணாமல் இருக்கிறது? யாரும், யாருக்கும் கருத்துச் சொல்லப் போவது ஆபத்தான வீண் சோலி என, நாம் நினைக்கத் தொடங்கி விட்ட போதே, ஒரு தோல்வியடைந்த சமூகமாகி விடுகிறோம். பிற்போக்குத்தனங்களை வசைபாடுகிற முற்போக்காளர்கள், ஆக்கபூர்வமான ஒரு சமூகத்தை உருவாக்குகிறார்களா? ஒரு சுய நிறைவான, ஆளுமையான, தனித்துவமான இனம், ஏன் எதற்கெடுத்தாலும், அடுத்த சமூகத்தைப் பார்த்து அங்கலாய்க்கிறது? அடுத்த சமூகத்தின் அங்கீகாரத்துக்காக, தன்னைத் தாழ்த்திக் கொண்டு வழிகிறது? தனது தனித்துவங்களைக் கரைத்துக் கொண்டு, முகவரிகளைத் தேடுவது நம்மைத் தொலைத்து விடுகிற ஆபத்தான முயற்சியல்லவா!

ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆர்.முத்தையா, த. சரவணமுத்துப்பிள்ளை, பிரமிள், கைலாசபதி போன்ற இன்னும் பலர், தமது தனித்துவமான ஆளுமைத் திறன்களால், ஈழத்தின் சிறப்பை இந்தியா மட்டுமல்ல. உலகமே உற்று நோக்க வைத்தவர்கள். தமிழகத்தை தமது ஆளுமை வளர்ச்சிக்காக பயன்படுத்திக் கொண்ட போதிலும், தமது நிலத்தின் தனித்துவமான அடையாளங்களை அவர்கள் இழந்தவர்களேயல்ல. நமது நிலத்துக்குப் பெருமையும், வளமும் சேர்த்தவர்கள். ஆனால், இன்றைக்கு எங்கள் அடையாளங்களை. மொழியை மிகச் சர்வசாதாரணமாக நாம் இழக்கிறோம். அண்டை நாட்டு மாநிலமான கேரளா கூட, இற்றை வரை இப்படித் தன்னைத் தமிழகத்துக்குத் தாரை வார்த்ததில்லையே! இன்றும் கேரளா, தனது பண்பாட்டிலும் சரி, அரசியலிலும், இலக்கியத்திலும் சரி மிகவும் தனித்துவமானது.

புலம் மிக மோசமாக, தன்னைக் கோடம்பாக்கமாக கருதிக் கொண்டு, சினிமாவுக்கு ஆடித் தீர்க்கிறது. நமது அரசியலோ, வரலாறோ இல்லாத கருப்பொருட்களை கையெடுத்துக் கொண்டு, விளக்கங்கெட்டான் தனமாக நிகழ்ச்சிகளைப் படைக்கிறது. தொலைக்காட்சியும், சினிமாவுமே நம் தனித்துவங்களைச் சிதைக்கிறது. ஆண்டுக்கொரு தையில் மரபுத் திங்கள் என்று கூறிக்கொண்டு, வேட்டியும், சீலையுமாக வந்து நிற்பதோடு மாத்திரம், நம் மரபும், தனித்துவமும், வேரும் காப்பாற்றப்படும் என்று நம்புவதும், நம்ப வைப்பதும் எவ்வளவு பெரிய முட்டாள்த் தனம். யானை, தன் கண்ணில் தானே மண்ணை அள்ளிப் போடுகிற செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளர் வளருமா?

சமூக அக்கறையுடைய இலக்கியச் சஞ்சிகை, என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யலாம்?

எழுதாததைக் கண்டடைந்து, எழுத்தில் கொண்டு வர வேண்டும். இருளுக்குள் இருக்கிற நியாயங்களை வெளிச்சமிட வேண்டும். சிறுபான்மை எனினும், மறுபக்கத்தின் நலிந்த குரலையும் தேடிப் போய் ஆவணப்படுத்த வேண்டும்.
நல்ல வாசகரின் சிந்தனையோட்டத்தையும், தேடலையும் தூண்டி விட வேண்டும். மறைந்து போகிற வேர்களைத் தூர்வாரி விட வேண்டும். சமூகத்துக்கு எல்லாவற்றையும் எடுத்துக் கொடுப்பதல்ல அதன் பணி. தூண்டலைக் கொடுப்பதே அதன் வேலை.

முகப்புத்தகச் சுவருக்கும், ஒரு சஞ்சிகையின் பக்கங்களுக்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். ஒரு படைப்பாளியை வேலை வாங்க வேண்டும். பேசிப் பேசி, கருத்துக்களைச் செறிவாக்க வேண்டும். பண்படுத்த வேண்டும். ஒரு நல்ல நாற்றங்காலாக அந்தச் சஞ்சிகையை வளர்க்க வேண்டும். ஒரு விவசாயியைப் போல, அதன் அறுவடைக்காகக் காத்திருக்க வேண்டும். சமூக அக்கறையுடைய சஞ்சிகை, இயல்பாக விமர்சனங்களை தானாகக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். **சஞ்சிகை, தன்னளவிலேனும் ஒரு கருத்தியக்கமாக இயங்க வேண்டும்.** பேச வேண்டும். விவாதிக்க வேண்டும். எழுத்து ஒரு பொழுது போக்கு விளையாட்டல்ல. அது பொறுப்புமிக்க வெள்ளாமை விதைப்பு.

1. செம்பாத்தாள் யார் ? தென்னமரவாடி எங்கிருக்கு? அந்தக் கதையின் வரலாறு என்ன ?
2. பறையைத் தொழிலாக கொண்டிருந்த ஆதிக் கலைஞர்களிடமிருந்து ஒரு செவ்வி, இன்றைய பறையடிப்புப் பற்றிய, அவர்களின் பார்வை என்ன ?
3. தமிழும், சமயமும் படிக்க, யாழ்ப்பாணத்தில் யாரும் வருகிறார்கள் இல்லையென்ற ஆதங்கம் பற்றிய ஒரு ஆசிரியத் தேடல்
4. ரியூசன் சுமைகள் பற்றிய ஒரு மாணவத் தேடல்
5. புலத்தின் புதிய தலைமுறைகளிடமிருந்து, பழைய தலைமுறைகள் பற்றி வருகிற விமர்சனங்கள் எவை ?

**- பா. சிவனேசன் -**
(பாரிஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நூல் அறிமுகம்

**- சஞ்சயன் செல்வமாணிக்கம்**
(நோர்வே)

புலம்பெயர்ந்த அனைவருக்கும் காலங்கள் பல கடந்த பின்பும் சோற்றுப்பானையின் அடிச்சோற்றைப் போன்று மீதமிருப்பது ஊரின் நினைவுகளே. பந்தியிலிருந்து பாதியில் கலைத்துவிடப்பட்டவனின் பசி அது.

இளமைப்பருவத்தை ஊரில் வாழ்ந்துவிட்டு தங்களின் இருபதுகளில் புலம் பெயர்ந்தவர்களே அதிகம். வந்துவிட்ட புதிய இடத்தில் ஒட்டவோ அல்லது ஊரில் வாழவோ முடியாது அலையும் பல லட்சக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். உடலைப் புலத்திலும் உள்ளத்தை ஊரிலும் இருத்திக்கொண்டு நினைவுகளைத் துணைக்கழைத்தபடி வாழும் பிரகிருதிகள் நாங்கள்.

'கொற்றவை பற்றிக் கூறினேன்' நூல் முழுவதுமே அப்படியான ஒரு மனிதனின் நினைவுகளைக் காட்சிப்படுத்தியிருக்கிறார் அ. இரவி. எழுதியிருக்கிறார் என்றால் அது தவறாகிவிடும். ஒரு திரைப்படத்தின் அழகியலுக்கு ஒப்பதான தகவல்கள், விவரணங்களுடன் மனதை அப்படியே கட்டிப்போடும் மாய எழுத்து. வாழ்ந்துவிட்ட ஒருவர் கதை சொல்லச் சொல்ல நான் கேட்டுக்கொண்டிருக்கும் பிரமையுடன்தான் வாசித்தேன்.

பதின்மக் காலத்திலிருந்து ஆளாகிப் பின்பொருநாள் இலங்கையைவிட்டுப் புலம்பெயரும் காலம்வரையில் நடந்த அனைத்துச் சம்பவங்களையும் அதன் வாசனையும் சுவையும் சுவராசியமும் குன்றாது எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சம்பவத்துடனும் 1970 – 1980களில் ஊரில் வாழ்ந்தவர்கள் தம்மை இனங்காணலாம். வாசகனை எழுத்துடன் இனங்காணவைத்து ஒன்றிப்போகவைத்திருப்பதே நூலின் வெற்றி. எழுதியவரின் நினைவாற்றலையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

கதையை இப்படிச் சொல்லிவிடலாம். குடும்ப உறவுகள், ஊர், கோயில், உணவு–முறைகள், சுற்றுலா, பாடசாலை, ஆசிரியர்கள், நண்பர்கள், குறும்புகள், நண்பர்கள், விளையாட்டு, கொண்டாட்டங்கள், காதல், விடுதலைப்போராட்டம் என்று வாழ்வியலின் அனைத்துப் பாகங்களையும் அனுபவித்த ஒருவனின் நினைவுப் பகிர்வு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்காபுரியின் முழுச் சோகத்தையும் இறுதி அத்தியாயத்தில் காணலாம். ஹாஜியார், உம்மா, சிங்களவர்களான நந்தா, பெரேரா, திஸ்ஸ, அனுர, பொன்சேகா அங்கிள் போன்றவர்கள் இருக்கும்வரை இலங்கையில் நல்லிணக்கத்திற்கான சிறு நம்பிக்கையாவது இருக்கும் என்பதை அவர்கள் வந்துபோகும் அத்தியாயங்கள் உணர்த்துகின்றன. இலக்கியத்தின் உன்னதமே மனிதர்களுக்கு நம்பிக்கையை உருவாக்குவதல்லவா!

எழுத்துக்களின் ஊடாகத்தானே நாம் பழங்காலத்திலிருந்து அண்மைக் காலம் வரை மனிதர்களின் வாழ்வியலை அறிந்துகொண்டோம். அதுபோல என்றோ ஒரு நாள் எதிர்காலத் தலைமுறையினர் இந்தப் புத்தகத்தினை வாசிக்கும்போது இப்படியும் ஒரு காலம் ஈழத்தமிழரிடத்தில் இருந்தது என்று புரிந்துகொள்ளவும் உதவும் ஒருவித ஆவணமாகவும் இந்த நூலை நோக்கலாம்.

அருமையான வாசிப்பனுபவம். விருப்பமான இனிப்பை ஒளித்து ஒளித்துத் கொஞ்சம் கொஞ்சமாகத் தின்பதுபோல் வாசித்தேன்.

அ. இரவி தனித்துவமான கதைசொல்லி என்பதில் ஐயமில்லை.

முன்னுரையில் 'இது புனைவோ' என்று யாரும் கேட்டால் 'ஓம்' என்றும், சொல்வேன் 'இல்லை' என்றும் சொல்வேன் என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும், பெருமளவு அபுனைவும் குறைவாகப் புனைவும் கலந்து பிசையப்பட்ட கதை இது என்பதே எனது புரிதல்.

அ. இரவியுடன் நெருக்கமாக வாழ்ந்தவர்களுக்கு, நண்பர்களுக்கு, நண்பர்களின் நண்பர்களுக்கு அவர் எழுதிய பல கதைமாந்தர்களை இலகுவாக அடையாளம் காண முடியும் என்பதில் ஐயமில்லை. அதிலும் சொந்தப்பெயரிலும் உறவுமுறையிலும் செல்லப்பெயர்களிலும் உலாவவிடப்பட்டிருக்கும் மனிதர்களை அவர்கள் யார் யார் என்று தெளிவாக உணர முடி-கிறது. அதிலும் மிக முக்கியமாக, எம்முடன் வாழும், வாழ்ந்து முடித்த நெருக்கமான மனித மனங்களை மற்றையவர்கள் அடையாளம் காணும்படி பகிரும்போதும் விபரிக்கும்போதும் கத்திமேல் நடக்கும் அவதானம் தேவை.

கதைமாந்தர்களின் பெயரையேனும் மாற்றிவிட்டிருப்பின் நான் இதை எழுதியிருக்கமாட்டேன். நானும் அந்தப் பாத்திரம் யார் எனப் புரிந்திருக்க மாட்டேன்.

தனதுபடைப்பில்கதைசொல்லிநேரடியாகவோமறைமுகமாகவோதொடர்புடையமாந்தர்களின் நுண்ணுணர்வுகளைக் கையிலேந்தியபடி கதைசொல்லவும், மனங்கள் காயப்படாதவாறு தனது படைப்பை உருவாக்கவும், வார்த்தைகளின் தெரிவில் மிகுந்த கவனத்துடன் அவை தவறாகப் புரியப்படுமா என்ற நெகிழ்ச்சித் தன்மையிலும் அதீத கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் மட்டும் அனுபவம் மிக்க எழுத்தாளர் ஒரு இடத்தில் சற்றுச் சறுக்கியிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

எப்போதும் படைப்புக்களைவிட மனித மனங்கள் உன்னதமானவையல்லவா?

நூலை வாசித்து முடித்தபோது அது கிளறிவிட்ட நினைவுகளின் வாசனை எனது ஆழ்மன விருப்பம் என்னவென்பதை புரியவைத்திருக்கிறது மட்டுமல்லாது "உனக்குப் பிடித்த வாழ்க்கையையா வாழ்கிறாய்? என்ற பெருங் கேள்வியையும் எழுப்பியிருக்கிறது.

வாசிப்பு சிந்தனையைத் தூண்டவேண்டும். அதையும் இந்நாவல் எனக்குச் செய்திருக்கிறது.

அலாதியான வாசிப்பனுபவமும், அது தந்த அகக் கிளர்ச்சியும் நீண்ட காலத்திற்கு நினைவில் நிற்கும்.

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாநிதி. த. கலாமணி**
**அவர்களின் மறைவு குறித்த**
**ஒரு நினைவோட்டம்**

# பயணம் ஒரு நாள் முடியும்

**– கோகிலா மகேந்திரன்**

அல்வாயில் தம்பியையா பர்வதம் தம்பதிகளின் தவப்பிள்ளையாக 12.11.1951இல் பிறந்தவர் கலாமணி. தேவரையாளி சைவ வித்தியாசாலையில் ஆரம்பித்த இவரது கல்வி அவுஸ்திரேலிய வுலோங்கொங் பல்கலைக்கழகக் கல்வியியல் கலாநிதிப் பட்டம் வரை நீடித்துப் பரந்தது.

1974இல் தாயகம் சஞ்சிகையில் இவரது முதல் சிறுகதை பிரசுரமானது. சிறுகதை, கவிதை, நாடகம் , இலக்கிய விமர்சனம் என்று பல தளங்களில் விரிவு கண்ட இவரது கலைத் தேடலில் சுமார் பன்னிரண்டு நூல்களும் கல்வியியல், பல்துறைக்கட்டுரைகள் போன்றவற்றில் ஆறுக்கு மேற்பட்ட நூல்களும் இதுவரை வெளிவந்துள்ளன .இசை நாடகங்களில் விதந்து பாராட்டத் தக்க ஆளுமை கொண்ட இவர் 'மானுடம் என்பது புல்லோ' முதல் ஆறு நவீன நாடகங்களையும் நெறியாள்கை செய்துள்ளார் . 'விட்டில் பூச்சி' முதலிய நவீன நாடகங்களிலும் 'ஒப்பிலாமணியே' என்ற குறும்படத்திலும் நடிகராக மிளிர்ந்துள்ளார். காத்தவராயன் போன்ற கூத்துக்களும் இவருக்குக் கை-வரும். இவரது இசைநாடகப் பாடல்களும் கூத்துப் பாடல்களும் இறுவட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
பல தரப்பட்ட கருப்பொருள்களைக் கொண்ட ஐந்து நூல்களின் பதிப்பாசிரியர் என்பதற்கு மேல் ஜீவநதி சஞ்சிகையின் பதிப்பாசிரியராக இவரது பணி சரித்திரத்தில் நிற்கும்.

இவர் அண்ணாவியம் செய்து நடித்த பூதத்தம்பி இசை நாடகம் மட்டும் சுமார் அறுபது மேடைகள் கண்டது . அவுஸ்திரேலியாவில் இவர் நெறியாள்கை செய்த நாடகச் சிறப்பு அங்கே பேசப்படுகிறது. தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம், சோலைக்குயில் அவைக்காற்றுக் களம் ஆகிய எமது நிறுவன நிகழ்வுகளில் ஆரம்பகாலம் தொட்டுப் பலமுறை பங்கு பற்றியிருக்கிறார். யாழ். பல்கலைக் கழகத்தில் சட்டத் துறைத் தலைவராகவும் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணி செய்த இவருக்கு 2023ஆம் ஆண்டு சோலைக்குயில் அவைக்காற்றுக்களம் 'விழிசைச் சிவம் இலக்கிய விருது' வழங்கிக் கௌரவம் செய்தது.
கல்வி ஒரு கடல். கலை மரபு வழியில் கடத்தப்பட்டுத் தாமும் தேடிக்கொள்ளும் பொக்கிஷம். நல்ல பண்பு என்பது ஒரு வரம். இந்த மூன்றும் ஒருங்கே அமைந்து காணப்படும் மனிதர்கள் மிகக் குறைவு. அப்படி வாழ்ந்த ஒருவரின் உலக வாழ்வுப் பயணம் 9.2.2024 இல் நிறைவுக்கு வந்தது. காலத்தை வென்று காவியமாவார் என எதிர்பார்க்கலாம் .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# சிறை

**- அகரன் -**

(பிரான்ஸ்)

நான் வாசல் மணியை அடித்த சில நொடிகளில் வீட்டு வளவுக்குள் இருந்து 'பண்டி இஞ்சால வாடி' என்ற பெண் குரல் வந்தது.

தொடர்ந்து அங்கே நிற்பதா அல்லது மெதுவாக இடத்தை விட்டு நழுவி விடுவோமா என்று நினைத்தபோது 'பண்டி போடி அங்கால' என்ற குரல் நெருங்கியது.

வாசல் கதவில் 'Attention au chien' ( நாய் கவனம்) என்ற பிரஞ்சு எழுத்தோடு வாட்ட சாட்டமான விலங்கின் படத்தை யாரோ வரைய முயன்றிருக்கிறார்கள்.

இந்த வீட்டில் நாய் இருக்குமா ? அல்லது பண்டி இருக்குமா ? என்ற சந்தேகம் வலுத்தபடி இருந்தது. இது பயமுறுத்தும் உத்தியாக இருக்கலாம் என்று நினைத்த போது உள்ளிருந்து வந்த குரல் படலையில் மாட்டி இருந்த படத்தை விட அச்சுறுத்தலைச் செய்தது. இப்படியான பெண்குரலை இதுவரை நான் கேட்டதில்லை.

கதவுக்கு நேராக நிற்காமல் லொறியே மரங்களால் மறைக்கப்பட்ட வேலிக்குள் என்னை மறைத்துவிட்டு நின்றேன். படலைக்கு வந்த அம்மணி அதற்கு மேலாக தன் தலையை மட்டும் வெளியேற்றி மரங்கொத்தி அங்குமிங்கும் பார்ப்பதுபோல் பார்த்தார். மறைந்து நின்ற என்னை கண்டுவிட்டு 'யார் இஞ்சால வாங்கோ' என்றார்.

வந்த விபரத்தை சொன்னேன்.

'வாருங்கோ தம்பி . இந்தப் பண்டி நிக்கிறாள் கவனம்.' என்று என்னை தன் உடம்பால் மறைத்தபடி வீட்டுக்குள் அழைத்துச்சென்றாள். கதவைச் சாத்தியபின் 'மேல போடி என்ன பார்வை ?' என்றதும் எட்டிப் பார்த்தேன் பன்றி ஒன்றின் பின் தோற்றம் போல் கொழுத்த நாய் படியேறியபடி இருந்தது. அது நான்கு படிகள் ஏறி விட்டு திரும்பி என் முழு உடலையும் பார்த்து உ...ர்..ம் என்றது. அதன் கண்கள் நீல நிறத்தில் இருந்தன. அதன் வாய் கழுத்து வரை நீண்டிருந்தது. பன்றியும் நாயும் சேர்ந்த முகத்தோற்றம். கன்னச் சதைகள் தொங்கிக் கொண்டிருந்தன. 'என்ன பார்வை? போடி' என்று அந்த அம்மையார் கத்தியதும் மனுசர் படியேறிப்போவதுபோல் அது மேல் மாடிக்குப் போனது.

'இதுல இரும் தம்பி. இவர் உங்கால புலோஞ்சறிக்கு பாண் வாங்க போயிட்டார். வந்துடுவார்' என்றார்.

எனக்குள் இதயம் நரம்புகளை விட்டு போய் விடுவேன் என்பது போல் துள்ளி குதித்தபடி இருந்தது.

'தம்பி நீர் ஆமிக்கு போப்போறீரோ ? இவர் அது நல்லது எண்டுதான் சொல்லுவார். நீர் பலதும், பத்தையும் யோசித்துத்தான் முடிவை எடுக்கோணும் கண்டீரோ' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தலையை ஆட்டினேன். அந்தக் குரல் கட்டளை இட்டே பழக்கப்பட்டு இருந்தது. நான் முன் பற்கள் மட்டும் தெரியும்படி சிரித்தேன். பேசும்போது அவர் கண்களும் சேர்ந்து அசைந்தது. தன் அளவை விட அளவு கூடிய மேலாடை அணிந்து தன்னை அலங்கரித்திருந்தார். நாயின் வேட்டைப்பற்கள் போல் அவர் பற்கள் நீண்டும் வெண்மையாகவும் இருந்தன. இதனால் எப்போதும் சிரிக்கும் தோற்றத்தை முகம் தந்தது.

நான் வவுனிக்குளம், மல்லாவி, வவுனியா, கிளிநொச்சி, கல்முனை, சென்னை, மலேசியா என்று பல இடங்களில் பல தமிழ் வீட்டு வாசல்களை மிதித்துள்ளேன். ஒரு வீட்டிலும் இப்படி வரவேற்பு கிடைத்ததில்லை. மேற்குப் பாரிசில் நோர்மண்டிக்கு செல்லும் பாதையில் 'இலங்கூர்' என்ற நகரில் இப்படி ஒரு வரவேற்பு இத்தனை ஆண்டுகளாக காத்திருந்தது.

தன் மூத்த சந்ததி வேட்டையாட முடிந்த விலங்கின் பெயரால் தன்னை அழைப்பதை இட்டு அந்த நாய்க்கு எந்த மனச்சங்கடமும் இல்லை. விலங்குகளிடம் பசிக்கான வேட்கையைத்தவிர எந்த ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் இருக்கலாம்.

என் முகத்தை ஒருமுறை அவதானித்துவிட்டு 'தம்பி நான் கொழும்பு கொச்சிக் கடையில் வளர்ந்தனான். அப்பர் இல்லாம எங்கள அம்மா வளர்த்தவா. அப்பர் இலங்கை ஆமீல இருந்தவர். எண்பத்தி நாலுல அவருக்கு பாம்பு கடிச்சு இறந்திட்டார் என்றுதான் ஆமீல சொன்னாங்கள். உண்மையாகவும் இருக்கலாம். அதால என்ர தமிழ் வித்தியாசமா இருக்கும். நீர் மனச குழப்பாதீர். எதையும் வெளிப்படையா கதைப்பன். இங்கே இவன கட்டினதால தமிழாக்களோட பழகேலாம போட்டுது.' என்றுவிட்டு பெரிய சிரிப்பை வெளிப்படையாக தந்தார். அவருக்கு ஒரு பல்லுக்கூட சூத்தை இல்லை என்பதை யாரும் கண்டுபிடித்திட முடிந்த சிரிப்பு தேங்காய் உடைந்ததும் உடைத்தவரைப் பார்த்து தேங்காய் சிரிக்குமே அப்படியான சிரிப்பு.

இங்க நீங்கள் எங்க இருந்தனிங்கள் ?

'நாங்கள் தெற்கு பிரான்சில ஓபாய்ன் என்ற இடத்தில இருபத்தைஞ்சு வருசமா இருந்தம். அருமையான இடம்.' என்று ஐஸ் பழம் சாப்பிட்டதுபோல் வாயை உறிஞ்சினார்.

வீட்டின் சுவர்களில் 'சிவசோதி பாஸ்கரன் LÉGION ÉTRANGÈRE' என்ற எழுத்தில் பல வகைகளில் இராணுவ புகைப்படங்கள் இருந்தன. பிரான்சின் முன்னாள் அதிபர் சிறாக்குடன் அருகே நிற்கும் புகைப்படம் கவர்ச்சியுடன் பெரிய விளம்பரம் போல் இருந்தது.

ஓய்வு பெற்ற இந்த இராணுவ அதிகாரியிடம் வாழ்விட அனுமதி அற்ற ஒருவர் எப்படி பிரெஞ்சு இராணுவத்தில் இணையலாம் என்று அறிவதற்காகவே இத்தனை தூரம் பயணம் செய்து காத்திருந்தேன்.

'நாய்க்குப் பின்னால் சென்ற அம்மணி மேல் மாடியில் அதை அதன் இடத்தில் படுக்குமாறும், கீழே வர வேண்டாம் என்றும் அறிவிக்கும் ஒலி படியால் நடந்து வந்து என்னை அடைந்தபடி இருந்தது .

பிரெஞ்சுப்பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி ஜெனரல் பாஸ்கரன் அங்கே வந்தார். இரண்டு நீள-மான பிரெஞ்சுப் பாண் தடிகளை கை இடுக்கில் வைத்தபடியும் அதன் முனைகளை பிய்த்து ருசித்தபடியும் இரண்டு காரியங்களை ஒரேநேரத்தில் அவர் வாய் செயலாற்றியது.

இராணுவ அதிகாரி உயரமாக இருப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் எதிர்பார்ப்பை எதிர் திசையில் மாற்றியவராக அங்கே வந்தார். ஆனால் உடல் கருங்காலிக்குரிய தகுதியில் இருந்தது. கன்ன மயிர்கள் தலையில் காலக்கோடுகளை வரைய ஆரம்பித்திருந்தது.

'டேய் உன்னைத் தேடி இந்த தம்பி வந்திருக்கிறார்'.

நான் அப்போது அந்த அம்மணியை பார்த்தேன். அவர் எந்த சஞ்சலமும் இன்றி அப்படித்தான் கூறினார். எனது முக மாற்றத்தை அறிந்த பாஸ்கரன் என் அருகே வந்து

'வணக்கம் நான் பாஸ்கரன். நீங்கள் பாரீஸ் அம்பிகைபாலன் அனுப்பின ராஜீவன் அப்படித்தானே' என்றார்.

'ஓமோம்' என்றபடி நான் எழுந்திருந்து கையை நீட்டினேன். அவர் தன் ராணுவ பலத்தை என் கையில் நிரூபித்தார். விலை உயர்ந்த வாசனை ஊட்டியால் அவர் வைத்திருந்த காற்று என் சுவாசப்பையில் இறங்கி இயற்கையை துரத்தியடித்தது.

அந்தவாசனைத்திரவியம் TOMFOOD வகைகக்குரியது என்பதை மூக்கு எனக்கு சொல்லிவிட்டது. 250 மில்லி லீட்டர் 650 யூரோக்களுக்கு விற்கப்படுவது. சோப்ரா கடையில் பரிசீலித்து வியந்தபோது உடலெல்லாம் ஒப்பனைகளால் ஆன பிரெஞ்சு அழகி என்னருகே வந்து 'இது சிற்றின்பத்திற்கும், ஆன்மாவுக்கும் சிறந்தது. வாசனை மரங்களின் வேர்களில் உருவானது' என்று என்னிடம் பணம் பறிக்க முற்பட்டபோது அழகுப்பெண்ணிடம் அவமானப்பட்ட நினைவை அந்த வாசனை தந்தது. இலவசமாக பரிசீலித்த அதன் சுக நாற்றம் பலமாதங்களாக என் சட்டையில் தங்கி இருந்தது.

பாஸ்கரன் 1987 இல் இருந்து LÉGION ÉTRANGÈRE என்ற ராணுவத்தில் முப்பது ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கிறார். இந்தச் செய்தியை ஏற்கனவே அறிந்திருந்தேன். அந்த ராணுவத்தில் இணைவதற்கு வதிவிட அனுமதிப் பத்திரம் அவசியம் இல்லை. என்பதுதான் என்னை அவர் வீட்டு வாசலில் நிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கிறது.

ஒரு நாட்டில் வாழ்வதற்கான அனுமதியை பெறுவதற்கு உயிரையும் கொடுக்கும் நிலை இதுதான். பிரான்சில் இரண்டு வருடமாக வேலையுமற்று, வாழ்வதற்கான அனுமதியுமற்று மாபெரும் இருட்டில் இருந்து வெளியேற அந்த ராணுவத்தில் இணைந்து விடுவது என்ற முடிவை எடுத்திருந்தேன்.

'தம்பி இவ அப்படித்தான் கதைப்பா. வீட்டின் இராணுவ அதிகாரி அவா தான்'. என்று விட்டு தன் மனைவியைப் பார்த்தார்.

'சரி சரி புகழ வெளிக்கிட்டுட்டான். உன்ன சிகரெட் பத்தினா, பத்து நிமிஷத்துக்கு பிறகெல்லோ வீட்டுக்குள்ள வரச் சொன்னான் மணக்குது சி..' என்று முகம் சுழித்தார்.

'நீங்கள் சொல்லுங்கோ தம்பி முதலில் என்ன குடிக்கிறீங்கள் ? இவன் கஃபே தான் குடிப்பான்.' என்று கணவனை பார்த்து கூறினார்.

'இந்த மனிசி வழமையாக இப்படித்தானோ ? மனுசன டேய்..பிடேய் என்று கதைக்கிறா. நாயை பண்டி எண்டு கூப்பிடுறா..., என்னடா இது கிளிச கெட்ட உறவாய் இருக்குது' என்று நான் மனசுக்குள் நினைத்ததை பாஸ்கரன் இனம் கண்டுவிட்டார்.

'தம்பி வீட்டில அவ அப்படித்தான் கதைக்கிறவா. நீர் ஒன்றும் யோசியாதையும். கோவம் வந்தா நீங்கள்– நாங்கள் என்று கதைப்பா. இந்த வருத்தத்துக்கு இப்ப குழுசை போட்டுக் கொண்டு இருக்கிறா' என்றார். அப்போது அவர் முகத்தை அசையாமல் வைத்துக்கொண்டார்.

'இங்க பாரடா தம்பி ! இராணுவ அதிகாரி ஜோக் அடிக்கிறான்' என்று அம்மணி சிரித்தார்.

அப்போதுதான் நான் ஒரு இயல்புக்கு வந்தேன். எதிரே இருப்பவர்கள் என்ன 'இயங்கியலில் இயங்குகிறார்கள்' என்பதை அறிவதற்கே காலம் போய்விடுகிறது. மூவருக்கும் கஃபேயை பாஸ்கரன் எடுத்து வந்தார். தமிழின் ஆயுத எழுத்துப் போல் என்னை நோக்கி அவர்கள் இருந்தார்கள். அல்லது அவர்களை நோக்கி நான் இருந்தேன்.

'இந்த ஆமீல சேர்வதற்கு வீசா தேவை இல்லையோ ? எனக்கு வடிவா ஒருக்கா சொல்லுவீங்களோ ?'

'தம்பி இது வெளிநாட்டுக்காரருக்கான பிரெஞ்சு ராணுவம். இதில் உலகின் எந்த பகுதியை சேர்ந்தவர்களும் இணைய முடியும். நீங்கள் எந்த நாட்டுக்காரன் என்பதை மட்டும் உறுதிப்படுத்த வேண்டும். நீங்கள் இணைந்தால் ஐந்து, பத்து, பதினைந்து வருட ஒப்பந்தம் உண்டு. ஐந்து வருடத்தில் பிரெஞ்சு குடிமகனாக்கப்படுவீர்கள் கண்டீரோ !

ஆனா, உலகின் கடுமையான பயிற்சியை வழங்கும் ராணுவம் இது என்று சொல்லினம். அதனால தாங்கி நின்று பிடிக்க கற்றுக் கொள்ளும்.'

'என்னால நம்ப ஏலாமல் இருக்கு. விசா இல்லாமல் எடுப்பாங்களோ ?'

'தம்பி நான் 1987ல் இங்க வந்து ஐந்தாவது நாள் ஒபாய்ன் என்ற இடத்தில் போய் இந்த ராணுவத்தில் இணைந்தனான். நான் அகதி அடைக்கலம் கேட்கேல்லை கண்டீரோ. அப்ப நான் நுழையேக்க என்னிடம் பாஸ்போர்ட் இல்ல. இப்ப என்னட்ட ஒரு நாடே இருக்குது.

இந்த ஆமியை பிரான்சின்ர கடைசி மன்னரான முதலாம் லூயி பிலிப் 1831 ஆரம்பித்தார். இவரின்ர காலத்திலும் புரட்சி பரிசில் வெடிக்க 'மக்களின் குருதித்தொட்டியில் குளிக்கக் கூடாது' என்று மன்னர் ஐக்கிய இராச்சியம் சென்றுவிட்டார். பின்பு இரண்டு வருடத்தில் அங்கேயே இறந்தும் போனார். இராச்சியம் இழந்தவர்கள் நீண்டநாள் வாழ முடியாது கண்டீரோ !

நெப்போலியனால இணைக்கப்பட்ட பல நாட்டு வீரர்களுக்கும் பிரெஞ்சு வீரர்களுக்கும் அப்பப்போ குழப்பங்கள் வந்தவண்ணம் இருந்தது. பிரான்சுக்காக போராடும் வீரர்களுக்கு கௌரவம் கொடுக்கிறதும் அவர்களை முழுமையாக இந்த அரசுக்குக்குரியவர்களாக்குவதும் பிலிப்பின் யோசனை யாக இருந்தது.

பிறகு உலக யுத்த காலங்களில் பிரெஞ்சு நாட்டில் சிறைக்கைதிகளுக்கு விடுதலை வாய்ப்புக் கொடுத்தார்கள். ராணுவத்தில் இணைத்து சேவையாற்றுவோருக்கும் 'விடுதலை' கொடுத்தார்கள். ஐம்பதாயிரம் கைதிகளை இந்த ராணுவத்தில் சேர்த்துக்கொண்டார்கள்.

பிரான்ஸ் இந்த இராணுவத்தை அதிரடிப்படை போல பாவித்தது. வெளிநாட்டினர் இந்த நாட்டின் விடுதலைக்கு உதவினதால இப்பவும் இந்த ராணுவத்தை வைத்திருக்கிறார்கள். எங்கட சின்னம் ஏழு தீக்கொழுந்துகள். ஏழு கடலை சேர்ந்தவரும் இதில் இருக்கிறார்கள். புரிஞ்சுதா !'

'தம்பிக்கு ஏன்டா இந்த வண்டவாளமெல்லாம் ? இப்ப போறது நல்லதோ ? அல்லது இஞ்ச இருந்து வீசா எடுக்க வழி பார்க்கிறது நல்லதோ ? எண்டு சொல்லன்.'

அப்போது 'பண்டி' அங்கே வந்தாள். அதை நோக்கி அம்மணி கொடிய சொற்களால் திட்டினார். 'அலே வசி.. வசி' என்று பிரஞ்சு சொற்களாலும் அதட்டினார். அது என்னை முறைத்துப் பார்த்தபடி பாஸ்கரனின் கால்கள் ஓரமாய் சென்று பின் பகுதியை நுழைத்தபடி அம்மணியை முறைத்துப் பார்த்தது.

'கலா விடும் ! அது நிக்கட்டும். அது ஒண்டும் செய்யாது' என்றார்.'

'சும்மா இருடா. இப்படி சொல்லித்தான் நாசமறுத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரன் முழியையும் ஆளையும்' என்று ஒரு மனிதரை திட்டுவது போலவே திட்டினார்.

'இந்த நாய்க்கு பெயரே பண்டிதானோ ? ' என்றேன்.

'தம்பி ! இவள் மூஞ்சியை பாவமா வைச்சிருக்கிறாள் பாருங்கோ. அவ்வளவும் நடிப்பு. 'இவளின்ர' திமிரால இவளின்ர காதலனுக்கு மரணதண்டனை கொடுத்து என்ர புருசனின்ரயும், மகனின்ர உயிரையுமெல்லோ பறிக்கப் பாத்தவள் ஆட்டக்காறி !' என்றார்.

மனைவி தன்னுடைய வாய்ப்பை தட்டிப் பறிப்பதை உணர்ந்து அவசரமாக பாஸ்கரன் பேச ஆரம்பித்தார்.

'இவள் Staffordshire Terrier American இனத்தைச் சேர்ந்தவள். இவளின் பரம்பரையினர் அமெரிக்க பெரும் பண்ணைகளில் மாடுகளை மேய்ப்பதற்கு பழக்கப்பட்டவர்கள். அறிவிலும் ஞாபக சக்தியிலும் நம்பிக்கையிலும் மோப்ப குணத்திலும் வல்லமை வாய்ந்த இனம் இது. தனது நம்பிக்கை பெற்றவனின் ஆபத்தை தன் உயிரைக் கொடுத்தும் நீக்கவல்லது. இவளை என்னுடன் லீயியோன் ஆமியில் இருந்த மார்சல் பரிசாகத் தந்தவர்.

அவர் மெக்சிகோவில் இருந்து *1988* ஆம் ஆண்டு ஆமீல சேர்ந்தவர். எங்கட மகனுக்கு 'இவள' பிடிச்சு போக இதை எனக்கு தந்தவர். கலாவுக்கு அப்பவே இவளை பிடிக்கேல்ல. பிறகு அவாவோட நெருக்கமாகீட்டாள். இப்பயும் இவாவுக்கு இவளை பிடிக்கேல்ல. ஒரு வீட்டில இரண்டு பெண்கள் அழகாய் இருந்தா பிரச்சனை தானே ?'

'போடா..போ..உன்ர விசர்கதைய விட்டுட்டு. பாருங்க தம்பி என்னையும் நாய் நிலைக்கு கொண்டு போட்டான். இவள் நாசம் கட்டின கதையை சொல்லுறன் கோளுங்கோ !

இரண்டு வருசத்துக்கு முன்னம் மார்சல் ஒரு மாத லீவுக்கு மெக்சிகோ போப்போறன் எண்டு தன்ர Dog Bordeaux என்ற தன்னுடைய 'பெடியனை' கொண்டுவந்து விட்டுட்டு போயிட்டார். அவனுக்கு இவளோட ஒரே லவ்வு. ஆனா இவள் அவன தொட விடமாட்டாள். அவன் ஈரான் சாதி. இவள் அமெரிக்காகாரி. அவன்ர நிறை 70 கிலோ வரை வரும். அவன் கிட்ட வந்தா இவள் சீறிப்போட்டு போவாள். அவன் எவ்வளவோ றை பண்ணியும் இவள் விடேல்ல. அண்டைக்கு பின்னேரம் ஆறுமணிக்கு மார்சல் வந்து கூட்டீற்று போறதெண்டு சொன்னவர். நான் மரக்கறி வேண்ட ஓசானுக்கு போயிட்டன். மகனுக்கு யூடோ கிளாஸ் இருந்தது. பாஸ்கரன் மகன கூட்டீட்டுப்போக காறில கிளம்பினவர். அப்பதான் மகன் 'இவளோட' விளையாட... 'அவன்' மகனின்ர கையைப்பிடித்து குதறிப்.....

'இல்ல..கலா..இல்ல..பொறும் நான் சொல்லுறன்'

...போட்டான். இந்தாள்..

'இல்ல நான் சொல்லுறத கேள் தம்பி.'

(யாருடைய முகத்தை பார்ப்பது என்ற குழப்பம் என்னை ஒரு அவஸ்தைக்குள் வைத்திருந்தது)

'மகன் காறுக்க வந்து ஏறீட்டுத்தான் 'papa attend moi , j'ai oublié mon sac' (பொறுங்கோ அப்பா, என்ர பையை மறந்திட்டன்) என்றான். 'vas-y vite' (கெதியா வா) என்றுவிட்டு காறில இருந்தன். போனவனை காணவில்லை என்று கேற்றுக்க போனா, அங்க மார்சலின்ர நாய் மகன்ர கைய பிடிச்சு குதறி மணிக்கட்டை விடாமல் பிடித்தபடி வேலியோடு அவனை முடக்கி வைத்திருந்தது. வீட்டு வாசல் எல்லாம் ரத்தம். மகன் 'அப்பா மோசா என்னை கடிச்சிட்டான்' என்றான். நாய் வெறிகொண்டு பிள்ளேன்ர கைய உலுப்புது. அருகே கண்ணில் பட்ட தும்புத்தடியால நாயின்ர பிரடீல அடிச்சன். மகன விட்டிட்டு தும்புத்தடிய கடிச்சு தும்பாக்கிப் போட்டு என்மீது பாய்ந்தது. அதன் நெஞ்சை தாக்க முயன்றன். அது என் இடது கையை கவ்வி உலுப்பியதும் தசை நார் கிழிந்து தொங்கியது. என்னில மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. ரத்தம் சீறி அடிக்குது.

மகன் தன்ர கைய பிடித்தபடி 'லெஸ்..மோசா..' (விடு மோசா) எண்டு கத்தவும் என்னை விட்டிட்டு மீண்டும் மகன்ர கைய பிடிச்சிட்டு. 'அப்பா நீங்க போங்க... ' எண்டு மகன் கத்துறான். நான் ஒற்றை கையால ஏதும் செய்வோம் எண்டு பார்த்தா மகன் 'வளவுக்கு வெளியால போங்க' எண்டு கத்துறான். மகனை விட்டிட்டு எப்படிப்போறது ? மகன் என்னைப்பிடித்து தள்ளிவிட நான் கேற்றடீல விழுந்து மயங்கீட்டன்.

அதற்கிடையில் அம்மணி கலா குறுக்கிட்டார்.

'இவரின்ர மணிக்கட்டுக்கும் முழங்கையுக்கும் இடையிலஇருக்கிற சதை பாதியாப்போட்டுது. முன் வளவுக்காறர் போலீச கூப்பிட்டு போலீஸ் வந்திட்டுது. அவங்கள் உள்ள போக பயத்தில நிக்கிறாங்கள். என்னவெண்டா, மகனையும், நாயையும் காணேல்ல. மகன் நாயை அப்படியே கழிவறைக்குள்ள கொண்டுபோய் அங்க இருந்த தண்ணீர் பைப்பால அதுன்ர முகத்தில அடிச்சதும் மகனின்ர கைய விட்டிட்டு. ஆனால் மகனை அறைய விட்டு வெளியேறாமல் வைச்சிருக்கு. இது போலீசுக்கு தெரியேல்ல.

அப்பதான் நான் கடையில் இருந்து வாறன். வீட்டைச்சுற்றி போலீஸ், அம்புலன்ஸ். வீட்ட நெருங்க பயம் பிடிச்சிட்டு. என்ன அங்க விடமாட்டம் எண்டு அவங்கள் தடுக்கிறாங்கள். நான் தான் அந்த வீட்டுக்காரி எண்டு கத்துறன். அவங்கள் 'வாயை மூடு மடம் !' எண்டு அம்புலன்சுக்க என்ன கொண்டுபோனா... இவர் பேச்சற்று ரத்த வெள்ளத்தில் கிடக்கிறார்.

பிறகு போலீஸ் drone ஒண்ட வீட்டுக்குள் அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் இருக்கும் நிலையை அறிந்து. விலங்குகளைக் கையாளும் போலீஸ் வந்து வலைச்சூடு செய்துதான் மகனை மீட்டவை. இரண்டு நாய்களையும் கைது செய்திட்டினம்.

மகனை திறாப் கொஸ்பிற்றல்லையும், இவரை பெர்சி ராணுவ கொஸ்பிற்றல்லையும் வைத்து சிகிச்சை நடந்தது. பாஸ்கரன், தம்பிக்கு ஒருக்கா கையக் காட்டன்.'

அவருடைய இடது கை பள்ளமும் மேடுமாகக் கிடந்தது. அவரது வரிசையான பற்கள் வெளித்தெரிய வலது கையால் தடவிக் கொண்டார்.

அருகே இருந்த அம்மணி கலா ஓடிவந்து அவருக்கு கன்னத்தை வருடி '30 வருடமாக ஆமீல இருந்தவனுக்கு ஒன்றும் நடக்கவில்லை. நாய் கடிச்சு கஷ்ரப்பட்டுட்டான்' என்று தன் முகத்தை மறுபக்கம் பார்த்து உள்ளங்கையால் கண்களை துடைத்துக் கொண்டார்.

'சும்மா இரும் கலா' உம்ம இந்தத் தம்பி என்ன நினைக்கும் ?

ஒரு சிறிய மௌனம் அங்கு நின்றது.

அப்ப கடிச்ச நாய்க்கு என்ன நடந்தது ? (இந்தக் கேள்வி மோசமானது. ஆர்வக்கோளாறில் கேட்கப்பட்டது.)

'நாய்களுக்கான ஜெயிலில வைச்சு இரண்டுக்கும் ஆராய்ச்சி நடந்திருக்கு. நாங்களும் விசாரிக்கப்பட்டம். 'இவளின்ர' வாயில் மனித ரத்தம் இருக்கேல்ல. கடிச்ச நாயின் வாயில் குருதி இருந்ததே தவிர அது அதை ருசிக்கவில்லை. அதன் எண்ணம் 'ஏற்கனவே காதலில் இருந்த 'இவளின்' மீது மகன் லேசாகத் தட்டி விளையாடியதை மகன் அவளுக்கு அடிக்கிறான் எனக் கருதியே கோவத்தில் அது கடித்திருக்கு. பின்பு மூன்று நாட்களாக அது சாப்பிடேல்லை. தான் செய்தது பிழை என்பதும் அதற்கு தெரிஞ்சு விட்டுது.

பின்பு நாய்களைத் தந்துவிட்டார்களா ?

'இல்ல..இல்ல. 'இவளிடம்' எங்கள் ரத்தம் படாததால் எங்களிடம் இவளை தந்து விட்டார்கள். மார்சலின்ர நாய்க்கு மரண தண்டனை அறிவித்தார்கள். பின்பு 150 யூறோ கட்டி அதன் சாம்பலை பெற்றுக் கொண்டோம். ஆனால் வீட்டு வளவை விட்டு இவள் வெளியே போக முடியாது. காலில் காப்பு மாட்டி இருக்கிறார்கள். வளவை விட்டு வெளியேறினால் போலீஸ் எங்களுக்குக் கோல் எடுப்பினம்.

'இவ்வளவுக்கும் பிறகு நாயை வைத்திருப்பதில் பயம் இல்லையோ?' என்றேன்.

'மனுசரும் கோவத்தில் தவறாய் நடப்பதில்லையா ? நாய்களுக்கும் கோவப்படும் உரிமை உண்டுதானே ? ஆனால் மகனால் மரணதண்டனையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை." என்று பாஸ்கரன் கூறிக் கொண்டிருந்த போது, அம்மணி கலாவதி

'ஐயோ.. பாஸ்கரன் இண்டைக்குத் தம்பியை பாக்கப்போகிற நாளெல்லோ ? கடவுளே.. 12 மணிக்கு போகோணும்' என்றார்.

அப்போது காலை பதினொரு மணியாக இருந்தது. அவர்கள் பதட்டத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

'மகனை நீங்கள் எங்க பாக்க போகணும்?'

'அவர் புவதாசி ஜெயிலில இருக்கிறார். நாங்கள் வேறொரு நாள் சந்திப்போமா ?' என்றார் பாஸ்கரன்.

அம்மணி கலா என்னைப்பார்த்து, 'மகனிடம் பிரெஞ்சு போலீஸ், யாரோ தமிழ் குற்றவாளியை விசாரிக்க மொழிபெயர்ப்பு உதவி கேட்டவை. அது மகளோடு தவறாய் நடந்த ஒரு தமிழன் பற்றியது. அந்த விசாரணை முடிய, இந்த விசரன்(மகன்) 'வெளீல வாங்கோ சீகரட் குடிப்போம்' என்று அவன பாந்தமா கூட்டி வந்து ஜெயில் வளவுக்க வைச்சே 'மகள் கேக்குதாடா நாயே !' என்று அடி அடி யெண்டு அடிச்சு மூஞ்சியை உடைச்சுப்போட்டான். அதால ஆறுமாதம் மகனார் உள்ள இருக்கிறார்.

அவன் வெளீல இருக்கிறத விட உள்ள சந்தோசமா இருக்கிறான். எல்லா போலீசும் இவன்ர பக்கம்தான். சட்டம் இவற்ற பக்கம் இல்ல. இவனுகளால நான் பர்ற பாடு இருக்கே தம்பி... ஆண்டவா..!தம்பி குறை நினைக்காதேங்கோ..' என்றபடி கலா அறையை நோக்கி ஓடினார்.

'இல்லை. ஒருபோதும் இல்லை' என்றுவிட்டு அங்கிருந்து வெளியேறினேன். மகனும் எதிர்காலத்தில் இராணுவத்தில் இணைய தயாராகி விட்டான் என்று நினைத்துக் கொண்டேன். குளிரங்கிக்குள் கை விட்டு மின் வண்டிக்குப் பணம் இருக்கிறதா என்று பார்த்தேன். நசிந்திருந்த ஐந்து யூரோ வெளியே வந்தது. அவர்கள் வீட்டை ஒருமுறை திரும்பிப் பார்த்தேன் 'வீட்டுச் சிறைப் பன்றி' சன்னல் ஊடாக என்னைப் பார்த்தபடி இருந்தாள்.

❍





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ‘ஞானப்பறவை’

அப்பாவைக் குற்றம் சாட்ட
என்னிடமொரு சொல்லுமில்லை.
என்னைச் சொல்ல உண்டு
ஏராளம் ஏராளம்.

போகப் போக
மௌனங்களால் பேசியவர் அப்பா!
சமுத்திரத்தின் ஆழம் புரியாமல்
கிணற்றுக் கட்டில் படியளந்தான்
சுவாமிநாதன்.

எறும்பூரக் கற்குழிந்த பாதங்கள்
அப்பாவினுடயவை.
தோளிலேறி நின்று கொண்டு
முழக்கமிடுகிற ‘மார்ட்டின் லூதர்’ நான்.

சிலுவைகளை ஒளித்துக் கொண்டு
சிறகுகளை விரித்துக் காட்டிய
‘ஞானப்பறவை’ அப்பா.
அதன்
வழித்தடம் தெரியாமல்
மடி முட்டிய கன்றுக் குட்டி நான்.

‘இடைவெளிகளாலும்
வாழ்வை அழகாக்க முடியும்’ என்று
வாழ்ந்து காட்டிய
பெரும் தத்துவாசிரியனை
ஓடிப் போய்
அணைத்துக் கொள்ள முடியாமல்
தடுத்த என் வெட்கத்திற்கும்
‘துரோகம்’ என்று தான் பெயர்.

– தீபிகா–
*29.01.2024 04.03* am.

## கடைசி மண்வீடு

திண்ணைப் பரணிலிருந்து
தவறி விழுந்து விரிகிறது
பழைய பனம்பாய் .

புழக்கமில்லாத இருட் கூரைக்குள்
திடீரென்று பூக்கிறது
மூத்தோரின் வாசம்.

பல்லிமுட்டைகளும், ஈசல் செதில்களுமாக
விழித்தெழுகிற பாயிடுக்கில்
ஒட்டிக் கொண்டு சிரிக்கிறது
நாவல் மையூறிய பழுப்புக் கடதாசி.

யாரோ கீறி வைத்திருக்கிற
காலத்தின் கைரேகைகளை
தொட்டுப் பார்க்கையில் சுடுகிறது
இழப்பின் நெருப்பு.

களிம்பு கவ்விய பித்தளைக் குடமும்
கறையூறிய வெற்றிலைத் தட்டமும்
கடைசியாய் ஒரு முறை
ஆளையாள் பார்க்கின்றன.

அமைதியைத் தளுப்புகிறது
அடைக்கோழியின் குழுகுழுப்புக் குரல்.

நாளை இடிபடப் போகிற
ஊரின்
கடைசி மண்வீடு இது.

– தீபிகா
*30.01.2024 09.40* காலை.



## தீபிகாவின் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறியன சிந்தியாத சிந்தையான் பேராசான் செ.யோகராசா

- **சி. ரமேஷ்** (ஏழாலை)

சிறியன சிந்தியாதவன் என்ற வரைவிலக்கணத்துக்கமைய வாழ்ந்தவர் பேராசிரியர் செ. யோகராசா. மனிதர்களை மதிக்கத் தெரிந்தவர். மாணவர்களிடத்தில் அன்பானவர். பிறரை மனதளவில்கூடக் காயப்படுத்தத் தெரியாதவர். பண்புநலன்மிக்கவர். பழகுவதற்குகந்தவர். வையத்தில்வாழ்வாங்கு வாழ்வதற்குரிய முறையில் வாழ்ந்தவர். அவரது மரணம் யாவரும் எதிர்பார்க்காத ஒரு தருணத்தில் திடீரென நிகழ்ந்தேறி முடிந்தது. அவருடன் நெருங்கிப்பழகியவர் அனைவருக்கும் இச்செய்தி பேரிடியாக விழுந்தது. அவரது பூதவுடல் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு வருவதற்கு முன்னரே செய்தி கேள்விப்பட்டுப் பலர் கூடிவிட்டனர். எண்ணில்லாத சனத்திரளாய் அவ்விடம் விளங்கியது. மட்டக்களப்பு வழக்காற்றில் மரண வீடு ஒன்றில் அதிகளவு மக்கள் கூடிய இடம் எதுவென்றால் அது யோகராசா ஆசிரியரின் வீடு தான். அவரில்லாத இடத்தில் அவரை மதித்து இன, மத, பேதமின்றி மக்கள் கூடி அவருக்கு இறுதி வணக்கத்தைச் செலுத்திச் சென்றனர். ஊர் விட்டு ஊர் வந்து முற்றிலும் புதிய தேசத்தில் வாழ்ந்த யோகராசா என்ற தனிமனிதனை ஏன் இந்த மக்கள் கொண்டாடுகின்றனர்? அவர் பேராசிரியர் என்பதாலும் இலக்கியவாதி என்பதாலும் மட்டும் கொண்டாடப்படவில்லை. இதனைத் தாண்டி அவர் மனிதநேயி. வாழ்வாதாரமற்ற மனிதர்களை நேசித்தவர். மாணவர்களுக்கு அறிவினைக் கடத்தியதோடு நில்லாது தன்னிடமுள்ள நூல்களைக் கொடுத்து அதனை வாசிக்கும்படி தூண்டியவர்.

தான் வாசித்த நல்ல நூல்களைத் தன் மாணாக்கர் மாத்திரமன்றி அவரோடு அன்பு பாராட்டி நேசித்து அவரோடு உரையாடிச் செல்பவருக்கும் அறிமுகப்படுத்தியவர். அந்தவகையில் அறிமுகமானவர்களுள் நானும் ஒருவன். எனது சிற்றப்பாவும் அவரும் ஒருசாலை மாணவராக இருந்தபடியால் சிற்றப்பா பேராதனையில் இருந்து மட்டக்களப்புக்கு வரும் போதெல்லாம் எமது வீட்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து அவரோடு உரையாடிச் செல்வார். 1990களின் முற்பகுதியில் தொடங்கிய குசலம் விசாரிப்பதில் தொடங்கிய நட்பு அவரது இறுதிபரியந்தம் வரைக்கும் தொடர்ந்தது. நூல்களை என்றும் வாசிப்பதில் அக்கறையும் சிரத்தையும் உள்ள உயர்தர வகுப்பு மாணவன் ஒருவனைத் தன்னிடமுள்ள நல்ல நூல்களைக் கொடுத்து ஈழத்தில் வழிப்படுத்தும் ஒரு பேராசிரியர் இருப்பார் எனின் அவர் செ.யோகராசா அவர்களையே சாரும். நவீன கவிதை கள் குறித்து அவரிடம் நிகழ்த்திய விவாதங்களும் கலந்துரையாடல்களுமே '1980களுக்குப் பின்னர் ஈழத்து நவீன கவிதை ஒர் ஆய்வு' என்ற ஆய்வினைச் செய்ய எனக்குத் தூண்டியது. சிறிய வயதில் எனது கவிதை களை அவரிடம் காட்டியபோது அதனை வாசித்து அறிவுரைகளைக் கூறியதோடு நில்லாது ஈழத்துத் தமிழ் கவிதை களின் போக்குகள் எவ்வாறு மாறியுள்ளது என்பதனையும் தெளிவுபடுத்தினார். பின்னர் ஒரு தொகை நூல் களைத் தந்து படிக்கும்படி தூண்டினார். ரஸ்கின் கூறியதைப் போல 'குழந்தையை எத்தகைய வாழ்வுக்குத் தயார்படுத்த வேண்டும்' என்ற வித்தையை அவர் அறிந்தே இருந்தார். என்னை பொறுத்தளவில் பேராசிரியர் 'புதியதை அறியச் செய்தார். அறிந்ததை புதிதாகச் செய்யும் படி வழிப்படுத்தினார்'. கற்பதற்கு வழி காட்டிய செ. யோ. அவர்கள், கற்றதை பின்னாளில் நாம் மறக்காது இருப்பதற்காகவும் வழிகாட்டினார். அவரோடு நாம் நிகழ்த்தும் விவாதங்கள் தொடர்ந்தும் அவரோடு பயணிக்கவும் வழி சமைத்தன. இத்தருணத்தில் 'நாம் பெறும் கல்வியில் அதிகச் சிறப்பான பாகம் நமக்கு நாமே கொடுத்துக் கொள்வதுதான்' என்ற ஸ்காட்டின் கருத்தினை நினைத்துப் பார்க்கிறேன். அக்கூற்று எவ்வளவுக்கெவ்வளவு உண்மையானது என்பதை பேராசிரி யரின் செயற்கரிய செயலுக்கூடாக அறிந்து கொண்டேன்.

பேராசிரயர் நூல்களை இரவல் கொடுக்கும்போது ஒரே ஒரு நிபந்தனை விதிப்பார். "நான் தரும் நூல்களை யாருக்கும் இரவல் கொடாதே" எனக் கூறித்தருவார். அவ்வாறு கூறும்போது பிறிதொன்றையும் கூறுவார். யாருக்காவது நூல் தேவையென்றால் தன்னிடம் வந்து கேட்கும்படியும் கூறுவார். அவர் கூறுவது ஆரம்பத்தில் புரியவில்லை. என்னிடம் பெற்றாலும் அவரிடம் பெற்றாலும் இரண்டும் ஒன்றுதானே என எண்ணியிருந்தேன். ஆனால் அதன் தார்ப்பரியம் இப்போது விளங்குகிறது. நூலைப் பெற்றவர் அதனைச் சேதப்படுத்திவிட்டு நூலினைத் தருவார் எனின் அதற்கு யார் பொறுப்புக் கூறுவது. இதனைக் கண்ணூடாகக் கண்டேன். 2000 ஆம் ஆண்டு 'மஹாகவியின் ஆறு காவியங்கள்' என்ற நூலைப் படிப்தற்காகத் தந்துதவினார். நானில்லாத சமயம் எனது வீட்டுக்கு என்னைத் தேடி வந்த நண்பர் ஒருவர் எனது மேசையில் அந்நூல் இருப்பதனைக் கண்டு அதனை எனது தாயாரிடம் கூறிவிட்டு எடுத்துச் சென்றார். இதனை நானறியேன். எனது தாயாரும் இது குறித்து என்னிடம் கூறவில்லை. நூலைத் திருப்பிக் கொடுக்க நினைத்தபோது நூலினைக் காணவில்லை. தேடியும் நூல் கிடைக்காமையால் அந்நூலினை கொழும்பு சென்று வசந்தம் புக் சென்டரில் வாங்கிக் கொடுக்க நேரிட்டது. நான் வாங்கிக் கொடுத்தது காட் பைண்டிங். அவருடையது சாதாரண பைண்டிங். அத்துடன் அவர் நூல்களை இரவல் தரும்போது நூலின் முன்னட்டையில் செ.யோ. என்று எழுதிவிட்டே தருவார். நடந்ததைச் சொல்லாது அதனை அவரிடம் கையளித்தேன். ஒன்றும் சொல்லாது நூலினைப் பெற்று கொண்ட பேராசிரியர், அன்று அன்பளிப்பாக சுகனின் 'நுகத்தடி நாட்கள்', செழியனின் 'அதிகாலையைத் தேடி' உட்பட கவிதை நூல்கள் சிலவற்றைத் என்னிடம் தந்து நான் அவரின் வீட்டை விட்டு வெளியேறும் போது புத்தகம் தொலைந்தால் புதுப் புத்தகம் வாங்குவதற்கு முன் தன்னிடம் கூறும்படி கேட்டுக்கொண்டார். மனநெகிழ்வுடன் அவரின் இருகரங்களையும் பற்றிக்கொண்டு ஒன்றும் கூறாது கண்ணீர் மல்க வெளியேறினேன். இறைவன் சில சமயங்களில் மனிதனாகப் பிறப்பார் என்பதையும் அப்போது உணர்ந்தேன். மஹாகவியின் ஆறு காவியங்கள் என்ற நூலினை எடுத்த நண்பர் அதனை என்னிடம் திருப்பித் தந்து விட்டார். இன்று அவருடைய கையெழுத்துடன் உள்ள அந்நூல் என்னிடம் அவர் சொல்லாத பலகதைகளைப் பேசிச் செல்லும். அன்று முதல் அவரின் பெருந்தன்மை பிறிதொரு வடிவமாக உருவெடுத்தது. அன்று முதல் எனக்குப் புத்தகங்களை இரவல் தருவதை விடுத்து நூல்களை அன்பளிப்பாகத் தரும் பேராசானாக அவர் மாறினார். இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் அவர் இறுதியாக யாழ்ப்பாணம் வந்தபோது நண்பர் இ.சு.முரளியிடம் எனக்காகத் தான் கொண்டு வந்த மருதூர் கொத்தன் கவிதை நூலைக் கையளித்துச் சென்றார்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபில் நவீன இலக்கியப் பிற்புலத்தில் சிந்தித்து செயல்பட்ட விமர்சகர்களில் முக்கிய, முதன்மையான ஆளுமையாக விளங்கியவர் பேராசிரியர் செ.யோகராசா ஆவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறைத் தலைவராகச் செயற்பட்ட இவர் நாவல், சிறுகதை, மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதைகளில் ஆழமான பரிச்சியம் கொண்டவர். கருணையோகன், பசுமலையோகன் என்ற பெயரில் கவிதை களை எழுதியவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருபத்தைந்தாண்டுகள் பணியாற்றிய செ.யோகராசா அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அதிகம் உழைத்தவர். நவீன தமிழ் இலக்கியம், ஈழத்து இலக்கியம், புலம் பெயர் இலக்கியம், மலையக இலக்கியம், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், நாட்டாரியல் இலக்கியம், கல்வியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆய்ந்தறிந்த அனுபவங்களைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் தந்தவர்.

பேராசிரியர் செ.யோகராசா ஆசிரியர் எழுதிய நூல்களாக ஈழத்துத் தமிழ் நாவல் வளமும், வளர்ச்சியும், இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள் ஈழத்து நவீன கவிதை, ஈழத்து முச்சந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம், ஈழத்து இலக்கியமும் இதழியலும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானவற்றைக் காணலாம். இவர் தொகுத்து வெளியிட்ட நூல்களாக ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, மாற்று நோக்கில் சில கருத்துகளும் நிகழ்வுகளும், புதுத்துளை நூறு (பயிற்சிப் பட்டறைக் கவிதைகள்), ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், ஈழத்துச் சிறுவர் அறிவியல் பாடல்கள், ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம் முதலானவற்றைக் கூறலாம். கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் காலாண்டு இதழாக 1982முதல் வெளியிடப்பட்டுவரும் 'கிழக்கொளி' சஞ்சிகையிலும் மட்டக்களப்புப் பிரதேசச் செயலகத்தால் வெளியிடப்பட்டு வந்த தேனகம் சஞ்சிகையிலும் மட்டக்களப்புப் பிரதேச அறிஞர்களைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தி வைத்ததோடு நில்லாது ஈழத்தின் நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம் தொடர்பாகவும் விரிவாக எழுதினார்.

கடமையுணர்வும் கண்ணியமிக்க இதயம் தூய்மையானவரை மதங்கள் பாக்கியவான்கள் எனக் கூறும். அவ்வகையில் அன்பு, கருணை, இரக்கம், தூய்மை, நம்பிக்கை போன்ற தெய்வீகக் குணங்களை கொண்ட செ.யோகராசா அவர்களும் கடவுளால் ஆசிர்வதிக்கப்பட்ட பாக்கியவான் ஆவார். பாக்கியவான்களாலேயே கடவுளைக் கண்டடைய முடியும் எனப் பரிசுத்த வேதயாகமம் போதிக்கிறது. நேரிய சிந்தை மிக்க உயர் குணமுடை செ.யோ. எனப்படும் எம்மாசானும் இறைவனைப் பற்றியிருப்பார் என்பது திண்ணம்.

## தையோடு பண்பாடு




பிறந்தது தைத் திங்கள்
பொலிந்தது தைப்பொங்கல்
துளிர்த்தது நம்பிக்கை
தமிழ் மரபில் ஒரு பருக்கை

தையொன்று புலர்கையிலே
துயிலெழுந்து நீராடி
புத்தாடை புனைந்துகொண்டு
கொண்டாட்டம் ஆரம்பம்

உணவு உடை உறையுளுக்கு
உதவும் கதிரோனுக்கு
நன்றி சொல்லி நாம் நிற்கும்
பொங்கல் விழா நம் மரபு

காலையிலே பொங்கியுண்டு
களித்திருக்க நண்பருடன்
மாலையிலே விதவிதமாய்
விளையாட்டு களியாட்டம்

பரிணாமம் பரிணமிக்க
நம் பண்பும் உயர்ந்து நிற்க
பகுத்து வைத்தார் பத்தெனவே
நற்பண்புகள் நமதே

அறத்தின் படியே வாழ்வென்றார்
அன்பைக் கொடுத்து வாங்கென்றார்
மானம் போனால் வராதென்றார்
உயர்ந்த ஒழுக்கம் பேணென்றார்

களியாடங்கள் கலை வடிவில்
கண்டு வாழும் வழி சொன்னார்
வீரம் நட்பு விருந்தோம்பல்
என்பதையும் உயர்த்தென்றார்

சிந்தை சிறக்க பக்திநெறி
தன்சிறப்பொளிர வாய்மை நெறி
என்றிவை எல்லாம் வாழ்வின் வழி
என்றே தமிழர் வாழ்கின்றார்

**க. செயபாலன் 2024 தை**
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனதைக் கவர்ந்த நூலகக் கண்காட்சி

## ஏழாலை 'சித்தி விநாயகர் நூல்நிலையம்'



செல்வன். கங்காதரகீர்த்தி சதுர்சன்,
தரம் : 8A
யா / அருணோதயக்கல்லூரி

ஏழாலை மேற்கு சுன்னாகம் சித்தாந்த வித்தகர் திரு மு.ஞானப்பிரகாசம் மற்றும் இலக்கிய கலாநிதி திரு.மு.கந்தையா ஆகியோரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட 'சித்தி விநாயகர் நூல்நிலையம்' 2024ஆம் ஆண்டு தைமாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடாத்தியது. மாணவர்கள் மற்றும் வாசகர்களின் நலன் கருதி இக்கண்காட்சி மேலும் இரு நாட்கள் நீடிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1985ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இ.கணேசராசா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்நூல் நிலையத்தின் அன்றைய செயலாளராக க.நந்தகுமார் அவர்களும் பொருளாளராக இ.சுரேந்திரன் அவர்களும் ஃபோசகர்களாக சித்தாந்த வித்தகர் திரு மு.ஞானப்பிரகாசம் அவர்களும் இலக்கிய கலாநிதி திரு.மு.கந்தையா அவர்களும் விளங்கினர். இந்நூல் நிலையத்தை உருவாக்குவதற்கு ஆலோசனைகளையும் வழங்கித் தன் காணியையும் கொடுத்துதவியவரான சின்னத்துரை ஆசிரியரையும் இந்நூலகத்தின் வளர்ச்சியில் உறுதுணையாக நின்று அதன் வளர்ச்சியில் அயராதுபங்காற்றியவராக திலகுமார் அவர்களையும் இத்தருணத்தில் நினைவு கொள்வது சாலப்பொருத்தம்.

நூல் நிலையத்தின் முதலாம் நாள் நிகழ்வு மூ. வைத்தியலிங்கம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பதில் நீதிபதியும் சட்டத்தரணியுமான சோ.தேவராசா அவர்கள் கலந்து சிறப்பித்து இருந்தார்கள். நூலக வாசகர்களை கௌரவிக்கும் முகமாக திருக்குறள் மனனப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டு அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா ஒன்றும் நடாத்தப்பட்டது. இரண்டாவது நாள் நிகழ்வு நூலக இயக்குநர் திருமதி மதிவதனியின் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஏழாலை சைவ சன்மார்க்கப் பாடசாலையின் அதிபர் திரு த. கெங்காதரகீர்த்தி கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

வலம் இருந்து இடமாக கண்காட்சியின் முதல் சுற்றில் ஏழாலையைச் சேர்ந்தவர்களின் நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. சித்தாந்த வித்தகர் திரு மு.ஞானப்பிரகாசம், இலக்கிய கலாநிதி திரு.மு.கந்தையா, ஆத்மஜோதி முத்தையா, இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சண்முகநாதன், பேராசிரியர் பேரம்பலம் கனகராசா, பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் முதலான மூத்த எழுத்தாளர்களின் நூல்களும் கு.ரஜீபன், திருமதி சூ.மதிவதனி முதலான இளைய எழுத்தாளர்களின் நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன. இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம், சி. வைத்தியலிங்கத்தின் கங்காகீத் முதலான

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூல்கள் என்னை பெரிதும் ஈர்த்தன. இடமிருந்து வலமாகக் காணப்படும் முதல் சுற்றில் சிறுவர்களுக்கான நூல்கள் காட்சிப் படுத்தப் பட்டன. 1980களில் வெளிவந்த ராணி காமிக்ஸ் சித்திரக் கதைகள் என்னைக் கவர்ந்தன. கடலில் கவிழ்ந்த கப்பல் ஜேம்ஸ்பாண்ட் துப்பறியும் அழகியைத்தேடி, டாக்டர் நோ, ஒற்றனுக்கு ஒற்றன், பெட்ரோல் அதிபர் முகமூடி வீரர் மாயாவி தோன்றும் மண்டைஓட்டு மாளிகை முதலான காமிக்ஸ் நூல்கள் சிறுவர்களை வாசிக்கத் தூண்டும் நூல்களாக அமைந்தன. நான் அந்நூல்களைப் பார்வையிட்டபோது அங்கிருந்தவர்கள் தாங்கள் அந் நூல்களை வாசித்தபோது ஏற்பட்ட அனுபவங்களையும் என்னோடு பகிர்ந்தனர். இவை மட்டுமன்றிச் சிறுவர்களுக்கான மொழிபெயர்ப்பு நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவை பெரும் பாலும் சிங்கள, ரஷ்ய, ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களாக அமைந்திருந்தன. பாதையின் கதை, பிரபஞ்சத்தின் கதை, கோகிலா மகேந்திரனின் விஞ்ஞானக்கதைகள், சாண எரிவாயு முதலான அரியவகை நூல்களைக் கண்டு களித்தேன். அதற்கு அருகிலே ஆரம்ப காலத்தில் வெளியான புத்தகங்களும் சஞ்சிகைகளும் காட்சிக்கு வைகப்பட்டிருந்தன. 1933 ஆம் ஆண்டு இலங்கையில் முதல் முதல் வெளியான ஞாயிறு சஞ்சிகையும் காட்சிக்கு வைக்கபட்டிருந்தது. இது போலவே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் பீடத்தில் இருந்து வெளியிடப்பட்ட 'யாழ்ப்பாணப் புவி யியலாளன், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பீட மாணவர்களால் தொடர்ந்து வெளியிடப்படும் இளங்கதிர் இதழ்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையால் வெளியிடப்படும் சிந்தனை இதழ்களும் காண்போருக்கு பிரமிப்பைத் தந்தன. இவற்றை விட தற்காலத்தில் வெளிவரும் வளர், கலைமுகம், ஜீவநதி, சிரித்திரன் சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அதிலும் என் கவனத்தை அதிகம் ஈர்ந்த பத்திரிகையாக 'விஞ்ஞானி' காணப்பட்டது. இதற்கு எதிரில் பிரம்மஸ்ரீ கணேசையர், பண்டிதர்வீரகத்தி, பேராசிரியர் வித்தியானந்தன், யாழ்வாணன், மயிலங்கூடலூர் நடராசன், தமிழருவி சண்முகசுந்தரம் ஆகியோரின் நூல்களும் காணப்பட்டன: அதற்கு அருகில் தமிழ் நூல்களை ஆவணப்படுத்துவதில் கரிசனையும் அக்கறையும் கொண்ட என். செல்வராஜாவின் நூல்களும் தனியாக வைக்கப்பட்டிருந்தன. இங்கு சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட தமிழ் லெக்சிகன் (Tamil lexicon) தனியாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றைவிட தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், ஈழத்திலக்கியம், வரலாறு, அரசியல், கலைகள், பஞ்சாங்கம், பௌதீகம், மருத்துவம் முதலான துறைகளைச் சேர்ந்த நூல்களையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு அகிலன், சாண்டில்யன், கல்கி, மு.வரதராஜன், கண்ணதாசன்? அறிஞர் அண்ணாத்துரை, பட்டுக்கோட்டைப் பிரபாகர், பாலகுமாரன், ரமணிச்சந்திரன், ஜெயமோகன் முதலானவர்களின் நூல்களைத் தனியொரு பகுதியாகக் காட்சிக்கு வைத்திருந்தனர். இவற்றினைப் போன்று அழிவடைந்து சிதைவடைந்த நிலையில் உள்ள நூல்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.







இக்கண்காட்சியின் மூலம் மாணவர்கள் அதிகம் பயனடைந்தார்கள், விஞ்ஞானத்தில் அதிக நாட்டமுடைய மாணவர்கள் 'விஞ்ஞானி' போன்ற அரிய சஞ்சிகையை காண்பது அரிது. அதைவிட பிறநாட்டுக் கதைகள், கவிதைகளில் நாட்டமுடையவர் களுக்கும் இக்கண்காட்சி பயனுடைய தாக அமைந்திருக்கும். இலங்கையில் ஆரம்ப காலத்தில் வெளியான அரிய வகைச் சஞ்சிகைகளும் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்களும் மாணவரின் அறிவுப் பசியைத் தீர்த்து வைக்கும் அமுதசுரபியாக விளங்கின. இக்கண்காட்சிக்கு நான் வருகை தந்தது எனக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிளாஸ்ரிக் புன்னகைகள்

- தர்மினி - (பிரான்ஸ்)

வெய்யில் காலம் தொடங்கிவிட்டால் ஒருவித பதட்டம் ஏற்படுவதாக, புலம்பெயர்ந்து வாழும் நட்புகள் புலம்புவார்கள். நாம் உறவுகளையும் நட்புகளையும் பேணிப்பாதுகாத்துக் கொள்ளவென்று சொல்லிச் செய்யும் கொண்டாட்டங்கள் அர்த்தமற்றுப்போய் பல ஆண்டுகளாகிவிட்டது. அவை தங்கள் மகிழ்ச்சிக்காகவென்பர், இவை என்ன விதமாக மனநிறைவையோ இன்பத்தையோ தருகின்றனவென்று கேட்டால், அல்லல்களும் கடன்களும் தான் மிச்சமென்பர். இது பணப்பெருமையும் பகட்டும் காட்டும் கூட்டமாகிப்போனது.

ஒரு கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்பவர்கள் பதட்டப்படுவதும் பரபரப்பாயிருப்பதும் இயல்பானது தான். ஆனால் அது விருந்தோம்பலையோ மகிழ்வையோ யோசித்து நடத்தப்படுவதில்லை. நம்மவர்களின் மனப்போக்கு பகட்டைக் காண்பிப்பதும் இந்திய சினிமாவை, திரைக்கலைஞர்களைப் பிரதிபலிப்பதுமாகவே இருக்கிறது. உறவுகளை-யோ எளிமையையோ உழைப்பின் வழி பெற்ற பணத்தின் பெறுமதியையோ தமது பிள்ளைகளுக்குக் காண்பிப்பது இல்லை.

தமக்கான கலாசார அடையாளங்களைத் தேடும் புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் குழப்பமடைகின்றனர். பல்கலாசாரச் சூழலில் வளர்ந்து, பயின்று வேலையும் செய்யும் அடுத்த தலைமுறை சிக்கல்களுக்குள்ளாகின்றனர். ஆயினும் அவர்களின் கல்வியும் பொதுஅறிவும்அவர்களைஉறுதியானவர்களாகவடிவமைத்துவிடுவதுசற்றுஆறுதலையும் தருகிறது.பிறநாட்டுநண்பர்களதுகலாசாரம்,பண்புகள்,அடையாளங்கள்,நம்பிக்கைகள்... போன்று உண்மையாகவே எமது அடையாளமென்ன என்று யோசிக்கிறார்கள். ஆனால், வீட்டில் பெற்றவர்கள் பின்பற்றுபவை,சம்பிரதாயங்கள் அவர்களை மேலும் குழப்பத்திலாழ்த்தி விடுகின்றன. பிள்ளைகள் தாம் வாழும் நாட்டுச்சூழல், பல்கலாசார நட்புகள்,கல்விச் சமூகம், பெற்றோரின் விருப்பங்கள்,பழக்கங்களோடு பிற நாடுகளில் வாழும் உறவுகள்,ஊரில் இருக்கும் சொந்தக்காரர்கள் என்று எத்தனை விசயங்களில் சமரசங்களை அனுசரிப்புகளைச் செய்வது?

புலம்பெயர்ந்தவர்களின் அடுத்தடுத்த தலைமுறையினர் பலவிதமான சவால்களை எதிர்கொள்கின்றனர்.அவற்றில் அவர்களது வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொள்வதும் அது தொடர்பான குடும்பத்தினரின் தலையிடல்களும் முக்கியமானவை. இதைத் தாண்டிவிட்டாலும்கொண்டாட்டங்களைஎப்படிச்செய்வதுஎன்றுதிட்டமிடுவதில்பொருளாதாரம், வேலைத்தள நட்புகள்,உறவுகள்,வழக்கம் - பழக்கம் போன்றவையெல்லாம் இருக்கின்றன.

விழாவைச் சிறப்பாக நடத்த எப்படித் திட்டமிட்டிருந்தாலும் அன்று விருந்தினர்கள் இவர்களைத் திட்டிக்கொண்டே வீடு செல்வதுபோலதான் கொண்டாட்டம் நடந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தைக் காட்டி விட்டு வரவோ முகம் முறிக்கக்கூடாதென்றோ உடுத்திப்படுத்தி நகை நட்டுகளோடு வாகன நிறுத்துமிடம்பற்றிய பதட்டத்தோடு விருந்தாளிகள் செல்வார்கள் . ஆனால் வரவேற்போ உபசரிப்போ அது நடக்காது. மண்டபத்திற்குள் நுழைந்து யாராவது தெரிந்தவர்களைக் கண்டாலோ மேடையில் விழா நாயகர்களைப் பார்த்த பின்போ தான் வந்த இடம் சரிதானென்று நிம்மதியடைவர்.

**கொண்டாட்டமென்றால் வாய்க்குச் சுவையாக உணவுகள் தரப்படுவது தான் முக்கியம். அழைத்ததன் சாரமே அந்த உபசரிப்பு அல்லவா? நம் நாட்டவர்களின் விருந்துபசாரம் நாக்கிற்குச் சுவையாக நாலு பலகாரம் சாப்பிடலாமென்று போனால், காய்ந்த சமோசாவும் பழுதான இறைச்சிக்கறி வைத்த ரோல்சும் தரப்படும். பிறகு மட்டுமென்ன, சாப்பாட்டுக்கதை பெருங்கதை. வரிசையில் நின்று உணவுத்தட்டை நீட்டியபடி நகருவதும் முதியோர்களுக்கும் நோயாளிகளுக்கும் வசதியாயிருப்பதில்லை. வந்திருக்கும் விருந்தினர்களின் வயதுகள், தெரிவுகள், உணவுப் பழக்கங்களைக் கருத்தில் எடுத்து சாப்பாட்டைத் திட்டமிடுவதும் சரிவர நடப்பதில்லை.**

இளைஞர் குழுக்கள் பல நாட்களாகப் பயின்று திட்டமிட்ட நடனங்களை அறிவிப்புகளோடு அரங்கேற்றுமிடமாக அவை ஆகின்றனவேயொழிய, விருந்தினர்கள் தம் இயல்பில் அந்த இடத்தின் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் எல்லோருக்குமான நடனங்களும் இசையும் இப்போது காணாமல் போய்விட்டன. காசுக்குப் பிடிச்ச கரைச்சல் டிஜே என்றொரு செலவு. வீட்டில் சும்மா கிடக்கும் பாட்டுப்பெட்டிகளையும் மடிக்கணினியையும் சிறுவர்களையும் அவற்றோடு விட்டால்கூட நல்ல பாட்டுகள் போடலாம். காதுகளைக் கிழிக்கும் சத்தங்களை மீறி அருகிலிருப்பவர்களோடு ஒரு கதை கதைக்க இயலாது. அங்கே தான் ஊரவர், அறிந்தவர், தெரிந்தவர் என்று பேசிக்கொள்ள வாய்ப்பென்றால் அதுவும் கஸ்ரம். கத்திக்கத்திக் கதைத்து மேசைகளிலிருக்கும் கோலா, ஃபன்ரா, தண்ணீர்ப்போத்தல்கள் முடிந்துவிடும். அதன் பின் கழிவறை போனால் கால் வைக்க முடியாது. எம் வீடுகளில் இப்படித்தான் நடந்து கொள்வோமா?

இப்போது சம்பிரதாயமாக இன்னுமொரு ஒரு நிகழ்ச்சியும் புகுத்தப்பட்டுவிட்டது. மணமக்கள் அல்லது சாமத்தியச்சடங்கு செய்யும் பிள்ளையின் ஓடுதல், ஆடுதல், நடத்தல், சிரித்தல், கதைத்தல், கொஞ்சுதல்...போன்ற இன்னபிற செயல்களையெல்லாம் சில நாட்களின் முன்பே படம் பிடித்து வெட்டி,ஒட்டி அதற்கு இசை சேர்க்கப்பட்டு மண்டபத்தில் பெரிய திரையொன்றில் திரையிடப்படும். அதை விருந்தினர்கள் அசையாமலிருந்து பார்த்து இரசிக்கவேண்டும்

குடிக்காத நண்பரொருவர், இங்கெல்லாம் மதுப்பிரியர்களுக்குத் தான் உண்மையான கொண்டாட்டமென்பார். அதுவும் உண்மை தானோ? கொண்டாட்டக்காரர்கள் மதுச்சாலையை அங்கீகரித் திருந்தால் அங்கேயே மதுக் குவளைகளோடு கூடிப்பேசிக் கொண்டிருப்பார்கள் ஆண்கள். இல்லையென்றால் போத்தல்கள், பிளாஸ்ரிக் கப்புகளை தயாராகவே கார்களுக்குள் வைத்தி ருப்பார்கள். வாகன நிறுத்துமிடம் கலகலப்பாகும். ஒரு கொண்டாட்ட மனநிலையை அவர்கள் அடைவார்கள்.

மேலும் இயக்குனர்களாக போட்டோவும் வீடியோவும் எடுப்பவர்கள்செய்யும்அட்டகாசம்இன்னுமொருபுறம். ஒரு நிகழ்வு தானாக அதன்பாட்டில் நடக்க முடியாது. கட், றெடி, வண்மோர் சொல்லி கமராக்களுக்கான முக்கியத்துவமே அந்நாளுக்காகிவிடும். என்ன எடுபட்டது, எப்படி வந்திருக்கிறது, அதை யாரும் அறியார். அவையெல்லாம் கொண்டாட்ட வீட்டாருக்குக் கிடைக்கும் போது வேறொரு மனநிலை யிலிருப்பார்கள். நமக்கென்ன அது கிடக்கட்டுமென்று படம் எடுக்க பரிசு கொடுக்கவென்று வரிசைக்கு இடம் பிடித்து வீடு வந்து சேர்ந்தால், ஊரில் ஒரு காலத்தில் நடந்த கொண்டாட்டங்களை மனம் அசைபோடும்.

அங்கு ஒரு கொண்டாட்டம் தரும் மகிழ்ச்சி இளையோருக்கும் சிறாருக்கும் அதிகம். பெண்கள் பொருளாதார வசதியற்றவர்கள் புத்தாடைகள், நகைகள் இல்லாத நிலையில் தாழ்வுமனப்பான்மையுடன் அங்கு இருக்க வேண்டியிருக்கும். நகைகளை இரவல் வாங்கிப்போடுவது போன்ற நிலைமைகள், வீணான சடங்குகள் இன்னுமொரு சமூக அவலம் தான்.

ஆனாலும் இங்கு,

பெரும் மண்டபங்கள்,தேவையற்ற ஆடம்பரங்கள், நாடு விட்டு நாடு போய் கொண்டாட்டத்திற்கு ஆடைகள் அணிகலன்கள் கொள்வனவு செய்தலென்று வெளிநாட்டு வாழ்வில் ஓய்வின்றி உழைத்த பணத்தில் தம் டாம்பீகத்தை அடுத்தவருக்குக் காண்பிக்கவென நடத்தப்படும் இவ்விழாக்கள் அநாவசியமான செலவுகள் என்று இவர்கள் உணர்ந்திருந்தாலும் ஆளையாள் பார்த்து இது தான் வழமை-இப்ப இப்பிடித்தான் செய்றது என்று நடத்தப்படும். புதிதாகச் சிந்திப்பதில்லை, கருத்தாக ஒன்றைப் பின்பற்றுவதில்லை. நாம் வந்து வாழும் நாடுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகள் - பழக்கங்களைக் கற்றுக்கொள்வதில்லை.

மக்கள் மனதை ஆற்றுப்படுத்தும் விதமாகக் கொண்டாடப்பட்டவை இன்று பண-உள நெருக்கடிகளை ஏற்படுத்தும் விதமாக மாறிப்போயின. முன்னொரு காலத்தில் ஊர் கூடிச் செய்யும் விழா வாகவே ஒவ்வொரு வீட்டுக்கொண்டாட்டமும் இருந்தது. ஊர் கூடிக் களிக்கும் இடங்களாகவே திருவிழாக்களோ பொது நிகழ்வுகளோ நடந்தன. மண்தரையில் சனங்கள் குழுமியிருக்க மின்குழல்கள் வண்ணங்களில் ஒளிர, ஐஸ்பழக்காரர், கச்சான்-கடலைக் கடைகள், மேடை, ஒலிபெருக்கி, கூத்துகள், நாடகங்கள், பாட்டுகள் விடியவிடிய நடக்குமே அவை தான் அன்றைய காலத்தில் உற்சாகத்திற்கும் ஊரும் உறவுகளும் ஒன்று படுத்தலுக்கும் காரணிகளாயிருந்தன.

இந் நினைவுகளில், பல ஆண்டுகள் கடந்து ஊரிலொரு கொண்டாட்டமென்று போனால் பழைய மாதிரி எதுவுமில்லை. நாகரிகமடைந்துநவீனமான காலத்தில் வாழும்போது எண்பது/தொண்ணூறுகளின் அசை-போடல் நியாயமில்லைத்தான். ஆயினும் பிளாஸ்ரிக் சிரிப்பைப்போலவே எல்லாம் இருந்தன. ஊர் கூடிக் கொண்டாடுவதில்லாமல் கடமைக்குப் போய் வருவதாகிவிட்டது.

தெரிந்தவர்களின் வீட்டில் தேநீருக்குக் காத்திருந்த இடைவெளியில் அவர்களின் மகளின் சாமத்தியச் சடங்கின் அல்பத்தை என்னிடம் தந்தனர். அதில் அக்குடும்பத்தைத் தவிர யாரையும் அறியேன். அப்பிள்ளையிடம் கேட்டேன் புத்திசாலியான நீங்கள் ' இதற்கு எப்படி உடன்பட்டீர்கள்? பெண்ணுடலில் நடக்கும் இயற்கையான மாற்றத்தை, பழைய காலத்தில் சிறு வயதுக் கல்யாணத்திற்காகப் பருவமடைந்த பெண் வீட்டிலிருக்கிறாள் என்று அறிவிக்கச் செய்த மூடத்தனத்தை எப்படி ஏற்கிறீர்கள் என்பதுபோல கேட்டேன், 'இரண்டு ஆண்டுகளின் முன்பு எனக்கு இந்தளவு அறிவில்லை, என்னை முன் வைத்து கொண்டாட்டம், அலங்காரங்கள், தோழிகள் எல்லோருக்கும் நடந்ததுபோல எனக்கும் நடக்க வேண்டுமென்று அம்மா அப்பாவோடு நானும் ஆசைப்பட்டேன்' என்றாள். அப்படிக் கொண்டாட்டம் செய்யவேண்டுமென்றால் உங்கள் அம்மாவிற்கு மொனோபஸ் காலத்தின் மன-உடல் பிரச்சினைகள் முடிந்துவிட்ட போதில் மாதவிடாய் நின்றுவிட்டதாக கொண்டாட்டம் செய்வது நன்றாயிருக்குமென்றேன். அவள் சிரித்தாள். உங்களுக்கு அடுத்த தங்கைகளுடனாவது இதைப்பற்றிக் கதைத்து உணர வைப்பீங்களா என்று கேட்க, ஆமென்றாள்.

அண்மையில் கேள்விப்பட்டதுபோல, மில்லியன் கணக்கில் செலவு செய்து தன் பிள்ளை பருவமடைந்ததை / முதல் மாதவிடாயை ஊருக்கு இல்லை, உலகுக்கு விளம்பரம் செய்வது பெற்றவர்களின் அறியாமையா? பணப்பெருமை காட்டும் கேவலமான செயற்பாடா? பிறருக்குக் கொடுத்ததை வாங்கும் வியாபாரமா? அப்பெண்பிள்ளை அப்போது இந்தச் சூட்சுமங்களை அறிவதில்லை. அவளுக்குத் தானொரு கதாநாயகி யாகி மண்டபத்தில் அலங்கரித்துப் படம் பிடிக்கப்படவேண்டும். தன் உறவுகளுக்கு, நண்பிகளுக்கு நடந்த மாதிரி தனக்குமொரு ஆர்ப்பாட்டம் நடக்கவேண்டும். அவ்வளவு தான்.

நண்பர் ஒருவரின் வாதம் இவ்விதமாக... பயணப்பை ஒன்றுடன் தனியாக அகதியாக வந்து இறங்கியபோது வேலையில்லை, இருப்பிடமில்லை, கடன் இருந்தது, ஆனால், இத்தனை ஆண்டுகளில் விசா,வேலை, குடியுரிமை,குடும்பம், சொந்த வீடு, வாகனம், பிள்ளைகளுக்குத் தரமான கல்வியும் வேலையுமென ஐரோப்பிய நாட்டில் இருக்கிறேன். ஒரு நல்ல தொழிலாளியாக இயந்திரகதியில் சட்டதிட்டத்திற்கு அமைந்து வாழ்ந்தேன். இப்போது பிள்ளைகள் தலையெடுத்து விட்டனர். ஆகவே ஆடம்பரமாக ஒரு கொண்டாட்டத்தைச் செய்கிறேன் இதிலென்ன பிரச்சினையென்றார். சாமத்தியச் சடங்கு நடக்கும் மண்டபத்திற்கு ஹெலிகொப்டரில் அச்சிறுமியும் தாயும் தகப்பனுமாகப் போய் இறங்குவது ஏன்? அந்த ஆகாய விமானப்பயணத்தை நினைவுகூறவோ? ஹெலிகொப்டர் வாடகை பெரிதாயிருக்காது, அதொரு போக்குவரத்துச் சாதனம் தானே எனப் பாருங்கோவென்றார். சாமத்தியச் சடங்கே தேவையற்ற புடலங்காய். இதில் பவனிகளும் பட்டுகளும் பகட்டும்.

நம்மவரிடையில் இன்னுமொரு கொண்டாட்டம் உருவாகிவிட்டது. நாற்பது, ஐம்பது வயது போன்ற காரணங்களையிட்டு பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்கள். இவை ஆற்றுப்படுத்தலுமாக இருக்கமுடியும். பாடசாலைகளுக்கும் ஊர்களுக்கும் உதவும் அதே வேளையில் இப்புலம்பெயர்ந்த வாழ்வின் புழுக்கத்தை அல்லது ஏக்கங்களைத் தீர்க்கும் சிறு முனைப்பாக ஒன்றுகூடுகிறார்கள். அவை கூட ஆண்- பெண் குடும்பப் பொறுப்புகளை விடுத்து ஆறுதலாயிருப்பது என்பது இருபாலாருக்கும் வேறாயிருப்பதாகவே தெரிகிறது. ஆண்கள் தம் பள்ளி நண்பர்களோடு மீளக்கூடுவதைப்போல பெண்களால் முடிகிறதா? இருபாலாரது விருந்துகளும் எவ்விதமானவை? தம் சுமை-களைக் காவிக் கொண்டுள்ள பெண்கள் படிப்பு, பொருளாதாரமென முன்னேறிவிட்டபோதும் தங்கள் பொறுப்புகளிலிருந்து விலகி இலே-சாகுதல் எங்ஙனம்? தனித்தனியாக ஆண்களினதும் பெண்களினதும் ஒன்று கூடல்கள் எவ்விதமாக வித்தியாசப்படுகின்றன? அவர்கள் மீண்டும் கூடிக்களிக்கும் போது உற்சாகமடைகின்றனர். எத்தனை வயதானாலும் எங்கெங்கோ பிரிந்து சென்றாலும் பள்ளிக்கூட நட்புகளைத் தேடுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபராயத்தின் கபடமின்மையைத் தேடு-வதாகிறது. புலம்பெயர்ந்தவர்கள் திரும்பிச் சொந்த இடத்திற்குப் போய் வாழ்வது அரிது. உள் நாட்டிற்குள்ளேயே போரினால் இடம்பெயர்ந்து, துரத்தப்பட்டு, வேலை, படிப்பு, புதிய பந்தம் ... என்று பிற ஊர்களுக்குப் போனவர்களே அந்த நாட்டிற்குள் இருந்து கொண்டே திரும்பி வரமுடியாத சூழ்நிலைகளால் பிணைக்கப்பட்டிருக்க மொழி, காலநிலை, உணவுப் பழக்கங்கள், உடைகள், வேலைவாய்ப்பு, பிள்ளைகளின் கல்வி, இருப்பிடம்... இப்படிப் பலவாறான முடிச்சுகளோடு எப்படித் தம்மிடம் திரும்பமுடியும்? எத்தனை பேருக்கு அது சாத்தியம்? ஆகவே நனவிடை கரைந்து போவதற்கான கூடுகைகள் தேவையாகிவிட்டன. அவை அவற்றுக்கான அர்த்தங்களோடு நடப்பதே அவசியம்.

முடிவாக, சடங்குகள், சம்பிரதாயங்களற்ற எளிய வாழ்வில் இயல்பான மனிதர்களாக நாம் ஆசைப்படுவதானாலும் இச்சமுதாயத்தில் ஒருவராக வாழ்ந்தாகவும் தான் வேண்டியிருக்கிறது. ஆகவே இடையீடுகளைச் செய்வோம்.

## மாயோன் பக்கம்

If you are going through bad time,
don't be too sad, because things will change.
If you are doing good, don't be too happy,
because things will change too.

உங்கள் வாழ்க்கையில் இன்னல்களைச் சந்தித்தால், மிகவும் வருத்தப்பட வேண்டாம், ஏனென்றால் காலம் மாறப்போகிறது.
நீங்கள் நல்லாக இருந்தால், மிக, மிக மகிழ்ச்சியாக இருக்க வேண்டாம், ஏனென்றால் காலம் மாறப்போகிறது என அமெரிக்காவில் கூறுவார்கள்.

இதனையே ஏறக்குறைய ஈராயிரம்
வருடங்களுக்கு முன்பே சங்க இலக்கியத்தில்...
'வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே.
முனிவின் இன்னாது என்றலும் இலமே'

இந்த வாழ்க்கையில் எது,
ஏவர்க்கு, எப்போது, என்னாகும்
என எவர்க்கும் தெரியாது.
இந்த வாழ்க்கை மிகவும்
நிலையற்றது. அதனால்,
இன்பம் வந்தால் மிக்க
மகிழ்வதும் வேண்டாம்...
துன்பம் வந்தால் வாழ்க்கையை
வெறுக்கவும் வேண்டாம்.
வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம்.



- கணியன் பூங்குன்றன் என்னும்
புறநானூற்றுப்புலவர்



## செல்லாக்காசு

ஓய்வூதிய நிதி முழுவதையும்
(provident fund)
பெண்டு பிள்ளைகளிடம்
ஒப்படைத்துவிட்டு
சாய்மணையில் சாய்ந்த கிழம்!

இனிமேல் எனது வாயில் இருந்து
உரத்த சொற்கள் ஒன்றும் வராது
அதுவே என்னை ஆள்பவன் ஆசை
இனி என் பேச்சு இரகசியம் ஆகும்
இதயக்குரல் இனி இசையாய் வெளிப்படும்
- தாகூரின் கீதாஞ்சலி

courtesy Sakthi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வெள்ளை நாய்

- பஞ்சகல்யாணி -
(இலங்கை)

"பிள்ளை இப்ப எத்தினை மணி? அப்பாக்கு முட்டை அவிச்சனியோ?நாய்க்குச் சாப்பாடு வச்சனியோ? புளிஞ்ச தேங்காப்பூ எடுத்து வச்சனியோ?அந்தப்பிள்ளை முட்டை கொண்டரேக்க கேக்கும்".
வெளி வாங்கிலில படுத்திருந்த அம்மா சரிந்து எழும்பும் போது இவ்வளவு கேள்விகளையும் வழமைபோல இடைவிடாமற் கேட்டா.

பொறுமையாகத் தலை இழுத்தபடியே கேட்டுக் கொண்டிருந்தார் நீலு என்ற நீலாம்பரி. அம்மா அப்பாவிற்கு ஒரே பெண்பிள்ளை. முப்பத்தெட்டு வயது. எழுதுவினைஞராகப் பிரதேச சபையில் வேலை செய்கிறார். திருமணம் இன்னும் கைகூடவில்லை. அண்ணா வெளி மாவட்டத்திற் திருமணம் செய்து இருக்கிறார்.
"இப்போ ஏழேகால் மணி அம்மா. எல்லாம் செய்திட்டேன். உங்களுடைய காலமைச் சாப்பாடு உங்கட மேசையிலும், அப்பாவின்ர சாப்பாடு அவருடைய மேசையிலும் வைத்து மூடியிருக்கிறேன்".

"என்ன சாப்பாடு மோனை?"அம்மா இடை மறித்துக் கேட்டார்."புட்டும் கத்தரிக்காய் பொரிச்ச குழம்பும் வைத்திருக்கிறன். குழம்பை அளவாக விட்டுச் சாப்பிடுங்கோ". நீலு தான் வெளிக்கிடுவதற்குரிய ஆயத்தங்களைச் செய்து கொண்டே பதிலளித்தார்.
"எனக்குச் சாப்பாடு மேல மேல வருது. உதைச் சாப்பிட இன்னும் கூடப் போகுது, பணிஸ் வாங்கித் தந்திட்டுப் போ" அம்மா வேண்டுகோள் வைத்தார். "சரி அம்மா, வாங்கிக் கொண்டு ஓடிவாறன்" என்று மோட்டார் சைக்கிளில் பறந்தார் நீலு. வேலைக்கு வெளிக்கிடுற நேரமாகுது. இருந்தாலும் அம்மாவிற்குச் சாப்பாடு வேணுமே.
ஓடிவந்து பணிஸைக் கொடுத்துவிட்டு "மத்தியானம் வருவேன். அதற்குமுன் பசித்தாற் போட்டுச் சாப்பிடுங்கோ. தயிரையும் எடுங்கோ. அப்பா சந்தையால் வந்து கொண்டிருக்கிறார். நான் வெளிக்கிடுறேன். யாரும் தெரியாதவை வந்தால் வீட்டுக்குள் கூப்பிடாதேயுங்கோ, எல்லா இடமும் ஒரே களவு. சொல்லிக் கொண்டே மோட்டார் சைக்கிள் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தார் நீலு.
"அட , பொட்டு வைக்க மறந்துவிட்டன் "என்று அளவான சிவப்புப் பொட்டை உரித்து நெற்றியில் ஒட்டினார். "பிள்ளை உந்தப் பொட்டுப் பெருத்துப் போச்சு. நீ கட்டவுமில்லை. கொஞ்சம் சின்னனா வை"என்று அம்மா சொல்லிக் கொண்டு எழும்பினா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"சரி,வாங்குவம், நான் போட்டுவாறன்" என்று மோட்டார் சைக்கிளை முறுக்கினார்.

முன்பு போலில்லை.இப்பொழுது றோட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். வேறு பாதையும் இல்லை. கொஞ்சம் முந்தி வெளிக்கிட்டாற் தான் நேரத்திற்குப் போய்ச் சேரலாம். பிந்திப் போனால் பல விளக்கம் சொல்லவேண்டி வரும்.

எல்லா இடமும் சல்லிக் கற்கள் பரவியிருந்தது. அதற்கு மேலால் மோட்டார்ச் சைக்கிள் ஒரு நடுக்கத்துடனே போகும். சிலவேளைகளில் சறுக்கியும்விடும். எதிரில வாறவை இங்கை யிருந்து போறவை விட்டுக் கொடுத்தாலன்றிப் பயணம் இன்னும் நீண்டதாகிவிடும். மழையும் பெய்துவிட்டால் நிலமை இன்னும் மோசமாக இருக்கும்.

காலையில் வேலைக்குப் போகும் போது றோட்டுப் போடும் வாகனங்கள் , இயந்திரங்கள் தெருவின் இரண்டு பக்கமும் நிற்கும். சிலர் வாகனத்திற்குள் நித்திரையாய் இருப்பர். சிலர் றோட்டுப் பக்கமாக வேலைகள் செய்து கொண்டிருப்பர்.
ஒரு அழகான, கம்பீரமான வெள்ளை ஆண் நாயும் அவர்களுடன் நட்புப் பாராட்டி வந்தது. சிலவேளைகளில் வெள்ளத்தில் நீச்சலடிச்சு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கும். அதைக்கண்டால் நீலுவின் மனம் துள்ளிக் குதித்தாலும் றோட்டில் கண்ணை வைக்கவேண்டியிருந்ததால் முழுமையாக அதன் விளையாட்டுக்களை அனுபவிக்க முடியவில்லை.
மாலையிலும் வேலை நடந்து கொண்டிருக்கும். ஆங்காங்கே மரத்தடியில் உட்கார்ந்து வேலை யாட்கள் கதைத்துக் கொண்டிருப்பார்கள். சிலவேளைகளில் மெல்லிதாகப் பாடவும் செய்வார்கள். மாதக் கணக்கில் வேலை நடப்பதால் போவோர் வருவோரைத் தெரிந்திருந்தார்கள். அவர்கள் வேற்றூர்க் காரர்கள். யாருடனும் கதைப்பதில்லை. stop (நில்), go(போ) மட்டைகளைப் பிடித்திருப்பவர் "இங்கிட்டு வராமல் மற்றப் பாதியால் வந்திருக்கோணும் " என்பார்.

சென்ற கிழமை நல்ல மழை. றோட்டை மேவி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. மழைப் புகாருக்கை ஒன்றும் தெளிவாய்த் தெரியவில்லை. ஹெல்மெற் முன் கண்ணாடியைத் தூக்கிவிட்டு ஓட வேண்டியிருந்தது. காற்றும் அடித்தது. தூவானம் முகத்தில் ஊசியாய்க் குத்தியது. கழுத்துவழியே தண்ணீர் போய் றெயின் கோட்டிற்குள்ளும் மழை பெய்தது. றோட்டில் பள்ளம் மேடு தெரியவில்லை. பெரிய பள்ளமொன்றில் மோட்டார் சைக்கிள் இறங்கவும் சமநிலை தடுமாறி நீலு மோட்டார்சைக்கிளுடன் விழுந்துவிட்டார். றோட்டு வேலையாட்கள் ஓடிவந்து தூக்கிவிட்டனர்.

"அக்கா நீங்கள் ஒபிஸில வேலை செய்யிறனீங்களோ? மோட்டார் சைக்கிளிற்கு ஏதுமென்றால் இந்த இலக்கத்துக்கு கோல்பண்ணுங்கோ. நாங்கள் உதவி செய்வம்." யாரென்றே தெரியாதவருக்கு உதவ முன்வந்தவர்களையிட்டு நீலுவிற்கு ஒரே ஆச்சரியம்.

"மெத்தப் பெரிய உபகாரம். தேவையென்றால் கோல் பண்றன்" என்றுவிட்டு நீலு போய்விட்டார்.உடுப்பெல்லாம் நனைந்துவிட்டது.வேறுமாற்றுடுப்பும் இல்லை. கடைகளும் அந்தக் காட்டு வெளியில் இல்லை. அந்தப்படியே போக வெட்கமாயும் பயமாயும் இருந்தது. திரும்பி வீட்டிற்குப் போய்வர நேரமாகும். எனவே அப்படியே போய் ஓய்வு அறையிற் கொஞ்ச நேரம் நின்றாற் காய்ந்துவிடும் என்று நினைத்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார். நல்லவேளை மோட்டார் சைக்கிள் ஒரு உபத்திரவமும் கொடுக்கவில்லை.

வேலையிடத்தை அடைந்துவிட்டார். சொல்லிவைத்தாற் போல் மேலதிகாரி அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தார். நீலுவைக் கண்டதும் "Good morning , நல்ல மழை" என்றார். அது நல்ல மழையில்லைக் கெட்ட மழை என்று மனதிற்குட் சொல்லிக் கொண்டு "good morning sir" என்று சொல்லிக் கொண்டு றெயின் கோட்டுடனே உள்ளுக்குச் சென்றார்.
சிறிது நேரத்தில் நீலுவை மேலதிகாரி அழைப்பதாக உதவி யாளர் சொன்னார். தான் கழிவறைக்குச் சென்றுவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு ஓய்வறை மின்விசிறியின் கீழ் நீலு பதட்டத்துடன் நின்றார். சிலவேளை அந்தாள் இங்க வந்தாலும் வந்துவிடுவார் என்று கதவைப்பூட்டிவிட்டு நின்றார்.
மீண்டும் கதவு தட்டப்பட்டது. சகபாடி ஒருவர் உங்களை சேர் தேடுகிறார் என்றார்.
கண்ணாடியில் ஆடைகளைச் சரிபார்த்து விட்டு நீலு சென்றார்.

"தாமதமாகியதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார் நீலு." நான்தான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். நீண்ட தூரத்திலிருந்து வரச் சிரமப்படுகிறீர்கள் போற் தெரிகிறது. நான் உங்களிற்கு என்ன உதவி செய்ய வேண்டும்? எதுவென்றாலும் கேளுங்கள்." என்றார் மேலதிகாரி.
நீலு எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தார்.
"உங்களிற்கு வாகனம் ஒன்று அனுப்பவா?"மௌனத்தைக் கலைத்தார் அவர்.
அவரை அறியாதவர் போல் இடமாற்றம் வேண்டுமென்று தயங்கினார் நீலு.
கோபம், ஏமாற்றம் எல்லாம் கலந்ததொரு உணர்ச்சி மேலதிகாரி முகத்தில் ஒருகணம் ஓடி மறைந்தது.
"சரி பார்க்கலாம் " என்றார் வாயைக் கோணலாக்கியபடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தபந்தங்களும் வெளிநாடு போக, அண்ணனும் கல்யாணம் செய்து வேற்றூர் போகத் தனித்துவிடப்பட்ட ஒரு குடும்பம் போல வயது முதிர்ந்த தாய் தந்தையருடன் வேலையும் வீடுமாக வாழ்ந்து வந்த நீலுவிற்கு வேலையிடமும் வாய்ப்பாக அமையவில்லை. குடும்பகாரர் தம் குடும்பக் கதைகளும், இளம்பிள்ளைகள் தம் காதற்கதைகளுமாக இருக்க நீலு எந்த வகையென்றில்லாமற் தன்பாட்டிலேயே இருப்பார். பேச்சுத்துணையும் கிடைக்கவில்லை. தானாகப் போயும் கதைப்பதில்லை. வீண் வம்பை விலைக்கு வாங்குவானேன் என்ற கொள்கை. இருந்தாலும் தன்னை அடிக்கடி மேலதிகாரி அழைத்துக் கதைப்பது மற்றவர்களுக்குச் சிறிது வயிற்றெரிச்சலை கிளப்பியது நீலுவுக்குத் தெரியாமலில்லை.

காலமும் ஓடியது. மீண்டும் மேலதிகாரியிடமிருந்து அழைப்பு. கதவைத்தட்டிவிட்டு உள்ளே சென்றார்.

"வாங்கோ, இருங்கோ, சாப்பிட்டுவிட்டீர்களா? உங்களுடன் ஆறுதலாகக் கதைக்கோணும் என்றிருக்கிறேன். இண்டைக் குத்தான் நேரம் கிடைத்தது. நேராகவே விடயத்திற்கு வருகி-றேன். எவ்வளவு காலம்தான் கல்யாணம் செய்யாமல் இருப்பீர்கள். உங்களிற்கும் உணர்ச்சிகள் இருக்கும்தானே. அதை நீங்கள் கஷ்டப்பட்டு அடக்குவீர்கள். அப்படித்தானே? ஏன் அப்படி அடக்க வேண்டும்? நீங்கள் துறவி இல்லைத்தானே. என்னுடன் adjust பண்ணி இருங்கோவன். இரண்டு பேரும் சந்தோசமாக இருக்கலாம். இங்கு வந்த நாளில் இருந்து எனக்கு உங்கள் மீது ஓர் ஈர்ப்பு. உங்கள் அழகு, அமைதி, நேர்த்தி எல்லாம் எனக்கு நிறையவே பிடித்திருக்கு. மனுசி பிள்ளையளுக்குத் தெரியாமற் பார்த்துக் கொள்வேன்." என்றபோது என்ன உலகமடா இது என்று தலை சுற்றியது. மௌனமாகவே எழுந்து வெளியேறினார் நீலு. கண்களில் முட்டியிருந்த கண்ணீரைத் துடைத்துவிட்டு ஒன்றும் நடக்காதவர் போல் மேசைக்குச் சென்றார்.

இவ்வளவு கீழ்த்தரமாகப் போகப்பொருள்போலத் தன்னைப் பார்த்துக் கதைக்கிறாரே, இவரெல்லாம் என்னத்தைப் படித்தாரோ என்று நீலு சலித்துக் கொண்டார். அடுத்த இடமாற்றலுக்காகக் காத்திருந்தார்.

றோட்டும் அழகாக வந்து கொண்டிருந்தது. நீலு அவ்வழியே போக வர வேலையாட்கள் மெல்லிதாகக் கோண் அடித்து நட்புப் பாராட்டினார்கள். நீலுவின் உதட்டிலும் சிறு புன்னகை பூத்தது. வெள்ளை நாய் கூட சிறிது தூரம் நீலுவின் பின் ஓடிவந்தது. நண்பர் சூழ் உலகம் எவ்வளவு அழகானது, இனிமையா னது என்று எண்ணிச் சிரித்தபடியே நீலு பயணித்தாள். அவளையறி யாமலே ஓர் உற்சாகம் தொற்றிக் கொண்டது. கோண் அடிக்காவிடில் மனம் துவண்டு போனது. அது என்னவிதமான உணர்வு என்று அனுமானிக்க முன்பே றோட்டுப் போட்டு முடிந்துவிட்டது. அவர்கள் சென்றுவிட்டார்கள். வெள்ளைநாய் அந்த றோட்டில் யாருக்காகவோ காத்திருந்து பார்த்தது. பழைய துள்ளலோ தொடரலோ எதுவும் இல்லை.

அன்றொருநாள் தெருவோரத்தில், அது விழுந்துகிடந்தது. இறந்து போயிருக்குமோவென்று நினைத்து இறங்கிப்பார்த்தார் நீலு. இன்னும் உயிர் இருந்தது. தன்னுடைய சாப்பாட்டை அதன் அருகில் வைத்தார். அது உண்ணவில்லை. இவ்வளவு நாளும் தான் அதைச் செய்யவில்லை என்று மனம் நொந்தார். ஒருவேளை சாப்பிட்டு நன்றாக இருந்திருந்தால் அந்த உறவு இறந்திருக்கமாட்டாது என்று கண்ணீர் வடித்தார். வெள்ளைநாய் இறுதி மூச்சைவிட்டது. நீலுவிற்கும் இடமாற்றம் வந்தது.

●

வளர் : 5

எழுத்து ஒப்பு நோக்குனர்
– சாந்தா முருகானந்தன்
– புனிதா கணேஸ்

படங்கள் மற்றும் ஓவியங்கள் :
நன்றி : முகநூல் மற்றும் google picture;

**'வளர்' வாசகர்களுக்கு,**
நீங்களும் எழுதலாம்!
வரவேற்கிறோம்.



புகைப்படம் : சஞ்சயன்

அட்டையில்...
நோர்வேயில் அரங்கேறிய
கவிதா லக்சுமியின்
"சூர்ப்பணகை' நாடகத்தில் தோன்றிய
துஷாந்தி தவேந்திரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரசிப்பும் வாசிப்பும்

ராஜ்[6] கௌ.



நான் சிறுவனாக இருந்தபோது வாசிப்பின் வெறியனாக இருந்தேன். யாழ் நூலகத்தின் கைதியாக வாழ்ந்தேன் என்று எப்போதும் சொல்வதில் எனக்கு அதிக மகிழ்வு. ஆனால் இந்த யாழ்ப்பாண நூலகத்தின் அழிவு எனது கலாசாரத்தின் ஓர் பகுதி அழிவுதான். நூலகம் என அழைக்கப்பட்டாலும் இது ஓர் பல்கலைக்கழகமே.

எனது இரண்டு பள்ளிகளும் எனக்கு இலக்கிய வெள்ளிகளே, ஆம், யாழ்ப்பாண நிலத்தில் விளைத்தவைகளே. அங்கு நான் இலக்கண வயலில் இலக்கிய முத்துகளைக் கடித்தேன் எனச் சொல்லமாட்டேன், சுவைத்தேன். இந்தச் சுவைப்பு மீது தமிழில் மிகவும் சிறப்பாகச் சொல்லியவர் டி.கே.சி யே (டி.கே.சிதம்பரநாத முதலியார்). கி.ரா இவர் பின். ஆம், கி.ரா, தனது நூலான "கி.ரா கட்டுரைகள்" இல் டி.கே.சி மீது ஆழமாகவும் அழகாகவும் எழுதியுள்ளார்.



ரசிகமணிதான் டி.கே.சி. இவரது சிந்தனைப் பண்பு அடக்கமானது, தூய்மையானது, விழிக்கத் தூண்டுவது, புரட்சிகரமானது. இவர் அதிகம் பேசி, அதிக நூல்களை எழுதாதவர்.

இவர் மீது கி.ரா தனது நூலில் இப்படி எழுதுகின்றார்: "டி.கே.சி. எழுதியது கொஞ்சம். அதோடு அவருக்கு அதன்பேரில் பெருத்த நம்பிக்கையும் கிடையாது. காரணம் எழுத்தில் அவற்றையெல்லாம் கொண்டுவர முடியாது என்னும் ஓர் எண்ணம் இருந்தது. கல்கி கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள்தான் ரசிகமணியை உத்ஸாகப்படுத்தி எழுதவும் வைத்தார்கள் எனவும் சொல்லலாம்."

நான் சில மொழிகளை சிறிதாக அறிந்து சொற்களது மேன்மைகளைத் தரிசிப்பவன். சொற்கள் என்பன நூல்களில் மட்டும்தான் உள்ளன எனக் கருதும் போக்கு எனக்கு இல்லை. இவைகள் எங்கும் வாழும். டி.கே.சி சொல்களது பொருள்களை ஆழமாக அறிந்து, இந்தச் சொற்களைத் தனது பாயில் உறங்கவிட்டு, தன் உரைகளால் யாவரையும் மயக்கியவர். எனது சங்க இலக்கிய வாசிப்புகளின் பின், டி.கே.சி இனை ரசனை எனும் கலைப் பேடகமாகவும், இலக்கியப் பண்புகளைக் காக்கும் சிலரில் ஒருவர் என நினைக்கின்றேன்.

பழைய தமிழ்ப் பதிப்புகளில் இவர் தந்த திருத்தங்கள் துணிச்சலானவை. கம்பரது பாடல்கள் தொகுப்பில் இடம்பெறும் கம்பர் பாடாத பாடல்களையும் துணிவாக நீக்கியுள்ளார். பழைய தமிழ் எழுத்துக்களில் இவருக்கு இருந்த அக்கறை ஆழமானது, நவீனமானது. தமிழ் மொழியின் நிபுணர்கள் டி.கே.சி இனை ஓர் கடவுளாகவே வணங்குகின்றனர்.

தமிழில் ஓர் திறனாய்வு எப்படி இருக்கவேண்டும் என டி.கே.சி சொல்வதை எமது திறனாய்வாளர்கள் நிச்சயம் வாசிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.ரா. சொல்கின்றார்: "ரசிகமணியின் திறனாய்வு வித்தியாசமானதுதான். அது படைப்பாளிக்கும் திறனாய்வாளனுக்கும் இடையே அம்மா-பிள்ளை உறவைப் போன்று இருக்கும். பயிர் முகத்தைப் பார்க்கும் சம்சாரியின் மனசைப் போல் இருக்கும். ஆரம்பப்படைப்பாளனைக் காணும்போது, ரொம்பவே தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துவார். குழந்தை நடக்கத் துவங்கும்போது எந்தக் காலடியை எடுத்து வைத்தாலென்ன? "முத முதலில் எடது காலையா எடுத்து வெச்சே, செனியனே" என்று எந்தத் தாயும் சொல்வதில்லை."

தமிழ் எழுத்துகளின் செம்மையை வேறு மொழிகளின் கலப்பினால் உயர்த்திய பல எழுத்தாளர்கள் பலரால் கண்டிக்கப்பட்டாலும், இந்தக் கலப்பினை அதிக தமிழ் எழுத்தாளர்கள் விரும்புகின்றனர். டி.கே.சி, கி. ரா, லா.சா.ரா எழுத்துகளிலும் காணலாம். எனது அனைத்து எழுத்துகளிலும் பிற மொழிகளின் கலப்புகள் உள்ளன. இந்தக் கலப்புக் கலாசாரம் எமது மொழிகளிற்கும் அவசியம், எமது வாழ்வியலுக்கும் அவசியம்.



ரசிப்பு என வரும்போது இலங்கையின் திறனாய்வு இலக்கியச் செல்வரான ஏ. ஜே. கனகரத்னாவை மறக்க முடியாது. இவரோடு கழித்த பல தினங்கள் மிகவும் இனிமையானவை. தனது ஆழத்தை வெளியில் காட்டாமல் சிம்பிளாக இருப்பவர். இவரது மொழிபெயர்ப்புகளில் மிகவும் சுத்தமான தமிழ் இருக்கும். ஆங்கில மொழியின் மொழிக் கலப்பியல் மீது தனது மொழிபெயர்ப்பு நூலான "மத்து"வில் வழங்கிய ஓர் மொழிபெயர்ப்புக் கட்டுரை ("The Triumph of the English Language by Richard Foster Jones" - ஆங்கிலம் வெற்றிவாகை சூடிய வரலாறு) எமது சுத்த மொழிப் பைத்தியத்தனங்களை உடைப்பன. Rasaratnam Krishnakumar இனது வீட்டில் ஏ. ஜே தனது கடைசிக் காலங்களில் வாழ்ந்தவர். குமார் இவர் மீது எழுதிய சில கட்டுரைகள் எழுத்து ரசனையின் ஆளுமையைக் காட்டுவனவே. இவரது முக நூலில் நீங்கள் எழுத்தின் நடனங்களை மிகவும் ரசிக்கலாம். இவர் தன்னை எழுத்தாளன் என ஒருபோதுமே சொன்னதில்லை.

*

நான் இப்போதும் சிறுவன். ஆனால் வாசிப்பின் விந்தைகளை எமது இணையக் காலனித்துவம் உடைக்கின்றது. ஓர் நூலைக் கையில் எடுத்து வாசித்தல் என்பது சொற்கள் மீதான தியானிப்பே. அதிகம் வாசிப்பது அவசியம் இல்லை என்பது என் எண்ணம். (பின்பு நான் இலக்கியச் சூழலியல் மீது ஓர் பதிவு தருவேன்.)

கூறியவைகளை மீண்டும் கூறுவதில் வாசிப்பு இன்பம் என்பதே இருக்காது. ஆம், நான் எமது புதிய எழுத்துகள் மீதுதான் கூறுகின்றேன். நோக்குகள் ஓர் வாசிப்பு இயல் என நாம் தெரியாத வேளையில், எழுத்து வாசிப்பு என்பதை நாம் முதலிடத்தில் இருத்த முடியாது.

எனது ஓர் அனுபவம் மீது சிறிதாகச் சொல்வேன். இது ஜோ.டி.குருஸ் மீது. கடல் அனுபவம் அதிகம் தெரிந்த மனிதர் இவர். தமிழ் நாட்டுக்குச் சென்றபோது இவரது "ஆழி சூழ் உலகு" எனும் நாவலை வாங்கிச் சில பக்கங்களை வாசித்து மயங்கினேன். இந்த மயக்கம் ஆழமானது. இந்த ஆழம்தான் இவரது நூலை இப்போதும் முழுமையாக வாசிக்க வைக்காமல் உள்ளது. ஆம், பல பக்கங்கள் எமக்குத் தேவை இல்லை, சில பக்கங்களே எமக்குப் போதும்.

Karl Marx மீது வருவோம். இவர் எனது தோழர், இவர் எனது நண்பர். கடினமான செய்திகளையும் இலகுவாகச் சொல்லும் நிபுணர். இவரது "மூலதனம்" எமது மனித வாழ்விற்குக் கிடைத்த ஓர் மிகப் பெரிய கொடை. இவரது அனைத்து எழுத்துகளும் என்னிடம் உள்ளன. பல பக்கங்கள் வாசித்து இப்போதும் வியந்துகொண்டு உள்ளேன். ஏன் இவர் எமது கடவுள் ஆக வராமல் உள்ளார்?

வாசிப்பு: எனும் சொல் மீது நாம் அதிகம் எழுதலாம்.

சரி, வாசிப்பு என்பது எழுத்தால் நிகழ்வது என்பது எமது பொதுக் கணிப்பின் உண்மைதான். ஆனால் இதனை எமது விழிகளது அனைத்தின் தரிசிப்புகள் எனக் கூறலாம்.

நான் கடலை , சுடலையை, மலர்களை, பிணங்களை, விபச்சாரிகளை, நிலத்தில் கிடந்தவர்களை வாசித்தேன் என்பது தவறா?

நான் பல ஆச்சிகளைக் கண்டேன். இவள்களிற்கு பேனா தெரியாது. இவள்கள் எனக்குத் தந்த கதைகள் உலகின் மிகப் பெரிய கதைகள்.

அட, இன்று இலக்கியம், எழுத்து என்பன எவை? அதிகமான சுத்துமாத்துகளே. எழுதுபவர்கள் வாசகர்களைத் தேடுவார்கள். ஆனால் சில எழுத்தாளர்களே இவர்கள் மீது மதிப்பை வைத்திருந்தனர்.

('le client est roi') வாங்குபவன் மன்னன் எனப் பிரெஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் சொல்லப்படுகின்றது. இந்த "வாங்குபன்" எனும் சொல் ஓர் வணிக விதியின் சொல்லே. இந்தச் சொல்லை நாம் இலக்கிய உழைப்புகளிலும் காணலாம். தமிழர்கள் வாழும் நாடுகளில் நூல் விழா ஓர் சந்தை விழாவே. ஆம், வாசிப்பை வணிகமாக்கும் விழாவே. எழுத்து என்பது எனது நோக்கில் ஓர் மேலாண்மை நோக்காகவும் இருக்கலாம். இந்த ஆண்மையின் கைதிகள் வாசகர்களே.

திரு Kandasamy R எழுத்தின் மிகப் பெரும் ரசிகர். முகநூலில் இவரது சிறிய பதிவுகளில் நான் எப்போதும் மகிழ்வேன். சிறிது எப்போதும் பெரிய சிந்தனைகளை உருவாக்கும் என இவர் கருதுகின்றார் என்பது என் எண்ணம். அண்மையில் இவர் தந்த ஓர் பதிவு, வாசகர்கள் எவ்வாறு எழுத்தாளர்களது அடிமைகளாக உள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றது. இப் பதிவினை நன்றியுடன் தருகின்றேன்.

"சென்னைப் புத்தகக் கண் காட்சியில் எந்த புகழ் பெற்ற எழுத்தாளராவது இதுவரையில் தனது அனைத்து நூல்களையும் வாசித்து முடித்த வாசகரை வைத்து அவரது புத்தகத்தை வெளியீடு செய்வாரா என்று தேடினால் ஒருவர் கூட இல்லை. எந்தப் பதிப்பாளராவது தனது பதிப்பக நூல்களை அதிகம் வாங்கிப் படித்த வாசகரை அழைத்துப் பெருமைப்படுத்தி உள்ளாரா? தெரியவில்லை.



எழுத்தாளர்கள் பதிப்பாளர்களையும், பதிப்பாளர்கள் எழுத்தாளர்களையுமே சுற்றி வருகிறார்கள். ஆனால் இருவருடைய பிழைப்பும், புகழும் வாசகர்கள் கையில் உள்ளது என்பதை பெரும்பாலானோர் மறந்து விடுகிறார்கள். வாசகர்களுக்கு இருவரும் கடவுளைப் போலக் காட்சி தருவதோடு சரி. ஆனால் தமிழ் நாட்டில் யாருக்குமே வாசிப்பதில் ஆர்வம் இல்லை என்று குறை சொல்கிறார்கள். வாசகர்களை ஊக்குவிக்க இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தால் பெரிதாக ஒன்றும் இல்லை. சிலர் விதிவிலக்காக இருக்கலாம்.

வெளிநாடுகளில் இருந்து விமானங்களில் பறந்து வந்து தனது நூல்களைப் புகழ் பெற்ற எழுத்தாளர்களை வைத்து வெளியீடு செய்யும் பணக்கார அரைகுறை எழுத்தாளர்களுக்குக் கிடைக்கும் மதிப்பு தமிழ் நாட்டில் ஒரு கிராமத்தில் வசிக்கும் ஒரு ஏழை எழுத்தாளனுக்குக் கிடைப்பதில்லை.
பணமே வாழ்க்கை என்றாகி விட்டது. இலக்கியமும் வியாபாரமே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை."

(வளர் இதழாளர் மனோ சின்னத்துரை அவர்களின் வேண்டுகோளை மதித்து "வாசிப்பு" எனும் முகநூல் சிறிய பதிவு சிறிது பெரிதாக்கப்படுள்ளது. - ராஜூ கௌ.)



# 'நடிகமணி' வி.வி. வைரமுத்து நூற்றாண்டு நினைவு

*3000 இற்கும் அதிகமான தடவைகள் மேடையேற்றப்பட்ட "மயான காண்டம்" இசை நாடகத்தில் நடித்தவரும்*
*'நடிகமணி'*
*'நாடகச் சக்கரவர்த்தி'*
*'நடிப்பிசை மன்னன்'*
*'நாடக தீபம'*
*'கலைக் கோமான்'*
*'நவரச திலகம் '*
*'நாடக வேந்தன்'*
*'நடிப்பிசைச் சக்கரவர்த்தி'*
*'முத்தமிழ் வித்தகர்'*
*"கலாநிதி"*
*போன்ற பட்டங்கள் பெற்ற நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களின் நூறாவது அகவை நாள் 11.02.2024 அன்று சுவிஸ் தமிழ் நாடகக்கல்லூரியால் வலைதள செயலி மூலமாக கொண்டாடப்பட்டது.*

*இலங்கையின் மிகச்சிறந்த இசை நாடகக் கலைஞராகக் கருதப்படுபடும் இவர் அரிச்சந்திரனாகத் தோன்றி நடித்த 'மயான காண்டம்' எண்ணற்ற தடவைகள் மேடையேற்றப்பட்ட இசை நாடகமாகும். தனது இனிய குரல் வளத்தால் பாடி, உருக்கமாக வசனங்கள் பேசி நடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வளர் – இதழ் 05 தொடர்பாக …

# நிறை 100 / குறை 10

**அன்புடன் 'வளர்' சஞ்சிகை, ஆசிரிய குழுவிற்கு,**

## நிறை 100

1. வளர் 5 இதழை, முழுமையாகப் படித்து முடித்தேன். மன நிறைவையும், நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் தருகிற இதழாகவே இருக்கிறது. இலவசக் கல்வி பற்றி சிந்திக்க வைக்கிற ஆசிரியர் தலையங்கம், ஏதாவது செய்ந்நன்றி செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

2. ஆலகாலன், இன்றைய நமது நிலையை வெளுத்து வாங்கியிருக்கிறார். ஏற்கவும் தயக்கம். மறுக்கவும் முடியவில்லை என்ற குற்றவுணர்வை ஏற்படுத்துகிற எழுத்து அது. நம்மை உரசிப் பார்க்க, ஆலகாலன் தொடர்ந்து எழுதட்டும்.

3. தர்மினி, தீபிகா என்கிற இரண்டு பெண் கவிஞர்களது கவிதைகளும், எளிமையாக, கனதியாக இருந்தன. இரவிலாவது, யுத்தங்களை நிறுத்தக் கேட்கிற தர்மினியின் கவிதை, சிந்திக்க வைத்தது.

4. அகரனின் கதை அருமை. பெரும்பான்மைப் பார்வையை, இறுதில் உடைத்தெறிகிற முடிவு அழகு. மனோவின் நெடும்பயணம், பழைய பாதச் சுவடுகளை, திரும்பிப் பார்க்கிற அனுபவம். நன்றாகவே போகிறது.

5. 'அமெரிக்க கனவும், எதிர்க்கனவும்' என்ற கட்டுரை, புதுமையானதாகவும், வித்தியாசமாகவும் இருந்தது. இறுதியில் டொமினிக் ஜீவாவை முடிச்சிடுகிற இடம், யோசனையில் ஆழ்த்தியது.

6. நூலறிமுகங்கள், வாசிக்கத் தூண்டுவனவாக இருந்தன. ஆனால், எங்கு கிடைக்குமென்கிற விபரங்களை கண்டடைய வேண்டியிருக்கிறது.

7. அட்டைப்படச் சிறுமி அற்புதம். பொருத்தமான தேர்வு. மலையகம் 200 கட்டுரையில், கருணாகரன் முன் வைக்கிற விடயங்களும் முக்கியமானவையாக இருந்தன.

8. ரமேஸ் எழுதிய நல்ல தம்பிப் புலவர், அரிய தகவல்கள். இப்படியான ஆளுமைகள் வெளிச்சத்திற்கு கொண்டு வருவது பயனுறு பணி.

9. மற்றைய ஆக்கங்களும், ஒவ்வொன்றும், வெவ்வேறு விடயங்களை எடுத்துரைக்கின்றன. பல புதிய பெயர்கள் எழுதுவது ஆச்சரியமும், மகிழ்ச்சியும். குறிப்பாக கணிசமான பெண்கள் பங்களித்திருக்கிறார்கள். வாழ்த்துக்கள்.

10. உலகெங்குமிருக்கிற தமிழ் ஆளுமைகளில், சிலரை கண்டடைந்து, செவ்வி கண்டு பிரசுரிக்க, வளர் களமிறங்கலாம். பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பாரம்பரியக் கலைஞர்கள் என்று கூட செவ்வி கண்டு, நடைமுறை உலகுகளை, இனங்காட்டலாம்.

11. பட்டிமன்றத்தலைப்புகள், சமகாலசமூகஎதிரொலி. ஒரு வகை நுண்ணிய இலக்கிய விமர்சனமது. பாராட்டுக்கள்.

12. 'மணக்குது' குறுங்கதை, சொல்கிற செய்தி பெரியது. அது, விரிவாக பேசப்பட வேண்டும். 'அம்மா எழும்புங்கோ' என்பதுவும் அப்படியான ஒன்று தான்.

13. மாயோனின், சர்க்கரைக் குறளை வெகுவாக ரசித்தேன். புனிதா கணேசின், அந்தப் பெட்டிக் கவிதையும், புரிவது போல இருக்கிறது. ஆனால், அது சரியான புரிதல் தானா? என்பதை உறுதியாக சொல்ல முடியவில்லை.

14. சிறுகதைப் போட்டி மற்றும் நினைவுப் பரிசுகள், அதியற்புதச் சிந்தனை. பெரும்பாலான மாணவர்கள் பங்குபெறச் செய்ய வேண்டும். வளர் தாண்டிய, விளம்பரக் குறிப்புக்கள் தேவை என்றே, நினைக்கிறேன். விசாரிக்க.

15. வளரில் பங்கெடுத்த அனைவருக்கும் உற்சாக வாழ்த்துக்கள். வளர் – 6 ற்கான, எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறது வளர் – 5.
கூடவே, பொறுப்பையும் அதிகரிக்கின்றது என்ற விடயத்தையும் நினைவில் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறை 10

1. சொற்களுக்கிடையே இடைவெளிகளின்மை, கல்வியின்நோக்கம்என்ன?என்றதொடக்கத்திலேயே ஆரம்பித்து, எங்கும் விரவியிருக்கிறது.

2. 'காப்காவின் நாய்க்குட்டி' யை, சுருக்கியிருக்க வேண்டும்.

3. ஆலகாலன் பக்கத்தில், பிசி, கலோவின் போன்ற சொற்கள் பேச்சு வழக்குக்காக அப்படியே பயன்படுத்துவதாக இருந்தால், ஏன் ஆங்கில மொழி யிலேயே பயன்படுத்தக் கூடாது ?

'போகி– –றோம்' என்று, இப்படி சொற்களை பிரித்து எழுதுவதை, தவிர்க்க வேண்டும் அவர்.

4. வித்தகபுரத்தானின் கட்டுரையில், ஒரு மொழி பெயர்ப்புத் தன்மை காணப்படுகிறது. 'மற்றும், மற்றும் ' என்று வருகிற மொழிக்கையாடல் அதை உணர்த்துகின்றது.

5. 'பிரெஞ்சு மொழிக்கான சர்வதேச மாதம்' , கட்டுரையின் உப தலைப்பொன்றில், ஓர் எழுத்தைக் காணவில்லை.

6. அசவு – அகராதியை அப்படியே தராமல், எம் முதியவர்கள் அந்தச் சொற்களைப் பயன்படுத்திய நடைமுறைகளை எழுதினால், சுவாரசியமாக இருக்கும்.

7. கலாசாரம் – கலாச்சாரம் இரண்டையும், வெவ்வேறு கட்டுரைகளில்...வளர்–5 தாங்கி நிற்கிறது. சரியானதில் வேரூன்ற வேண்டும்.

8. அஞ்சனத்தில், 'அழுகை மரத்தின் விழுதுகள் போல ' என்றொரு உவமை வருகிறது. அது சரிதானா ? எங்கிருக்கிறது அந்த மரம்? சரி பார்க்க.

9. பட்டிமன்றக் குறிப்புக்களில், மாணவர்கள் – மாணவர் இரண்டையும் பயன்படுத்துகிறீர்கள். மாணவர் பன்மையெனில், அனாவசியமாக 'கள்' விகுதி தேவையில்லை. சொற்புணர்ச்சி வழுக்கள், எழுத்துப் பிழைகள் சில உண்டு. கவனிக்க.

உ+ம் = புலமைபரிசில், முன்னேற்றத்திற்கு (வேறுமுண்டு. பார்க்க )

6வது பட்டிமன்றக் குறிப்பில், தவறவிட்ட ஒரு காற்தரிப்பு (,) ஏற்படுத்துகிற வாசிப்பு இடையூறை கூர்ந்து கவனிக்க.

10. ஜெயரதனின் கட்டுரையிலும், மொழிபெயர்ப்புத் தன்மையை உணர முடிகிறது. தலைப்பின் எதிர்பார்ப்பை, உட்கிடக்கை பூர்த்தி செய்யவில்லை.

11. 'மொழியைத்தக்க' இது ஒரு சொல் கிடையாது. 'தாய் மொழியைத் தக்க வைக்க ' இப்படி பிரிந்து தான் ஆக வேண்டும். வடிவமைப்பு பிரச்சனை வந்தால், சொற்களை சுருக்கலாம், மாற்றலாம். (ஆக்கதாரி அனுமதியுடன் ) இவ்வாறு, முறை தவறிய சொல்லிணைப்புக்கள், சொல்லிடைவெளிகள் தமிழுக்கு இழைக்கிற தீங்கு தான். மாற்றுக் கருத்தில்லை.

12. Chatgpt உருவாக்கிய கட்டுரைப் பகுதியை, வன்மையாக கண்டிக்கிறேன். இது ஒரு தவறான, மோசமான முன்னுதாரணம். வளர் இதற்கு துணை நிற்கக் கூடாது. அதுவும், ஒரு இலக்கிய சஞ்சிகை, இப்படியான கட்டுரைகளை, இரக்கமின்றி மறுக்க வேண்டும். வேறு தேவைகளுக்கு, chatgpt பயன்படலாம். இலக்கியத்திற்கு, படைப்பிற்கு அது அனாவசிமானது. படைப்பன் உயிர்ப்பிற்கு, அழகியலுக்கு எதிரான, ஒரு போலிமை அது. இனி– வரும் காலங்களில், இவற்றை தவிர்ப்பதே நல்லது.

13. 'மற்றும் – மற்றும்' கள் வளரெங்கும் பரவலாக கிடக்கின்றன. அந்தந்த எழுத்தாளர்கள், இந்த 'மற்றும்'களை குறைக்க முயற்சிக்கலாம்.

14. இயன்றவரை, 'தொடரும்' வகை, கட்டுரைகளைத் தவிர்க்கலாம். சுருக்கி எழுதுவது நிறைசவால் தான். எனினும், இன்றைய காலத் தேவை அதுவே. காலாண்டிதழில், தொடரும்.... வகைகள் அர்த்தமற்றது. தவிர்க்க நினைப்பதும், தவிர்ப்பதும் சிறப்பு. சிந்திக்க.

15. அட்டைப்பட ஓவியர்களை, அவர்களின் படங்களோடு, சிறு குறிப்புக்களோடு அறிமுகப்படுத்த வேண்டியது, அந்த ஓவியருக்கு கொடுக்கிற மரியாதை. ஒளி பாய்ச்சல். ஊக்குவிப்பு. செய்யத் தவறாதீர்கள்.

16. எழுத்துப் பிழை தவிர்ப்பிற்கான மேலதிக வழி. அத்தந்தப் படைப்பாளிகளுக்கு அவர்களது படைப்புக்களை மட்டும் அனுப்பி, ஒப்பு நோக்கச் செய்தல். அவர்களையும் பொறுப்புடையவர் களாக்குதல். இலக்கணமற்று இலக்கியம் கிடையாது. அது, எழுதுகிற எல்லாப் படைப்பாளிகளுக்கும், அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

நன்றி

**நா..பிரவீன்குமார்**
– ஓய்வு நிலை ஆசிரியர் –

உரையாடுங்கள்!
கற்றுக்கொள்வதற்காக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயம்! ஆனால் உண்மை!!




# தாய்க்குச் சேய் தரும் காப்பு


- புனிதா கணேஸ் -
(இங்கிலாந்து)


இங்கிலாந்தின் சந்தடி மிகுந்த இலண்டன் மாநகரின் ஒரு வறுமைப்பட்ட கிராமத்தில் வசித்து வந்த ஆபிரிக்கப்பெண்மணி லில்லிக்கு நிரந்தர வேலை எதுவுமிருக்க வில்லை. இரண்டாவது குழந்தை பிறந்த பொழுதுடன் அவளுடைய கணவன் பொறுப்புச் சுமக்க முடியாதோனாய்க் காணாமல் போயிருந்தான்.

அரசாங்கம் வழங்கும் உதவிப் பணத்தைக் கொண்டு தன் குழந்தைகளையும் தன்னையும் காப்பாற்றி வைத்துக் கொண்டிருந்தாள் லில்லி. எப்போதாவது தனக்குத் தெரிந்தவர்களின் வீடு-களைச் சுத்தப் படுத்துவதில் அவளுக்குச் சிறிது பணம் கிடைத்தது.

அவளுடைய இரண்டாவது குழந்தை பிறந்து பத்துப் பதினொரு மாதங்களாகிய நிலையில் அவள் தன்னால் உடம்பிற்கு இயலாமல் இருக்கின்றது எனக்குடும்ப வைத்தியரை நாடினாள். அவள் விழிகளின் வெண்திரை மஞ்சள் முற்றி இருந்தது. உடல் மெலிந்து வயிறு உப்பிக் கிடந்தது. பாதங்கள் வீங்கிக் கிடந்தன. குழந்தையைத் தூக்கி இடுப்பில் சுமக்க முடியாமல் சுமந்த படி நின்றிருந்தாள்.

சிறுநீரைச் சோதித்த மருத்துவர், புரதம் அதிகமாக இருப்பதாகவும், ஈரல், சிறுநீரகம் பாதிக்கப் பட்டிருக்கக் கூடும் என்பதால் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும் என்றார். புற்றுநோயாகக் கூட இருக்கலாம் என்ற மருத்துவரின் எச்சரிக்கை லில்லியைக் கலவரப் படுத்தியது.

அவள் உடனடி சிகிச்சை (Emergency care) வழங்கும் பிரிவில் அனுமதிக்கப் பட்டாள். குருதிப் பரிசோதனை நடந்தது. அவளை சிறுநீரகப் பிரிவிற்கு மாற்றினர். சிறுநீரகங்கள் கழிவை வெளியேற்றாமல் விட்டதால், குருதியை வெளியே எடுத்துச் சுத்தமாக்கி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தது எந்திரம் (Dialysis machine). குருதிப் பரிசோதனைகள் அவளின் ஈரல் முற்றாகச் செயலிழக்கத் தொடங்கியிருக்கிறது என்று தெரிவித்தன. ஈரல் மாற்றுச் சிகிச்சை செய்யாவிடின் லில்லி உயிரை இழக்க நேரிடலாம் எனவும் அச்சுறுத்தின.

ஈரல் மாற்றுச் சிகிச்சைக்காக அவள் வேறு வைத்திய சாலைக்கு மாற வேண்டும். இரு கிழமைகள் கடந்தோடியும் ஈரல் மாற்றுச் சிகிச்சை நிகழவில்லை. லில்லிக்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளைப் பற்றிய கவலை. இறக்கப் போவது உண்மையெனின் இருக்கும் வரை குழந்தைகளோடு அவர்கள் அருகில் இருக்க வேண்டும் என எண்ணினாள். ஒருநாள் அவள் அனுமதிக்கப் பட்டிருந்த சிகிச்சைப் பிரிவிலிருந்து சொல்லாமற் கொள்ளாமல் புறப்பட்டு வீடு வந்து சேர்ந்து விட்டாள். வைத்தியசாலையில் அவர்கள் தேடிக் கொண்டிருந்த பொழுது தனக்கு வீட்டில் இருந்த படி இறப்பதுவே தன் இறுதி ஆசை எனக் கூறி விட்டாள். ஒருவருடைய தனி விருப்பின்படி மருத்துவ சிகிச்சையை ஏற்கவும் மறுக்கவும் உரிமை உள்ளதால் அவளுடைய இறுதி விருப்பை வைத்தியசாலை ஏற்றுக் கொண்டது. மீண்டும் அவளுடைய மனம் மாறினால் தொடர்பு கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள்.

லில்லி மருந்துகள் எடுப்பதை நிறுத்தி விட்டாள். குழந்தைகளைக் காப்பகத்தில் வைத்தபடி, உணவு-களைச் சமைத்து எடுத்துச் சென்று தினமும் பார்த்து வந்தாள். நாட்கள், கிழமையாகி, கிழமை, மாதங்களாகி வருடம் ஒன்றாகிவிட்டது. லில்லியின் வாழ்நாளிற்குக் கொடுத்த காலக்கெடு முடிந்து அவள் எதுவித பாதிப்பும் இன்றி நடமாடிக் கொண்டிருந்தாள். ஒருநாள், அவள் தனது நண்பி லிசாவிடம், தான் தன்னுடைய குழந்தைகளைக் காப்பகத்தில் இருந்து வீட்டிற்கு அழைத்து வர விரும்புவதாகக் கூற, லிசாவோ அவளிடம், ஒரு முறை வைத்தியசாலை சென்று அவளுடைய உடல்நிலையைச் சரி பார்த்து உறுதி செய்யுமாறு புத்தி கூறினாள். லில்லிக்கோ மனக் கலக்கம்!. இத்தனை நாட்களுக்குப் பின்பும், வைத்தியர்கள் மீண்டும் தனக்கு ஈரல் மாற்றுச் சிகிச்சை செய்து வைக்க முயல்வார்களோ? என்ற பயம் தொற்றிக் கொண்டது. "லிசா! எனக்கு இப்பொழுது ஒரு களைப்பும் இல்லை. நான் நன்றாகவே இருக்கிறேனே. என்னை எதற்கு மீண்டும் பரிசோதனை செய்யச் சொல்கிறீர்கள்?" என அப்பாவித்தனமாக லிசாவிடம் வினவினாள் லில்லி. "உனக்குக் குழந்தைகளை வீட்டிற்கு அழைத்து வர ஆசை இருந்தால், உன் உடல் நிலையைச் சரி பார்த்துக் கொள்" என்று சொல்லி விட்டாள் அவள்.

லில்லி வைத்திய நிலையத்திற்குச் சென்றாள். வைத்தியருக்கோ, பெருஞ் சந்தேகம்!. எப்பொழுதோ உயிரிழந்திருப்பாள் என நினைத்தவள் கண் முன்னே நிற்கின்றாள்! என்ன நடக்கிறது?. "இங்கிலாந்தை விட்டு வெளியூர் எங்காவது சென்றாயா? ஏன் இவ்வளவு நாளாக வரவில்லை?" என ஒரு பொய்க் கோபத்துடன் வினவினார் வைத்தியர்.

"இறந்து போய்விடுவேன் என்ற பயம் இருந்தது வைத்தியரே! ஆனால் பல மாதங்கள் கடந்தும் எனக்கு ஒன்றும் ஆகவில்லை. நான் நன்றாகவே இருக்கிறேன். இறந்து போய்விடுவேன் என்று என்னுடைய இரண்டு குழந்தைகளையும் தேவாலயம் நடாத்துகிற குழந்தைகள் காப்பகத்தில், மருத்துவிச்சி லிசாவின் உதவியால் சேர்த்திருந்தேன். இப்பொழுது அவர்களை மீண்டும் என்னோடு அழைத்து வந்து எங்கள் வீட்டில் வசிக்க விருப்பமாயுள்ளேன். லிசாதான் என் உடல்நிலையைப் பரிசோதித்துப் பார்த்தால் நன்று என அறிவுரை வழங்கினாள்". என்றாள் .

வைத்தியர் அவள் கண்களை இழுத்து, விழித்திரையைப் பார்த்தார். அவை மஞ்சள் நிறத்தை இழந்து, அழகிய வெண் திரைகளாகக் காட்சி தந்தன. கால்களில் வீக்கம் குறைந்து, யானைக் கால் போல இல்லாது சாதாரண நிலைக்குத் திரும்பியிருந்தன. அவளிடம் சோர்வோ, களைப்போ இருக்கவில்லை. வயிறு, உள்ளே எஃகி, இருக்கின்றதா? இல்லையா? என்பது போல் சுருங்கி விட்டிருந்தது. மருத்துவருக்குத் தன் கண்களை நம்ப முடியவில்லை.

"எங்காவது ஈரல் மாற்றுச் சிகிச்சையைச் செய்தாயா?"

"இல்லையே டாக்டர். என்னிடம் அதற்குப் பொருள் வசதி இல்லையே!"

"நன்றாக யோசித்துப் பார். வெளியூர் எங்காவது சென்றாயா? அங்கு ஏதாவது மருந்து மாத்திரைகள் தந்தார்களா? அவை என்னவென்று சொல் லில்லி"

அவள் சிரித்தாள்.

"வெளியூர் செல்வதற்கோ, மருந்து மாத்திரைகள் வாங்குவதற்கோ என்னிடம் பணம் இல்லை டாக்டர்"

வைத்தியர் ஆச்சரியத்தின் எல்லைக்குச் சென்றார். இரத்தப் பரிசோதனைக்கும், நெஞ்சு, வயிறு என்பவற்றை ஊடுகதிர் பரிசோசனைக்கு (scan) உட்படுத்தவும் படிவங்களை நிரப்பிக் கொடுத்தார்.

பரிசோதனைகள் லில்லியின் ஈரல் நன்கு குணமடைந்து ஈரற் சோணைகள் புதுப்பிக்கப் பட்டுள்ளதாகச் சொல்லின. லில்லி பூரண குணமடைந்து விட்டதாகவும் உனக்கு இனி ஈரல் மாற்றுச் சிகிச்சை அவசியமில்லை, ஆனாலும் ஒரு சிறு நுண்ணளவு ஈரலை இழைய நிறமூர்த்த ஆய்வுக்கு உட்படுத்தினால் நன்று என்றும் கூறினார் வைத்தியர்.

அவளுடைய வலது வயிற்றுப் புறத்தில் சிறு துளையிட்டு நுண்ணளவு ஈரல் இழையத்தை எடுத்துப் போமலினில் போட்டு, ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். சிறிது நேர ஓய்வின் பின் லில்லியை வீட்டிற்குச் செல்ல அனுமதித்தார்கள், அவளுடைய குடும்ப வைத்தியர் அவளுடன் தொடர்பு கொள்வார் எனக்கூறி.

"கழுதைப் புண்ணுக்கு புழுதி மருந்து" என இருந்தவளை இந்தப் பாடு படுத்துகிறது வாழ்வு என்றெண்ணியபடி பேருந்தில் ஏறி வீடு வந்து சேர்ந்தாள் லில்லி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**லில்லியின் ஈரல் இழையக் கலங்களின் நிறமூர்த்தப் பகுப்பாய்வு செய்த விஞ்ஞானிகளுக்குப் பெரும் ஆச்சரியம்! இழையக்கலங்களில் முன்புகாணப்பட்ட பாதிப்புகள் ஏதுமின்றி புதுப்பிக்கப் பட்டிருந்தன.** கலங்களிலுள்ள நிறமூர்த்தங்களிலோ எக்ஸ்-எக்ஸ் எனும் பெண்களுக்குரிய நிறமூர்த்தங்களோடு, எக்ஸ்-வை எனும் ஆண்களுக்குரிய நிறமூர்த்தமும் காணப்பட்டன. லில்லியின் மருத்துவப் பதிவேடுகள் எதுவும் ஈரல் மாற்றுச் சிகிச்சை நடந்ததைப் பதிவு செய்திருக்கவில்லை. குடும்ப வைத்தியரும் அதனை உறுதி செய்திருந்தார். **விஞ்ஞான ஆய்வாளர்கள் குழம்பிப் போயிருந்தனர். ஒரு பெண்ணில் ஆணுக்குரிய நிறமூர்த்தங்களுடன் கலங்கள்! எப்படி இது நடைபெற்றது?.**

அவர்களுடைய தலைமை விஞ்ஞானி வரவழைக்கப் பட்டு, எல்லாப் பதிவுகளும், கடந்த காலப் பதிவேடு களும் ஆராயப் பட்டன. அவர்களுடைய பகுப்பாய்வில் குறைகள் ஏதும் இருக்கவில்லை. அப்படியானால் லில்லியின் ஈரல் எங்ஙனம் பரிபூரணமாகக் குணமடைந்தது?. எங்ஙனம் ஆண்களுக்குரிய நிறமூர்த்தங்கள் அவளுடைய கலங்களில் வந்தது?. ஒரு பல் துறை நிபுணத்துவக் குழு, மரபணு திறனாய்வாளர் (Genetic specialist), மரபணு மருத்துவர் (Genetics consultant), ஈரற் சிகிச்சை நிபுணர் (Hepatic consultant), மருத்துவ விஞ்ஞானிகள் (Bio Medical Scientists) எனப் பலரைக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்டு, பகுப்பாய்வுகளினை மீளாய்ந்தனர். அதன்வழி அவர்கள் ஏக மனதாக ஒரு முடிவிற்கு வந்தனர்.

லில்லிக்கு ஏறத்தாழ ஒரு வயதில் ஒரு மகனும், ஐந்து வயதில் ஒரு மகனும் இருக்கிறார்கள். இரண்டாவது மகன் கருவில் தங்கியபோது சேயின் கருவிலிருந்து பிரிந்த கலங்கள், தாயையும் சேயையும் இணைக்கும் தொப்புள் கொடியூடாகக் குருதியில் கலந்து, தாயின் ஈரலில் படிவடைந்திருக்க வேண்டும். அச் சேயின் கலங்கள், தாயின் உடலால் எதிர்க்கப் படாமல், ஈரலில் தம்மைப் பதித்துத் தாயின் ஈரல் கலங்களுடன் ஓரிழையமாகச் சேர்ந்து கொண்டன. அச் சேய்க் கலங்கள் (foetal cells) தக்க தருணத்தில் பல்கிப் பெருகித் தாயின் நலத்தைக் காப்பாற்றி யிருக்கின்றன.

ஆதாரம் - https://www.sciencedirect.com/science/article/pii/S2589004221016345

இத்தகைய சேய்க் கலங்கள் (foetal cells), தம்மிலிருந்து மனித உடலின் எத்தகைய கலங்களையும் புதுப்பிக்கக் கூடிய தன்மை (pluripotent cells) கொண்டவை. அவை தாயின் உடற்கலங்களால் எதிர்க்கப் படாமல், ஏற்றுக் கொள்ளப் படுவது, இயற்கை பெண்களின் உயிர் வாழ்தலிற்குத் தாய்மை மூலம் அளித்த இன்றியமையாத கொடை!. லில்லியின் ஈரலைப் புதுப்பித்து, உயிரைக் காப்பாற்றியவையும் இச் சேய்க் கலங்களே!



"நீ யாரைத் தேடி இப்படி அலைகின்றாய்?
நீதான் பாதை; பயணம் செல்லும்
வழிப்போக்கனும் நீயேதான்;
வழிகாட்டியும் நீயேதான்;
நீயேதான் லட்சியமும்"

– *அல்லாமா இக்பால்*



தடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

. யார் எவர். 'நீ என்ர தம்பியடா' என்று என்னை கட்டி அணைத்து அழுதாரோ. அவர் என்னுடைய கையிலிருந்த மோதிரத்தையும் இலங்கைப்பணம்ஐநூறுரூபாவையும் தரும்படி கேட்டார்.
எட்டுவருடங்களாக என்கையிலிருந்த அரைப்பவுண் மோதிரம் கையை விட்டுக் கழன்றது. அதுவரைக்கும் அந்த மோதிரம் எனக்கு ஒரு பொருட்டாகவே இருக்கவில்லை. கழற்றும் போது ஏதோ ஒரு உணர்வு என்னைக் கசக்கியது. மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்துவிட்டு அவர்களின் மாடிப்படியை விட்டு இறங்கிக் கொண்டிருந்தேன்.

தொடரும்...
*26.9.2023*



**மனோவின்**

# நெடும் பயணம் – 6

வெளியே எங்களுக்காக ஒரு கார் காத்து நின்றது. அதில் எல்லோரும் அவசரமாக ஏற்றப்பட்டோம். பனி பொழிந்து கொண்டிருந்தது. கார் எங்கே போகிறது? எப்படிப் பிரான்ஸ் போய்ச் சேரப்போகிறது? எதுவும் எமக்குப் புரிபடவில்லை. கேட்கவும் பயமாக இருந்தது. கேட்டுத்தான் என்ன ஆகப்போகிறது? நடப்பது நடக்கட்டும் ! என்று முழிகள் பிதுங்கக் காருக்குள் பயணித்துக்கொண்டிருந்தோம். கார் ஒரு வீட்டுவாசலில் நின்றது. அது ஒரு தமிழரின் வீடு. நாங்கள் அந்த வீட்டுக்குள் அழைக்கப்பட்டோம். சில மணிநேரங்கள் காத்திருந்தபின் ஒரு வாடகைக்கார் அழைக்கப்பட்டது. வாடகைக்காரில் பயணிக்கும்போது பொலிசாருக்குச் சந்தேகம் வராது என்பதை அவர்கள் பேச்சினூடு அறிய முடிந்தது. வாடகைக்கார்க்காரரும் இவர்களின் கூட்டாக இருக்கவேண்டும்.

நடுச்சாமம். வாடகைக்கார் காட்டுவழியாக ஓடிக்கொண்டிருந்தது. ஆள் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை. திடீரென்று வாடகைக்கார் நின்றது. கெதியா இறங்குங்கோடா! என்று எம்மை அழைத்துவந்தவர் கரகரத்த இரகசியக் குரலில் சத்தம் வைத்தார். நாங்கள் பரப்பரப்பாக இறங்கி அவர்பின்னால் ஓடினோம். வாடகைக்கார் நின்ற இடம் தெரியாது மறைந்தது. நாங்கள் காட்டுக்குள் ஓடி மறைந்தோம்.

நிலம் பனிச்சேறாகி இருந்தது. நிலத்தில் கொட்டப்பட்டிருந்த இலைகளை பனி மூடிக்கிடந்தது. நாங்கள் கால் வைத்து நடந்தபோது அவை 'சதக் சதக்' என்று ஒலி எழுப்பின.

'சத்தம்போடாமல் மெதுவா நடவுங்கோ' என்று எம்மைக்கூட்டி வந்தவர் வாயில் சுட்டுவிரல் வைத்து எச்சரித்தார். நாங்கள் முதுகு வளைத்து கூனிக்கூனி பாதங்களை எட்டி எட்டி வைத்தபடி அவருக்குப் பின்னால் நடந்தோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதுதூரம் நடந்திருப்போம்! 'டேய் எல்லாரும் அப்படியே இருங்கோடா! பொலிஸ் போல கிடக்கு என்று அவர் கரகரக்க அப்படியே சில நிமிடங்கள் இருந்தோம். நெஞ்சு 'பக் பக் " என்றது. குளிர் வேறு நகங்களைக் கடித்துக்குதறியது. சில வேளை ஜேர்மன் பொலிஸ் நாயோடயும் வருவாங்கள் என்று எங்களை மேலும் அச்சமூட்டினார். அரை மணிநேரங்களுக்கு மேல் நடந்திருப்போம்!

மெதுவாக விடியத் தொடங்கியது. காடு மறைந்து தெருத் தெரிந்தது. இனிப் பிரெஞ்சுப் பொலிஸ் வரும். கவனமாயிருக்கவேணும் என்றார். நாங்கள் பிரான்ஸ் நாட்டுக்குள் கால் வைத்துவிட்டோம். மனதில் ஒரு நம்பிக்கை துளிர்த்தது.

அது ஒரு பஸ்தரிப்பு நிலையம். எங்களை மறைவாக நிற்கச்சொன்னார். சிறிது நேரத்தில் ஒரு பஸ் வந்தது. பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். பத்து நிமிடங்கள் வரை பஸ் ஓடியது. நாங்கள் இறங்கினோம். ஒரு வாடகைக்குடியிருப்பாளர்களின் கட்டடத்திற்கு எங்களை அழைத்துப்போனார். கதவு தட்டுப்பட, ஒரு தமிழர் சிரித்த முகத்துடன் எங்களை வரவேற்றார். அது ஒருவர் மட்டும் தங்கக்கூடிய சிறிய அறை.

அது ஸ்ராஸ்பேர்க் நகர் என்று பின்னர் அறிந்துகொண்டோம். அது பாரிஸிலிருந்து அண்ணளவாக ஐநூறு கிலோமீற்றர் தொலைவிலிருந்தது. எங்களுடன் வந்த இருவரை அவருடைய உறவினர்கள் வந்து அழைத்துப்போனார்கள்.

என்னிடம் பாரிஸ் சிவராஜா அண்ணரின் முகவரி இருந்தது. நாங்கள் ஸ்ரார்ஸ்பேக் புகையிரத நிலையத்தை நோக்கி நகர்ந்தோம். பயம் சிறிது தெளிந்திருந்தது. ஸ்ராஸ்பேர்க் தமிழர் டெனிம் ரவுசர் அணிந்திருந்தார். அவரது நடை கம்பீரமாக இருந்தது. அவரது நடை-அழகை ஐம்பது வயது மதிக்கத்தக்க அம்மணி ஒருத்தி புகையிரத நிலையக் குந்திலிருந்தபடி ரசித்தாள். அவள் அரை குறை ஆடை அணிந்திருந்தாள். அவரை ஏதோ பிரெஞ்சு மொழியில் கேட்டாள். அவர் சிரித்தபடி நகர்ந்தார். எங்களை அழைத்துவந்தவரும் கெக்கட்டம் விட்டுச்சிரித்தார். நாங்கள் வெக்கப்பட்டுச் சிரித்தோம்.

புகையிரதம் பாரிஸ் நகரை வந்தடைந்தது. குறிப்பிட்டமுகவரியில் என்னுடன் வந்தவர் கையளிக்கப்பட்டார். நான் வைத்திருந்த முகவரியைத் தேடினோம். கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. என்னை அழைத்து வந்தவர் பாரிசிலுள்ள ஒரு அறைக்கு என்னை அழைத்துச்சென்றார். அது ஒரு சிறிய அறை அங்கே பத்துப்பேருக்கு மேல் தங்கியிருந்தனர். என்னைப் பார்த்ததும் சிலர் முகம் சுழித்தனர். சிலர் காணமல் போயினர். என்னை அழைத்து வந்தவர் என்னை தாறுமாறாய் ஏசினார். 'ஒழுக்காய் ஒரு அட்றசும் கொண்டு வரத்தெரியாது. எங்களைப்போட்டு படுத்துறது" பற்களை உறுமினார். அடித்துவிடுவார் போலிருந்தது. எனக்கு அழுகை வந்தது. அந்த அறையிலிருந்த நீர்வேலியைச் சேர்ந்த பாலசிங்கம் என்பவர் என்மீது இரங்கினார். என்னை அழைத்து வந்தவர் என்னை விட்டு விலக பாலசிங்கம் எனக்காக என் முகவரிதேடி அலைந்தார். பாரிஸ் 18, தமிழர் வாழும் பகுதி. ஆனால், தெருவின் பெயரைக்கண்டு பிடிக்கமுடியவில்லை. தந்த முகவரியில் தவறிருந்தது. ஏதோ எழுத்துகள் மாறி இருந்தன. பாலசிங்கம் அண்ணை என்னை இன்னும் ஒரு சில தமிழர்கள் வாழ்ந்த அறைகளுக்கு அழைத்துச்சென்னார். நான் கொணர்ந்த முகவரியையோ அல்லது சிவராஜா அண்ணனையோ யாருக்கும் தெரியவில்லை. எல்லோரும் என்னைக்கண்டு அஞ்சினர். தங்களுக்கே இருக்க இடம் போதவில்லை. இதற்குள் என்னையும் சேர்த்துக்கொள்ள நேருமே என்று பயந்தனர். பாலசிங்கம் அண்ணன் பெல்விலுள்ள தன்னுடைய அறைக்கு கூட்டிச் சென்றார். எனக்கு உணவளித்தார்.

'என்ன, இஞ்சை வைச்சிருக்கப் போறியோ? நீயும் சேர்ந்து போயிடு!" யாரோ ஒருவர் பாலசிங்கம் அண்ணனை கடிந்துகொண்டது எனக்கும் கேட்டது. பாலசிங்கம் அண்ணனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அவரைவிட்டால் எனக்கும் வேற கதியில்லை.

அவர் என்னை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார். 'அண்ணை மக்கோன் என்ற இடத்தில என்ர பிரெண்டின்ர தம்பி இருக்கிறார் என்னை அங்கை அனுப்பி விடுறீங்களோ" என்று கெஞ்சினேன்.

'ரெலிபோன் நம்பர் இருக்கோ" என்றார்.

சுவிசிலுள்ள பவாவுக்குப் போன் பண்ணினேன்.

'ஓ! பரிசுக்கு வந்திட்டியளே! கெட்டிக்காரன். இனிப் பயப்பிடத் தேவையில்லை. எல்லாம் வெல்லலாம்!" என்று தென்பை வரவழைத்தார். எனக்கும் நம்பிக்கை பிறந்தது.

இரவு ஏழுமணிக்கு மக்கோன் நகரை நோக்கிப் பயணமானேன். மக்கோன் நகருக்கும் இரண்டு புகையிரதங்கள் மாறவேண்டி இருந்தது. லியோன் நகர் சென்று பின்னர் மக்கோன் றெயின் எடுக்கவேணும்.

பாலசிங்கம் அண்ணன் லியோன் வரைக்கும் ரிக்கற் எடுத்துத் தந்து என்னை அனுப்பிவைத்தார். 'அங்கால கொஞ்சதூரம் தான் செக்கர் வராமாட்டாங்கள்" என்றார்.

'அண்ணை உங்களின்ர உதவியை என்ர வாழ்நாளில மறக்கமாட்டன் " என்று நாத் தழுதழுக்க அவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நன்றிகூறி விடை பெற்றேன்.

லியோன் புகையிரநிலையம் வண்ண மயமாக இருந்தது. மின்னொளியில் அது மிதந்தது. யாராவது தமிழர்கள் கண்ணில் எத்துப்படமாட்டார்களா? என்று தேடினேன்.
கறுப்பு முடியுடன் மீசை வைத்த ஆட்களைக்கண்டேன். மகிழ்ச்சியாக இருந்தது. அவர்கள் நல்ல வெள்ளயைாக இருந்தார்கள். ஓ! பிரான்சுக்கு வந்து எல்லோரும் வெள்ளயாகிவிட்டார்கள்! என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டேன். அவர்களை நெருங்கி உதவிகேட்கவும் கூச்சமாக இருந்தது. இந்த இடத்தில் கூச்சமெல்லாம் பார்க்கமுடியாது. இரண்டு கைகைளையும் குவித்து வணக்கம் சொல்லி "அண்ணை நீங்கள் தமிழோ" என்றேன். அவர்களுக்கு எதுவும் புரியவில்லை. சிரித்தபடி அவர்களும் எனக்கு வணக்கம் சொல்லி நகர்ந்தார்கள்.

சிலர் உன்னிப்பாகக் காதைக் கூர்மையாக்கி எனக்கு உதவ விரும்பினார்கள். ஆனால் என்மொழிதான் அவர்களுக்கப் புரிய வில்லையே! அல்ஜீரிய நாட்டவர்களுக்கு எப்படி என் மொழி புரியும்?

பாலசிங்கம் அண்ணன் வழிகாட்டியபடி மக்கோன் புகையிரத தடத்தில் மக்கோன் புகைவண்டிக்காகக் காத்திருந்தேன். மக்கோன் நிலையத்தில் பவாவின் தம்பி பாலன் எனக்காக் காத்து நின்றார்.

தொடரும்.
*28.01.2024*




## வளர

சிற்றிதழானது கூட்டுழைப்பு.
கூட்டுச் செயற்திட்டம்.
சிற்றிதழ்கள் தொடர்ந்து நடாத்த
முடியாமல் இடை நடுவில்
நின்றுபோவதற்கு காரணம்
வெறுமனே பொருளாதாரக்காரணி
மட்டுமல்ல.
கூட்டுழைப்பில் வரும் சலிப்பு
சோர்வே முக்கிய காரணி

எங்களின் நேரங்களை விட
அடுத்தவர்களின் நேரத்திற்கு
மதிப்புக்கொடுக்கும் பண்பு
முக்கியமானது.
கூட்டுழைப்பில் இப்பண்பு
முக்கியமானது.

கூட்டுச்செயற்பாடு சமூக
முன்னேற்றத்திற்கு
அவசியமானது.
அது பலவேறு புரிதல்களைத்
தருகிறது.
சமூக அக்கறையாளர்களை
இனம்காட்டுகிறது.

சிற்றிதழானது சமூகக்
கருத்துருவாக்கத்தில்
முக்கிய பங்கு வகிக்கிறது.
'வளரு'ம் தன்னாலான பங்கினை
ஆற்ற விரும்பி உங்களையும் கரம்
கோர்க்க அழைக்கிறது..

எம்மால் நடாத்தப்படும்
'வளர்'
சிறுகதைப்போட்டி 2024ற்கு
உங்களால் முடிந்த
ஆதரவினை நல்குமாறும்
கேட்டுக்கொள்கிறோம்.
நன்றி

- வளர் குழுமம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரள்

உரையாடல் வெளி

# // திரள் //

## சமூக, கலை, இலக்கிய அமைப்பு

**புகலிட வாழ்வு** என்பது நமது தாயகத்தில் வாழ்ந்தது போன்று அவ்வளவு இலகுவானதல்ல என்பது இங்கு வாழ்கின்ற அனைவருக்கும் புலப்படும் உண்மையாகும். இந்நிலைமை தத்தமது தாய்நிலத்தை விட்டு வந்து இங்கு குடியேறிய எல்லா மக்களுக்கும் பொருந்தும்.

மனிதன் ஒரு சமூக விலங்கு. அந்த வகையில் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் தங்களைத் தங்கள் சமூகத்துடன் மீளவும் கட்டியமைக்கப் பல பாலங்களை கட்டியெழுப்பியிருக்கிறார்கள். அவை சிறார்களுக்கான தமிழ்ப் பள்ளிகளாகவும் ஊர் சார்ந்த சங்கங்களாகவும் பழைய மாணவர் அமைப்புக்களாகவும் இயங்கி வருகின்றன, அந்த வகையில் லண்டனில் பல கலை இலக்கிய அமைப்புக்கள் இருக்கின்ற போதிலும் ஒருமுகப்பட்ட சிந்தனை கொண்ட இலக்கிய ஆர்வலர்கள் இலக்கிய விமர்சகர்கள் சேர்ந்து 'திரள்' எனும் அமைப்பினைச் சமூக, கலை, இலக்கியத்திற்காகக் கோவிட் காலத்தில் உருவாக்கி zoom மூலமாக நடாத்தி வந்தோம்.

கடந்த பல ஆண்டுகளாகப் புலம்பெயர் இலக்கியம் என்ற ஒரு வடிவம் இலக்கிய உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாதக நிலை எமக்குத் 'திரள்' அமைப்பினை தோற்றுவிக்க இலகுவாக இருந்தது.




எம்மக்களுக்கு நன்மை பயக்கின்ற கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக உரையாடல்கள், பேச்சுக்கள் என்பவற்றை ஆரம்பத்தில் தொடங்கினோம்.

இருப்பினும் நல்ல நூல்கள் மக்களுக்கு சிறந்த வழிகாட்டுதலை வழங்கும் என்று கூறுவார்கள். நூலறிவு மற்றும் வாலறிவு என அறிவு இருவகைப்படுகின்றது.

நூல்கள் பலவற்றைக் கற்று அவற்றின் மூலம் பெற்ற அறிவு நூலறிவு என்றும் அனுபவத்தின் வாயிலாக இறைவனை அறிவது வாலறிவு என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இதனையே திருவள்ளுவரின் இந்தக் குறள் சுட்டி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கற்றதனால் ஆய பயன்என்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

மாற்றமுறும் தொழிநுட்ப முன்னேற்றமும் இணைய வழிப் பயன்பாடும் முழு உலகையும் ஆக்கிரமித்து இளைய தலைமுறையினர் மத்தியில் வாசிப்பு அனுபவத்தினை வெகுவாகக் குறைத்துள்ளது.

இப்போது செயற்கை நுண்ணறிவும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வாசிப்பும் தேடலும் கேள்விக்குறியாகின்றன.

ஆயினும் நாம் தொடங்கிய 'திரள்' அமைப்பின் மூலம் பல்வேறு நூல்களை வெளியீடு செய்து அவற்றுக்கான மதிப்பீடுகளையும் கருத்துப் பகிர்வுகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

அந்த வகையில் கடந்த இரண்டு வருடங்களாகப் பல்வேறு ஈழத்தமிழ் மற்றும் இந்தியத்தமிழ் எழுத்தாளர்கள் நூல்களை வெளியீட்டு விழாக்களினூடாகவும் விமர்சனக் கூட்டங்களினூடாகவும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து அவை கற்பிக்க முனையும் விடயங்களை ஆரோக்கியமான மற்றும் சிந்தனை ரீதியிலான உரையாடல்களாக முன்னெடுத்தோம்.

தரம் வாய்ந்த உரையாடல்களை முன்னெடுத்து வந்தபடியினால் ஐரோப்பாவிற்குப் புலம் பெயர்ந்து வந்து நாவல்கள் கவிதைத் தொகுப்புக்கள் மற்றும் வரலாற்று புத்தகங்களை எழுதி வரும் எழுத்தாளர்கள் இன்று தங்கள் புத்தக வெளியீட்டு நிகழ்வுகளை ஒழுங்கமைத்து நடத்தத் திரள் அமைப்பினை நாடி வருகின்றனர்.

தொடக்கத்தில் மாதம் ஒரு நிகழ்வாக நடத்தப்பட்டுக்கொண்டிருந்த திரள் நிகழ்வுகள் இப்போது தேவை-கருதி மாதம் இரு நிகழ்வுகளாக நடத்தப்பட்டுக் கொண்டிருப்பது இந்த அமைப்பின் வளர்ச்சியைப் பறைசாற்றி நிற்கிறது.
இந்த வருடம் தை மாதம் முறையே கல்வியாளர் ஜெனிவா அருந்தவராஜாவின் புலம்பெயர்ந்த தமிழர் 'வாழ்வும் வலியும் ' என்ற வரலாற்று புத்தகத்தின் விமர்சன விழாவையும் குணா கவியழகனின் 'கடைசிக்கட்டில்' என்ற நாவல் வெளியீட்டு விழாவையும் நடாத்தியிருக்கிறோம்.

அந்த வகையில் திரள் என்ற இலக்கிய உரையாடல் வெளி மேலும் பல எழுத்தாளர்களையும் எழுத்துக்களையும் உள்வாங்கி ஊக்குவிக்கக் காத்திருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவிக்கிறோம்.

நாம் செய்வது சிறிய பணியாயினும் அது காலநீட்சியில் சமூகத்திற்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் ஆக்க கர்த்தாக்களுக்கும் நன்மை பயக்கும் என்று நம்புகிறோம்.

திரள் உரையாடல் வெளி கடந்த காலங்களில் நடாத்திய விழாக்களின் காணொளிகளை Thiral முகநூல் பக்கத்திலும் youtube channel லிலும் பார்வையிடலாம்.

**- கௌரி பரா**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதமும் வாழ்வியலும்

**- விஜி நாகராஜா**

*(சிட்னி)*




## புரிதல்

புரிதல் என்பது வெறுமனே நான்கு எழுத்துகள் அல்ல. அது மிகவும் சக்திவாய்நத ஒரு சொல். புரிதலை நாம் எப்படிப் புரிந்துகொள்கிறோம்? புரிதல் எங்கே, எப்போது யாரிடம் வரவேண்டும்? அதன் வரையறை என்ன? ஒருவரைப் புரிந்துகொண்டால் அவரின் கோபம்கூட அர்த்தமுள்ளதாகத் தெரியும். புரியவில்லையென்றால் அன்புகூட அர்த்தமற்றத்தாகத் தெரியும்.

'புரிதலே புரிதலுக்கு புரிதல் ஏற்படுத்தும் என்று புரிந்து கொண்டும், புரிதலைத் தவிர்க்காமல் புரிந்து கொண்டாலே அனைவருக்கும் புரிதல் புரியவரும்" என புரிதலைப்பற்றி அழகாக வர்ணிக்கிறார் ஓர் எழுத்தாளர்.

இந்த புரிதல் சரியாக அமையாததால் நாம் வாழ்க்கையில் பல இன்னல்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. நிம்மதியாக வளமுடன் வாழ முடியாதிருக்கிறது. வாழ்க்கைக்கு புரிதல் மிகவும் அவசியம். குடும்பத்திற்குள், நட்புகளுக்குள், வேலையிடத்தில், பாடசாலையில் என எல்லா இடங்களிலும் புரிதல் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கிறது.

புரிதல் பலவிதமான விடயங்களையோ அல்லது பல வகையன சொந்தங்களையோ பற்றியதாக இருக்கலாம். இதில் **நம்மை நாமே புரிந்து கொள்வதுதான் மிகவும் முக்கியமான ஒன்று. மற்றவர்களை புரிந்து கொள்ளும் முன் நாம் நம்மை புரிந்துகொள்வது அவசியம்.** நிறையத் தருணங்களில் நாம் பல விடயங்களை சரியாக செய்கிறோமா? என்ற குழப்பம் நம்மிடையே ஏற்படுகின்றது. சில சமயங்களில் முடிவு எடுக்கும் போது தவறான முடிவை எடுக்கின்றோம். இதுதான் சரி என்று தெரிந்தும் பிழைகளைச் செய்கின்றோம். ஏன் என்பதற்கு பதில் நமக்கு நம்மைப்பற்றி புரியாமல் இருப்பதுதான். இவ்வாறுதான் ஞானம் அடைந்துவிட்டோம் என்று உலகில் பலர் தெய்வங்களைப் பற்றியும் மந்திரங்களைப் பற்றியும் தெரிந்துகொள்வது முதன்மையான ஞானம் ஆகாது. எங்களை நாங்கள் புரிந்து கொள்வதுதான் முதன்மையான ஞானம்.

எங்களை நாங்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டால் நாங்கள் உலகத்தைப் பற்றி தெரிந்தால் என்ன, கடவுளைப்பற்றி உணர்ந்தால் என்ன உபயோகம் இல்லாமல் போய்விடும். மனம் என்பது நம்பிக்கைகளாலும், விளக்கங்களாலும் ஆனது. நாங்கள் எது சரியென்று நம்புகிறோமோ, எது உண்மை என்று நம்புகிறோமோ

"அப்பா நீ அம்மாவை காதலித்துத்தான் திருமணம் செய்துகொண்டாயா?" என்றான் மகன்.

ஏன் என்றார் அப்பா?

நீ ஒருபோதும் ஐ லவ் யு சொல்லவில்லையே! என்றான் மகன்.

அம்மா குளித்து விட்டு தலையில் நீர் சொட்டச்சொட்ட குளியலறையைவிட்டு வெளியே வந்துகொண்டிருந்தார்.

சாய்வு நாற்காலியில் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த அப்பா, "மரகதம் அதை எடுத்து வாவேன்" என்றார்.

அம்மா மூக்குக் கண்ணாடியுடன் வந்தார்.
அப்பா தன் தோளிலிருந்த சால்வையை எடுத்து அம்மாவிடம் நீட்டினார். அம்மா அதைப் பரிவுடன் வாங்கித் தன் ஈரத் தலையைத் துவட்டத் தொடங்கினார்.

இப்போ, புரிகிறது உங்கள் காதல் என்றான் மகன்.
(Tik tak ல் கேட்டுச்சுவைத்தது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் நம்பிக்கை. எங்கள் திறமைகளை நாங்களே உணர்ந்து கொண்டு எங்களைச் செயற்படுத்தி முன்னேறுவதுதான் ஆத்மா அளவில் நாங்கள் எங்களைப் புரிந்து கொள்வது.

'ஒரு சமூகம் மாறவேண்டும் என்று நினைத்தால், தனிமனிதன் மாறவேண்டும். ஒவ்வொரு மனிதனுக்கும் புரிதல் வரவேண்டும் அப்படியாகத்தான் நாம் சமூகத்தை மாற்ற முடியும்.' என்கிறார் ஓஷோ.

புரிதலுக்கு விழிப்புணர்வு மிகவும் அவசியம். விழிப்புணர்வு இருந்தால்தான் நீங்கள் ஒருபடி மேலேபோய் கீழே பார்க்கும்போது கீழே இருப்பவை மிகவும் தெளிவாகத் தெரியவரும். அப்போது நமக்கு புரிதல் உண்டாகின்றது. ஒரு பிரச்சனையை நாம் அதே தளத்தில் (Level) இல் இருந்து பார்க்கும்போது அது மிகவும் பெரிதாக, பூதாகரமாகத் தெரிகிறது. அதையே கொஞ்சம் மேலே போய்ப் பார்க்கும் போது நாம் மிகவும் விரிவாகவும் மேலும் பல விடயங்களைக் கவனிக்கும் போது இந்த பிரச்சனை இவ்வளவு தானா என்று தோன்றும். மிகவும் சிறிதாகத்தான் தெரியும். ஏனெனில் நாம் மேலே இருந்து பார்க்கும்போது மேலும்பல விடயங்களை யோசிக்கின்றோம். பல விடயங்களை நாம் விரி-வாகப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டாகிறது. ஒரு பறவைபோல மேலே இருந்து பார்க்கும் போது கீழே இருப்பவை எவ்வளவு தெளிவாகத் தெரிகின்றதோ அதே போல எல்லாம் தெளிவாகத் தெரியும்போது புரிதல் உண்டாகின்றது.

சில சமயங்களில் பெரிய மகான்கள் சொல்கின்றார்கள் நாம் சமநிலையுடன் இருக்க வேண்டும் என்று. உதாரணமாக நாம் ஒரு கயிற்றின் மீது நடக்கும்போது நாம் இடது பக்கமாகவும், வலது பக்கமாகவும் சாய்ந்து சாய்ந்து நடந்தால் தான் நாம் சமநிலையாக (Balance) நடக்க முடியும். அப்படி நடக்கும்போது ஒரு செக்கனில் நாம் கயிற்றின் நடுவில் நடப்போம் அது தான் நாம் செல்லும் சமநிலை. இப்படித்தான் வாழ்க்கையும்.

வாழ்க்கை ஒரு இடத்தில் இருப்பது இல்லை. அது நகர்ந்து கொண்டே போகும். நாம் நகராமல் ஒரே இடத்தில் இருப்போமானால் நமக்கு உயிர் இல்லை என்று அர்த்தம். உயிர் உள்ள மனிதன் நகர்ந்து கொண்டேதான் இருக்க வேண்டும்.

நமது வாழ்க்கையில் சந்தோசமும், துக்கமும் மாறி மாறி வருகின்றது. சந்தோசத்திற்கு ஒரு அழகு இருப்பது போல துக்கத்திற்கும் ஒரு அழகு இருக்கிறது. அந்தந்தந்தக் கணங்களில் நாம் அவற்றை அனுபவிக்கக் கற்றுக் கொள்வது முக்கியம். எதையுமே முழுமையாக நாம் அனுபவிக்க வேண்டும். கருணையும், கோபமும் இதேபோலத்தான். நாம் ஒரு கணம் கோபமாக இருந்தால் அந்தக்கணம் கருணை உள்ளவர்களாக மாறுகின்றோம். இதைத்தான் நாம் முழுமையான வாழ்வு என்று சொல்கிறோம்.

சில மனிதர்கள் நமக்கு இன்பமும் தேவையில்லை, துன்பமும் தேவையில்லை என்று வாழ்கிறார்கள். அவர்கள் அதைத்தான் சமநிலையான வாழ்க்கை என்று கருதுகின்றார்கள். அதில் அர்த்தம் என்னவென்றால் 'துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் மனநிலை இல்லாததால் நாம் எமக்கு வரும் சந்தோசங்களைக்கூட இழக்கத் தயாராக இருக்கிறோம். இதனால் என் குடும்பம், என் மனைவி, என் பிள்ளைகள் என்ற பந்தங்கள் தேவையில்லை என்றும் அதனால் வரும் இன்ப துன்பங்களை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்றும் சொல்கிறார்கள். நாம் நமது வாழ்வில் எல்லாவற்றையும் அனுபவிக்க பழகிக்கொண்டால்தான் வாழ்வு முழுமையான வாழ்வாக இருக்கும்.

துக்கம் வரும்போது மிகவும் கவலையாகத்தான் உணர்வோம். ஆனால் அந்தக்கணத்தில் துக்கத்தில் வாழுங்கள்! அப்போதுதான் அதன் அழகு புரியும். அதேபோல சந்தோசம் வரும்போது சந்தோசத்தில் வாழப் பழகினால் அந்தக் கணத்தில் நமக்கு சந்தோசத்தின் அழகு தெரியும். சிலர் நாம் இப்படித்தான் வாழ வேண்டும் என்று நிறையக் கொள்கைகளை வைத்துச் சிரமப்படுகிறார்கள்.

'வாழ்க்கையை அதன் போக்கில் அதன் முழுமையை வாழ வேண்டும். அப்படி வாழும் போது சில விடயங்கள் கசக்கத்தான் செய்யும். கசப்பானது என நாம் உணர்ந்தால்தான் இனிப்பின் சுவையை நாம் உணர முடியும். சிரிக்கத் தெரிந்த மனிதனால் அழவும் தெரியவேண்டும். அதைத் தெரிந்த மனிதனால்தான் சிரிக்கவும் முடியும்.

நாம் என்ன செயலை செய்தாலும் கவனத்துடன் செய்ய வேண்டும் ஏனெனில் கவனத்துடன் எதை செய்தாலும் அதில் குழப்பம் இருக்காது. தெளிவு அதிகமாகி அது விழிப்புணர்வை அதிகமாக்கி நாம் புரிதல் உணர்வை மிகையாக்குகின்றது.

மனம் எப்போதும் ஒரு முடிவைத் தானே எடுக்காது. விழிப்புணர்ச்சி மட்டும் தான் முடிவை எடுக்கும். அப்போ ஒரு தெளிவு உண்டாகும். தன்னுணர்வு இருக்கும். அதனால் எங்களைச் சரியான வழியில் நடத்த விழிப்புணர்வால் மட்டும்தான் முடியும்.

'முதற்தடவை விழுந்துவிட்டோமே என்று பயந்து கொண்டு இருந்தால் சைக்கிள் கூட ஓடக்கற்றுக்கொள்ள முடியாது. அதுபோலதான் நமது வாழ்க்கையும்.

'புரிதல் ஓர் அழகான ஓவியம். வரையும்போது தெரியாது. வரைந்த பின்பு மறையாது.

புரியாத பிரியம் பிரிதலில் புரியும்தான். ஆனால், பிரிந்தபின்பு புரிந்து தனிமையில் வருந்துவதைவிட இணைந்திருக்கும்போதே பிறரைப்புரிந்துகொள்வோம்!

...தொடர்கிறது....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதர்லாந்து நாட்டின் ஆரம்பக் கல்விமுறை

- ஆனந்தி பாலசூரியன்



## ஆரம்பக் கல்வியின் செயல்பாடுகள்

ஒரு ஆரம்ப பாடசாலையில் ஆசிரியர்களைத் தவிர நல்ல கல்வியை சாத்தியமாக்கும் பல பணியாளர்கள் உள்ளனர். ஆசிரியர் உதவியாளர்கள், இருப்பிடத் தலைவர்கள், குழுத் தலைவர்கள், உள் மேற்பார்வையாளர்கள், தீர்வு ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், நிர்வாகப் பணியாளர்கள் உள்ளனர். ஒவ்வொரு பாடசாலையும் தமது செயல்பாடுகளுக்கு அமைவாக பணிகளை பிரித்து வைத்திருப்பார்கள்.

குழந்தைகள், இளைஞர்களின் வளர்ச்சியில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இவர்களுக்கு அறிவை வழங்கவும், அவர்களிடமுள்ள திறமைகளை வெளியே கொண்டுவரவும் ஆசிரியர்களின் பணி மிகவும் முக்கியமானதாகும். குழந்தைகள் சமூக திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள். அறிவைப் பெறுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். ஆதலால் ஒரு ஆசிரியராக மாணவர்களை சரியாக வழிநடத்த சில திறன்கள் தேவை என்பதை இங்குள்ள கல்விநிறுவனத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்றவாறு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள் நெதர்லாந்து நாட்டில் ஆசியர்களுக்கு இருக்க வேண்டிய கற்பித்தல் சிறப்பம்சங்கள்:

### பொறுமை

மாணவர்கள் அனைவருக்கும் அவர்களுக்குரிய கற்றல் வேகம் உள்ளது. இருப்பினும் ஒரு ஆசிரியர் அனைத்து மாணவர்களையும் ஈடுபாட்டுடன் வைத்திருப்பது முக்கியம். ஒரு ஆசிரியராக, குறைவான மாணவர்களுக்கு ஆதரவையும் கூடுதல் விளக்கத்தையும் வழங்கவேண்டும். அதற்கு பொறுமை மிகவும் அவசியமானது.

ஒரு ஆசிரியர் வகுப்பறையின் சூழலை பெரும்பாலும் தீர்மானிக்கிறார். கற்றல் சூழல். சுற்றுச்சூழல் பாதுகாப்பாக இருப்பதும் ஒவ்வொரு குழந்தையும் சரியாகக் கண்காணிக்கப்படுவதும் முக்கியமான விடயங்கள் ஆகும். ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் கவனிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு இருக்கவேண்டும். ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு அவர்கள் செயல்படத் தேவையான நம்பிக்கையை கொடுப்பார்கள். ஆசிரியரே நல்ல கல்விக்கான சூழலை உருவாக்குவார்

### தலைமைத்துவம்

ஒரு நல்ல தலைவர் மரியாதைக்குரியவர் அதிகாரம் பெற்றவர். ஒரு குழுவில் ஒழுங்கை பராமரிக்க இது மிகவும் முக்கியமானது. ஆசிரியராக இருப்பவர் ஒரு நல்ல தலைவராக இருந்தால் மாணவர்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டு சிறப்பாகக் கற்க வாய்ப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம். இதற்கான பயிற்சிகள் ஆசிரியர்கள் எடுத்திருக்க வேண்டும்

## எச்சரிக்கை மற்றும் பகுப்பாய்வு

கல்வி கற்பிக்கும் ஆசிரியர் தன்னிடம் வரும் மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் எப்படியானவர்கள் என்பதை இனங்கண்டு கொள்ளக்கூடியவராக இருக்கவேண்டும். மாணவர்களின் நடவடிக்கைகளை வைத்து மாணவர்களுக்குரிய பிரச்சனைகளை இனங்கண்டு கொள்ளும் திறமை இருக்கவேண்டும். மாணவர்களிடம் குடும்ப பிரச்சனைகளால் அல்லது கற்றலில் கடினங்கள் இருந்தால் அவர்களது செயற்பாடுகள் வித்தியாசமானதாக இருக்கும். இதனை இனங்காணும் அறிவை ஆசிரியர் பெற்றிருக்க வேண்டும். ஆரம்பத்தில் பிரச்சனையை இனம் கண்டால் தீர்வுகள் விரைவாக எடுக்கப்படலாம். ஆசிரியர் பயிற்சியின் போது இது குறித்தும் கவனம் செலுத்தப்படுகிறது. ஒரு ஆசிரியரின் கவனமான பார்வை குழந்தையின் வாழ்க்கையை சிறப்பாக மாற்றும்.

## மாணவர்களை ஊக்குவிக்கும் ஆற்றல்

ஊக்குவித்தல் கல்வியில் மிகவும் முக்கியமான விடயமாகும். ஆனால் இது மிகவும் கடினமானதும் கூட. ஒவ்வொரு மாணவர்களும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டார்கள். அவர்களது குணங்கள் வித்தியசமாக இருக்கும். அவர்கள் மீது அக்கறை காண்பிக்க வேண்டும். நம்பிக்கை ஊட்ட வேண்டும். முக்கியமாக மாணவர்களது திறமைகளுக்கு இடமளித்துஅவர்களதுதிறமைகளைஉற்சாகப்படுத்தி அவர்களை வழி நடாத்த வேண்டும். அதற்கேற்ப ஆசிரியரின் கற்றல் செயற்பாடுகள் அமையவேண்டும். பாடம் சம்பந்தப்பட்ட விடயங்களை கற்பிப்பதன் மூலம் கவனத்தை ஈர்ப்பது எளிது.

மாணவர்களை ஊக்குவிக்க மற்றொரு வழி தேர்வு சுதந்திரத்தை வழங்குவதாகும். ஒரு ஆசிரியராக மாணவர்களுக்கு கற்பித்தலில் தேர்ச்சி பெற பல்வேறு வழிகளை வழங்கினால் இது பல மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும். கற்றல் செயல்முறையைப் பற்றிய நுண்ணறிவைக் கொடுப்பதன் மூலம் மாணவர்களை ஊக்குவிக்கலாம். ஒரு மாணவர் முன்னேறுவதைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகச் சாதிக்க இது மாணவர்களை தூண்டுகிறது.

ஒரு மாணவரை ஊக்குவிக்க மற்றொரு வழி வெகுமதிகள் அல்லது சிறிய போட்டிகளுடன் வேலை செய்வது. அதை ஒரு போட்டியாக ஆக்குங்கள். பதிலுக்கு ஒரு பரிசு இருப்பதால் ஒரு மாணவர் கூடுதல் முயற்சியை மேற்கொள்வார்.

## தெளிவாக தொடர்பு கொள்ளவும்

அறிவை வெளிப்படுத்த தெளிவாகவும் சுருக்கமாகவும் தொடர்புகொள்வது ஆசிரியருக்கு இன்றியமையாத திறமை யாக இருக்க்வேண்டும். மாணவர்கள் ஆசிரியர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை அறிவது முக்கியம். ஆசிரியர்கள் தெளிவாக சரியான மொழியைப் பயன்படுத்தி தேவைப்படும்போது உங்கள் தகவலை வெவ்வேறு வார்த்தைகளில் மீண்டும் சொல்ல முயற்சிக்கவும்.

## திட்டம்

ஒரு ஆசிரியராக திட்டமிடல் அட்டவணையை கையாளவேண்டும். கற்பித்தல் பொருள் பெரும்பாலும் பரிந்துரைக்கப்படுகிறது. அதனை ஆசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும். இதற்கு நல்ல நேர திட்டமிடல் முக்கியம். ஆசிரியர்கள் முக்கியமானதாகக் கருதும் தலைப்புகளிலும் கவனம் செலுத்த விரும்பலாம். உதாரணமாக நடப்பு நிகழ்வுகள் அல்லது வகுப்பறையில் எழும் தலைப்புகள்

திட்டமிடல் என்பது நீங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு திறமை. மென்பொருள் பயன்பாடுகள் அல்லது சிறப்பு நிகழ்ச்சி நிரல் போன்ற கருவிகளும் உள்ளன.

இந்த கட்டுரையில் வழக்கமான ஆரம்பக்கல்வியை விரிவாக பார்ப்போம்.

## வழக்கமான ஆரம்பக் கல்வி

ஆரம்பப் பாடசாலை நான்கு முதல் பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகளுக்கானது. நெதர்லாந்தில் ஒரு குழந்தை ஐந்து வயதிலிருந்தே பள்ளிக்குச் செல்ல வேண்டும் ஆனால் குழந்தைகள் பொதுவாக நான்காவது பிறந்த நாளிலிருந்து ஆரம்பப் பாடசாலைக்கு செல்வார்கள். குழந்தைகள் குழு 1 இல் தொடங்கி ஒரு நிலையான வாராந்த அட்டவணையின்படி குழு 8 வரை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களால் கல்வி வழங்கப்படுகிறது.

பொதுவாக இரண்டரை வயதிலிந்து குழந்தைகள் பாலர் பாடசாலைக்கு (முன்பள்ளி) செல்வது வழக்கமாகவுள்ளது. நான்காவது வயது பூர்த்தி யடைந்த மறுநாளே குழந்தைகள் பாடசாலைக்கு செல்வார்கள். அவர்களை குழு 1 இல் சேர்த்துக் கொள்வார்கள். இங்கு பாடசாலைகள் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கும். குழு 1, குழு 2 இல் மாணவர்கள் தினமும் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை பாட-சாலை செல்வார்கள். பாடசாலைகள் 8.30 மணிக்கு ஆரம்பமாகும. பின்னர் 11.30 மணிக்கு மதிய இடைவேளை விட்டு மீண்டும் 1 மணிக்கு ஆரம்பமாகி 3 மணிக்கு முடிவடையும். புதன்கிழமைகளில் மாத்திரம் ஒரு நேர பாடசாலை நடைபெறும். பொதுவாக புதன் கிழமைகளில் பெற்றோர்களில் ஒருவர் தமது வேலையில் விடுமுறையை எடுத்திருப்பார்கள். பாடசலை விட்டதும் அவர்கள் பிற செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். உதாரணமாக விளையாட்டு.

குழு1, குழு 2 இல் பொதுவாக மாணவர்கள் எழுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்க படிக்க மாட்டார்கள். இந்த மாணவர்களுக்கு கல்வி அதற்கென பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால் வழங்கப்படும். மாணவர்களை தினமும் பெற்றோர்கள் பாடசாலைக்கு அழைத்து வருவார்கள். அதே போன்று பாடசாலை முடிவடைந்ததும் பெற்றோர்கள் அழைத்துச் செல்வார்கள். **பாடசாலைக்கும் பெற்றோர்களுக்கும் இடையே மிகவும் நெருக்கமானதொரு இணைப்பு இருக்கும். பாடசாலை ஆசிரியர்கள் ஒரு மாணவர் பாடசாலைக்கு வந்ததும் அவர்களுக்கென ஒரு கோவை தயாரித்து மாணவர்களது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மிகவும் துல்லியமாக குறித்து வைப்பார்கள். மெல்லக்கற்கும் மாணவர்கள், விரைவாக கற்கும் மாணவர்கள். மாணவர்களது ஈடுபாடுகள் போன்றவற்றை இனங்கண்டு கொள்வார்கள். மாணவர்களை விளையாட்டுடன் சேர்த்தே அவர்களது வயதிற்கு தேவையான கல்வியை வழங்குவார்கள். பின்னடைவான மாணவர்களை எவ்வாறு முன்னேற்றலாம் என்பதை மாணவர்களுக்குரிய ஆய்வுகளை செய்வதன் மூலம் அவர்களது திறனை அடையாளம் காணுவார்கள்.**

பாடசாலைகளில் மாணவர் நலனை கவனிப்பதற்காக ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டிருப்பார். பெற்றோர்களும் தமக்கு ஒய்வான நேரங்களில் மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக பாடசாலை செல்வார்கள். உதாரணமாக மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுவது. மாணவர்களுக்கு கதை வாசிப்பது. விழாக்கள் நடக்கும் காலங்களில் உதவிகள் வழங்குவது போன்ற சேவைகளை முழுமனதுடன் பெற்றோர்கள் செய்வார்கள்.

பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள் ஒவ்வொரு தவணை முடிவிலும் இடம்பெறும். தந்தை தாய் இருவரும் வகுப்பாசிரியருடன் கலந்துரையாடுவார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் மாணவரது வளர்ச்சி பற்றி மிகவும் விரிவாக கூறுவார்கள். மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை காண்பிப்பார்கள். பெற்றோர்களுக்கு ஏதாவது அறியவிருப்பம் இருப்பின் ஆசிரியருக்கு நேரமிருந்தால் பாடசாலையால் தமது பிள்ளையை அழைத்து வரும்போது கேட்கலாம். அதிக நேரம் தேவைப்படின் அதற்கான ஒரு நேரத்தை ஒதுக்கி ஆசிரியருடன் கதைக்கலாம். மாணவர் ஆசிரியர் பெற்றோர் என்ற முக்கோண வடிவில் மாணவர்களது நலன் வளர்ச்சி என்பன கண்காணிக்கப்படும்.

**இங்கு சுவாரஸ்யமான விடயம் என்னவெனில் எந்தவொரு மாணவனுமே தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லமாட்டார்கள். மாணவர்களை படி படி என்று வீட்டில் பெற்றோர்கள் வற்புறுத்தவும் முடியாது. மாணவர்கள் படிக்கவில்லை என பெற்றோர்கள் அடிக்கவும் முடியாது. குழந்தைகளை இயல்பாக அவர்களது வயதிற்கேற்றபடி வளரவேண்டும்** என்பது மிகவும் முக்கியமான விடயம்.

குழு 3 ற்கு மாணவர்கள் வந்ததும் அவர்கள் எழுத வாசிக்க கற்றுக்கொள்வார்கள். அதனையும் மிகவும் சிறப்பாக செய்வார்கள். மிகவும் குறுகிய காலத்தில் மாணவர்கள் வாசிக்கவோ எழுதவோ பழகிவிடுவார்கள். விரைவாக கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற மாதிரி கல்வி வழங்கப்படும். மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு மேலதிக உதவிகள் வழங்கப்படும். பொதுவாக துணை ஆசிரியர் ஒருவர் இந்த மாணவர்களை கவனித்துக் கொள்வார். மாணவர்களது கவனம் வகுப்பில் சிதறாதபடி ஆசிரியர் கவனித்துக் கொள்வார். மீத்திறன் கூடிய மாணவர்களை சில சமயங்களில் ஒரு குழுவினை தவிர்த்து அடுத்த குழுவிற்கு செல்வதற்கு ஆலோசனை வழங்குவார்கள். மாணவர்கள் பற்றி என்ன முடிவு எடுப்பதெனினும் அதனை பெற்றோர்களுடன் கலந்தாலோசித்தே செய்வார்கள். குழு 3 இன் பின்னர் மாணவர்களுக்கு தேர்ச்சி அறிக்கை வழங்கப்படும். பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடலின் போதே வழங்கப்படும். ஆசிரியர் தனது கருத்தை மிகவும் துல்லியமாக எழுது-வார். சிறப்புகள் குறைபாடுகள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பன எழுதப்படும். இங்கு எந்த மாணவன் முதலாம் பிள்ளை எந்த மாணவன் இரண்டாம் பிள்ளை அதாவது மாணவர்களது நிலை போடப்படுவதில்லை. மற்ற மாணவன் என்ன புள்ளிகள் எடுத்தான் என்பதை அறிய பெற்றோர்களும் ஆர்வம் காட்டுவதில்லை. மாணவர்களது நிலை பற்றி யாருமே கதைப்பதில்லை. மாணவர்களிடம் ஏற்றத்தாழ்வு வரக்கூடாது என்பதை சிறிய வயதிலிருந்தே அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. படிக்க கூடியவர்கள் ஒரு வகுப்பிலும் படிக்க முடியாதவர்கள் இன்னொரு வகுப்பிலும் விடுவதும் இல்லை. பொதுவான பாடசாலையில் கல்வியை தொடர முடியாத மாணவர்களை மட்டும் அவர்களுக்குரிய சிறப்பு பாடசலைக்கு அனுப்புவார்கள்.

நன்றாக படிக்கும் மாணவர்கள் வகுப்பேற்றப் படுவார்கள். சில மாணவர்கள் இருந்து படிக்க வேண்டிய நிலை இருப்பதுண்டு. குழு4 குழு 5 குழு 6 என்ற வகுப்புகளில் மாணவர்களுக்கு அவர்களது வயதிற்கேற்ப அனைத்து விடயங்களுமே கற்பிக்கப்படும். இந்த வகுப்புகளிலும் மேலே எழுதப்பட்ட அனைத்து விடயங்களும் நடைபெறும். மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வார்கள் விளையாட்டு போட்டிகள் இடம் பெறும்.

மாணவர்களுக்கு குழு 8 ற்கு வரும் போது அவர்களுக்கு நாடளாவியரீதியில் புலமைப்பரீட்சை நடைபெறும். மாணவர்கள் குழு 6 குழு 7 படிக்கும் போதே ஆசிரியர்கள் மாணவர்களைத் தயார்படுத்த ஆரம்பித்து விடுவார்கள். பாடசலைக்கு சேர்ந்த காலத்திலிருந்தே மாணவர்கள் பற்றிய அனைத்து விபரங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கும். குழு 7 ற்கு வந்த பின்னர் பரீட்சார்த்தமாக மாணவர்களுக்கு பரீட்சைகள் வைப்பார்கள். அந்த புள்ளிகளையும் அடிப்படையாக வைத்து குழு 3 இலிருந்து அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்த கருத்துகளின் படி குறித்த மாணவர் தொடர்ந்து என்ன படிக்கலாம் என்ற ஆலோசனையை பெற்றோர்களுக்குவழங்குவார்கள். குழு 8ற்குவந்ததும் அவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும்.

இங்கு சிறப்பான விடயம் என்வெனில் மாணவர்களுக்கு இந்த பரீட்சை பற்றி எந்த நெருக்கடியும் இருக்காது. அவர்கள் வழமையாக பாடசாலை செல்வது போல் சென்று பரீட்சை எழுதி விட்டு வருவார்கள். இந்த மாணவர்கள் பயிற்சி வகுப்புகளுக்கு செல்வது இல்லை. இங்கு அது அவசியமும் இல்லை. ஆசிரியர்கள் மாணவர்களின் நலத்தில் மிகவும் அக்கறை காட்டுகிறார். இந்த பரீட்சைக்கு பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நெருக்கடி செய்வதில்லை. பாடசாலையில் பிள்ளைக்கு போதுமான பயிற்சி வழங்கப்படுகிறது. பரீட்சை முடிந்து பெறுபேறுகள் கிடைத்த பின்னர் பெற்றோர்களை அழைத்து மாணவர்களது சான்றிதழ்களை கொடுப்பார்கள். அத்துடன் அவர்கள் மேற்கொண்டு என்ன படிக்கலாம் என்ற முடிவான ஆலோசனையையும் வழங்குவார்கள். பெரும்பாலும் ஏற்கவே வழங்கப்பட்ட ஆலோசனை யாக இருக்கும். பிள்ளைகளுக்கிடையில் தமது புள்ளிகளை பகிர்ந்து கொள்வார்கள். அதிகூடிய புள்ளிகளை யார் வாங்கினார்கள் என்பதே தெரியாது. அதைப்பற்றி யாரும் அக்கறைப்படுவதில்லை. எடுத்த புள்ளிகள் முகநூலில் வருவதும் இல்லை. எந்த தாழ்வு சிக்கலும் மாணவர்களுக்கு வரக்கூடாது என ஆசிரியர்கள் ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித்து வருகின்றனர்.

சிறந்த மாணவர்கள் நேரடியமாக பல்கலைகழகம் போவதற்கான 6 வருடங்கள் படிக்க வேண்டிய பாடசாலைக்கு செல்வார்கள். அதற்கு அடுத்த படியான மாணவர்கள் 5 வருடங்கள் படித்து பரீட்சை எழுதும் பாடசாலக்கு செல்வார்கள். அதற்கு அடுத்தபடியாக 4 நான்கு வருடம் தொழிற்கல்வி பயில வாய்ப்பளிக்கும் பாடசாலைக்கு செல்வார்கள். இதிலும் பல பிரிவுகள் உள்ளன. **இங்கு எந்த தொழில் செய்யவேண்டுமென்றாலும் அதற்கு சான்றிதழ் தேவை. தலைமுடி வெட்டுவதானாலும் சரி. சுமையல் வேலை ஆனாலும் சரி மேசன் வேலை என்றாலும் கூட சான்றிதழ் அவசியம்.** இங்குள்ள கல்வியில் உள்ள சிறப்பம்சம் என்னவெனில் நீங்கள் 12 வயதில் தொழிற்கல்விக்கு சென்று அங்கு நன்றாகப்படித்து படிப்படியாக பல்கலைக்கழகம் போகமுடியும். உயர்தரக்கல்வியை படித்து சித்தியடைபவர்கள் அனைவருமே பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்புள்ளது. எங்களது நாட்டில் அதற்கான வாய்ப்பு இல்லை.

இங்கு ஒரு விடயத்தை குறிப்பிடவேண்டும் இந்த புலமைப்பரிசில் பரீட்சை என்பது தற்போது இலங்கையில் போட்டிப்பரீட்சையாகவும் பணம் சம்பாதிக்கும் பரீட்சையாவும் மாறி வந்து விட்டது. இது மிகவும் வருத்தத்திறகுரிய விடயமே. பாடசாலை கல்வியை பெற்றோர்கள் நம்பவில்லை. பிள்ளைகளை இங்கும் அங்குமாக பல பிரத்தியேக வகுப்புகளுக்கு கூட்டிச்செல்கின்றனர். விளையாட வேண்டிய பிள்ளைகள் படிப்பு படிப்பு என அவர்களது குழந்தை தன்மையை இழந்து விடுகின்றனர். பரீட்சைகள் முடிந்து புள்ளிகள் வந்ததும் அதுபற்றி மிகவும் பரபரப்பாக பேசப்பட்டு பாடசாலைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விழாக்கள் எடுக்கப்படுகிறன. அதிக புள்ளிகள் எடுத்த மாணவர்களை பிரபல்யபடுத்துகின்றனர். 12 வயதான ஒரு குழந்தை சித்தியடையாது விட்டால் எவ்வாறு வேதனையடையும் என்பதை யாரும் உணர்வதில்லை. ஒரு மேலதிகாரியின் பிள்ளைளைவிட தொழிலாளி யின் பிள்ளை அதிக புள்ளி எடுத்தால் அது கௌரவக்குறைவாக பார்க்கப்படுகிறது. மற்ற மாணவர்கள் என்ன புள்ளிகள் எடுத்தார்கள் என்பதை அறிய முனைகின்றனர். சித்தியடையாத மாணவர்களை பெற்றோர்கள் திட்டித்தீர்க்கின்றனர் நாங்கள் படிக்கும் காலத்தில் இந்த பரீட்சை நடப்பதே யாருக்கும் தெரியாது. இந்த பரீட்சையின் நோக்கமே தற்போது மாறிவிட்டது. இந்த நிலை மாறவேண்டும். குழந்தைகள் குழந்தைகளாக வாழவேண்டும்.

நெதர்லாந்து நாட்டில் பாடசாலை ஆசிரியர்கள் சிறந்த சமுதாயம் ஒன்றினை உருவாக்குவதற்கு தங்களாலான அனைத்து விடயங்களையும் மிகவும் அர்ப்பணிப்புடன் செய்கின்றனர். அவர்கள் பெறும் சம்பளத்திற்குரிய வேலையை கடமையுணர்வுடன் செய்கின்றனர். மெதுவாக மாணவன் ஒருவன் கற்கிறான் எனக் கண்டறிந்தால் பாடசாலை முடிந்ததும் அந்த மாணவர்கள் மீது அதிக கவனம் செலுத்துகின்றனர். மாணவர்கள் தமது பாடசாலை யில் கொடுக்கும் வீட்டு வேலையை செய்யாது பாடசாலை சென்றால் அதற்கு தண்டனை வழங்கப்படும்.

16 வயது வரைக்கும் மாணவர்கள் கண்டிப்பாக பாடசாலைக்கு செல்லவேண்டும். அவ்வாறு செல்லாதிருந்தால் பெற்றோர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலையை எந்த பெற்றோரும் விரும்பமாட்டார்கள்.

**ஒரு சிறந்த சமூதாயத்தினை ஆசிரியர் செதுக்குகிறார்** என்பதை பார்க்க முடிகிறது.

நெதர்லாந்து கல்வி முறை வழக்கமான ஆரம்பக் கல்வி, சிறப்பு ஆரம்பக் கல்வி என தொடங்குகிறது. ஆரம்பக் கல்விக்குப் பிறகு ஏழு வகையான இடை நிலைக் கல்வியும், அத்தனைத் தொடர்ந்து மூன்று வகையான மேலதிகக் கல்வியும் உள்ளன. கல்வி முறையில் மிக உயர்ந்த பட்டம் பி.எச்.டி ஆகும்.

o


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் ஏன் சிங்கள மொழி கற்க ஆர்வமானேன்?

க. வாசுதேவன்
(பிரான்ஸ்)

மொழியென்பது மனிதர்களின் அனுபவத் திரட்சிகள் அடைக்கப்பட்டு காலத்தினூடாக கடத்தப்படும் ஒரு பெரும் சொத்து. எல்லா மொழிகளும் முழுமையாக மானிடத்திற்கே சொந்தமானவை. இன அடையாளம் மொழிகளுக்குண்டெனினும், அது "இனம்" என்ற கூட்டுக்குள் அடைத்து வைக்கவேண்டிய விடயமேயல்ல.
தாய் மொழியென்பது ஒவ்வொருவரினதும் உயிருக்குள் கலந்திருப்பது. ஆத்மாவில் உறைந்திருப்பது. அதைக் கற்றலுக்கு பிரயத்தனங்கள் தேவையில்லை.
இருப்பினும் இன்னொரு மொழியைக் கற்பதற்குப் பிரயத்தனங்கள் தேவை. அப்பிரயத்தனங்கள்கூட ஆனந்தமான அனுபவங்களாகப் பரிணமிக்கும் வேளையில் தான் உயிருக்கு இன்னொரு பரிமாணம் கிடைக்கிறது. மொழிகற்றல் என்பது நுணுக்கங்களுள் நுழைதல். புத்தம் புதிய கால -இட- மனப்பரிமாணங்களில் சஞ்சாரம் செய்தல்.

தமிழில் ஊறித் திழைத்து, ஆங்கிலமறிந்து, பிரஞ்சில் வாழ்ந்து, நான்காவது மொழியாகச் சிங்களத்தை கற்றுக்கொண்டிருக்கிறேன். ஏதற்காக ?
அது என் அயல் மொழியென்பது ஒருபுறமிருக்க, அது தமிழும், சமஸ்கிருதமும், பாளியும் கலந்த மானிட மனோவனுபவம் என்பது இன்னொரு புறமிருக்க,
**புதிய மொழியொன்றைக் கற்றலில் மனம் கண்டடையும் பேரின்பம் சொல்லிலடங்காதது. அது எத்தனை எத்தனை கதவுகளை அகலத்திறந்து விடுகிறது. ஒரு மொழியூடாக இன்னொரு பிரபஞ்சமே வெளிப்படுகிறது.**
ஒரு சிங்களப் பேராசிரியர், சிங்கள மொழியிலிருந்து தமிழ் சொற்களை நீக்கிவிட்டால் அது ஒரு மொழியாக இருக்காது என்று கூறினார். இவ்விடயத்தை சில சிங்கள நண்பர்களுடன் பகிர்ந்தபோது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் அதை அறியாதிருந்தார்கள்.
அவர்களின் அந்த ஆச்சரிய உணர்வு அவர்களின் கல்விக்கூடங்கள் இழைத்த தவறைப் பறைசாற்றின. காலப்போக்கில், கற்றுக்கொண்டே செல்கையில், சிங்களத்துள் விரவிக்கிடந்த தமிழையுணர்ந்தபோது, அது வெறும் அயல்மொழி மாத்திரமல்லாது என் தாய் மொழியின் கூறுகளை தன்னகத்தே கொண்டிருந்ததானது கற்றலுக்கு ஊக்கமளித்தது. இன்னமும் ஊக்கமளிக்கிறது. ஒரு மனிதரை அவரின் தாய் மொழியிலே தொடர்புகொள்ளும் போது அவரின் சொற்களிலேயே அவருடன் உரையாடும்போது ஏற்படும் புரிந்துணர்வும் நெருக்கமும் நிச்சயமாக சமூகவியல் ரீதியான ஒரு பேராதாயம். உளவியல் ரீதியில் அது ஒரு சுவர்களற்ற விடுதலை.

தென்னிலங்கையில் பொது வாகனச்சேவையில் பயணிக்கும் போது கேட்கக்கூடிய பாடல்களுக்கு முன்னைய நாட்களில் நான் அந்நியன். அது எனக்கு வெறும் சத்தம். தற்போது நான் அதை ரசிக்கிறேன். இன்னொன்றை அறிதலினால் என் மனத்தை விசாலித்துக் கொள்கிறேன். என் அந்நியப் பரிமாணத்தைக் குறைத்துக்கொள்கிறேன். "அடுத்ததைப்" பற்றிய அச்சமின்றியிருக்கிறேன். எழுபது, எண்பதாம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட சிங்களப் பாடல்களின் கவித்துவம் என்னைக் கவர்கிறது. சிங்கள மொழிச் சமூகத்தின் கூட்டு மனோ நிலைக்குள் எனக்கு அனுமதி கிடைக்கிறது. உள்ளிருந்தே விடயங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிக்கிறேன். வெளியிலிருந்து பார்த்தவைக்கும் கேட்டவைக்கும், உள்நுழைந்து பார்ப்பவைக்கும் இடையில் உள்ள வித்தியாசங்களை உணர்ந்து கொள்கிறேன். மொழியாயினும், மதமாயினும் இடைத்தரகர்கள் அற்ற உலகம் இதமாக இருக்கிறது.
அது எனக்குக் கிடைத்த வரமெனக் கருதுகிறேன்.

*07.02.2024*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்போக்கு முதலாளித்துவம்
## – Progressive Capitalism
## A Case Study

- ஓடைக்காரன்



**அரசு** மருத்துவமனைக்குச் செல்லப் போக்குவரத்துச் செலவுக்கு போதிய பணம் இல்லாததால் குடா நாட்டில் உள்ள எங்கள் குடிசையில் நானும் இரு தங்கைகளும் பிறந்தோம். குடிசைக்குப் பின்னால் கிடங்கு மலசல கூடம். வளவு முழுவதும் வெள்ளம் வந்தால் அருகில் இருக்கும் கல்லூரி தான் தஞ்சம். அம்மாவுக்குத் தொய்வு இரவு முழுவதும் இழுக்கும் என்பதால் எனக்கு நித்திரை குழம்பி விடும். அப்புவுக்குக் கூலி வேலையால் வந்த உடல் அலுப்பில் நன்றாக குறட்டை விட்டுத் தூங்கி விடுவார். தூக்கமின்மையால் நான் படிக்கவில்லை என்று பொய் சொல்ல விரும்பவில்லை. சராசரிக்கும் குறைவான மாணவன். எட்டாம் வகுப்பை இரண்டு முறையும், பத்தாம் வகுப்பை மூன்று முறையும் திரும்பத் திரும்பப் படித்தேன். எங்கள் குடிசைப் பக்கத்து கல்லூரி எனக்கு உயர்தரத்துக்கு அனுமதி கொடுக்கவில்லை, ஏனென்றால் நான் படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டிலும் பேச்சுப் போட்டி போன்றவற்றிலும் நல்லாய் இல்லை என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் என்னைப் போல வாங்கைச் சூடாக்கிறவர்களை (bench warmers) எடுக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்பு கூலி வேலை செய்யும் வீட்டில் இருந்த ஒரு ஆசிரியர்தான் என்னைக் கொண்டுபோய் இன்னொரு கல்லூரியில் சேர்த்து விட்டார். அந்தக் கல்லூரி என் வீட்டிலிருந்து 7 கிமீ தொலைவில் உள்ளது. நான் முதலில் நடந்தேன், பிறகு அப்பு எனக்காக ஒரு பழைய மிதிவண்டியை வாங்கினார். கைவிளக்கில் கவனமாகப் படித்தேன், ஆனால் என் மூளையில் அதிகம் ஏறவில்லை. A/L நான்கு பாடங்களிலும் தோல்வியடைந்தேன். நான் அதிக எதிர்பார்ப்பு, உற்சாகம் இல்லாமல் இரு பக்கமும் பசுமையான வயல் வெளியில் எதிர்க்காற்றுக்கூடாகச் சைக்கிளை உழக்கி கொண்டு மீண்டும் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தேன். அந்த நேரத்தில், முதல் முதலாக முதலாளித்துவ மின்னலால் தாக்கப்பட்டேன். எதிரே வந்த நண்பன் வழி மறித்து “காங்கேசன்துறை சிமெண்ட் தொழிற்சாலைக்கு மூன்று மாத அடிப்படையில் கூலி தேவையாம், வாறியா?”

சைக்கிளை அன்று வீட்டுப்பக்கம் திருப்பின நான் பிறகு பாடசாலையைத் திரும்பிப் பார்க்கவில்லை. நான் போகாததால் பாடசாலைக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அப்புவுக்கு நான் கூலிக்குப் போவது பிடிக்கவில்லை. மூன்று மாதம் வேலை என்றாலும் மாதம் நாலாயிரம் ரூபா தந்தார் முதலாளி. அது அந்த நேரத்தில் நல்ல சம்பளம். கல்லூரி அதிபரே ஆயிரம் ரூபாய் மட்டில்தான் எடுத்திருப்பினம். வேலை சரியான கடுமை, உடம்பு முழுவதும் வலி, அம்மா, முட்டைக் கோப்பி ஒவ்வொரு நாளும் தருவா. ஒருமாதிரி மூன்று மாத வேலை இழுபட்டு நாலு மாதம் ஆனது. என்னிடம் செலவு போகப் பதினையாயிரம் மட்டில் இருந்தது.

கொழும்பில் அரிசிக் கடையில் கணக்கு எழுதும் மாமா வீட்டை வந்தபோது என்னையும் கணக்கு எழுதக் கூட்டிப் போனார். எனக்கு கணக்கு எழுதப் பிடிக்கவில்லை என்று சொல்வதை விட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப் போடத் தெரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். லாரியில் அரிசி மூட்டைகளை இறக்கி க் களஞ்சியத்தில் அடுக்கினேன். எனது சுறுசுறுப்பைப் பார்த்த முதலாளி இந்த வேலையை தொடர்ந்து செய் என்று சொன்னார்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

எவன் எவன் என்ன வேலையைச் சிறப்பாகச் செய்ய கூடியவன் என்று அறிந்து அவன் அவனுக்கு அந்த அந்த வேலையைக் கொடுப்பவனே சிறந்த தலைமைத்துவ பண்புகள் உடையவன். Leadership - குறள் முதலாளி படித்திருப்பாரோ?

நல்ல சாப்பாடும் கடையின் பின்புறத்திலே தங்குமிட வசதியும் முதலாளி செய்து தந்தார். ஒரு வருடம் ஓடியே போய் விட்டது.

அப்பொழுதுதான் கத்தாரில் கட்டிட வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள் என்றும் அதற்குப் பன்னிரண்டாயிரம் கட்ட வேண்டும் என்றும் கேள்விப்பட்டேன். மாமாவுடன் போய் வேலை ஏஜென்சியிடம் காசைக் கட்டினேன். இரண்டு வருட ஒப்பந்தத்திற்கான விசா மற்றும் பணி அனுமதி பெற்றேன். மிகவும் கடினமான வேலை, ஆனால் இந்தியாவில் இருந்து நல்ல நண்பர்கள் என்னுடன் பணிபுரிந்தனர். அவர்களுடன் அறைத் தோழர்களாக தங்கினேன். அவர்களிடம் இருந்து சமையல் முதல் வங்கி வரை நிறையக் கற்றுக்கொண்டேன். சொந்த மாநில மொழி, ஹிந்தி மற்றும் ஆங்கிலம் சரளமாகப் பேசுவதைப் பார்த்தபோது எனக்குத் தமிழ் மட்டும்தான் சரளமாகப் பேச வரும் என்பதை நினைக்கக் கொஞ்சம் நெருடல் ஆக இருந்தது.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு இலங்கைக்கு வந்தேன். கத்தாரில் இருந்து வந்த பிறகு, மீண்டும் அதே நாட்டிற்கு மற்றொரு ஒப்பந்தத்திற்கு மேலும் சில வருடங்கள் செல்ல விரும்பினேன். பல மாதங்கள் ஓடின, ஆனால் ஒரு ஒப்பந்த வேலையும் கிடைக்க வில்லை.

இப்போது பலர் மாஸ்கோ, கிழக்கு பெர்லின் வழியாக ஐரோப்பாவிற்குச் செல்ல முயற்சிப்பதை அறிகிறேன். ஐரோப்பாவிற்குள் நுழைவதற்காக ஒரு ஏஜென்சிக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தேன். இது நான் கத்தாரில் சம்பாதித்துச் சேமித்த தொகைக்கு கிட்டத்தட்டச் சமம். "சேமிப்பையெல்லாம் செலவழித்துவிட்டு ரோட்டில் நில்லு" என மாமா திட்டினார். நீங்கள் எப்போது என்னை ஐரோப்பாவிற்கு அனுப்பப் போகிறீர்கள் என்று நான் தினமும் ஏஜென்சியிடம் கேட்டேன். வெளிநாடு போகப்போறேன் என்று சொல்வதே எனது வேலை ஆகி விட்டது. பகீரதப் பிரயத்தினத்திற்குப் பிறகு, பல திரிசங்கு சொர்க்கங்களைக் கண்டு ஜெர்மனி வந்து சேர்ந்தேன். தமிழ் நண்பர்களின் உதவியால் கார் பழைய பாகங்கள் பகுதியில் வேலை கிடைத்தது. பழைய கார்களில் இருந்து நல்ல பாகங்களைப் பிரித்தல் வேலை, ஆரம்பத்தில் வேலை கடினமாக இருந்தது, என்னுடைய மொழித்திறன் மிகவும் குறைவாக இருந்தாலும், அவர்கள் எனக்குச் செய்முறையில் நன்றாகக் கற்றுக் கொடுத்தார்கள். ஆறு மாதங்களுக்குப் பிறகு என்னை நிரந்தரமாக்கினார்கள். மாலையில் வீடு செல்லும்போது, உடல் முழுவதும் வலிக்கும், காலப்போக்கில் வலிகளுக்குப் பழகிவிட்டேன்.

இன்று திரும்பிப் பார்க்கும்போது, நாற்பத்து ஒரு ஆண்டுகள் வேகமாக ஓடிவிட்டன. இப்போதும் நான் வாரத்தில் இரண்டு நாட்கள் பகுதி நேரமாக வேலை செய்கிறேன். மேட்டுக் காணியில் இரண்டு கல் வீடுகள் கட்டி தங்கச்சிமார் இரண்டு பேரையும் கரை சேர்த்துப் போட்டேன். இனி வெள்ளம் வந்தால் அலைய வேண்டியதில்லை. கடைசித் தங்கைச்சிக்கு என்னைவிட பத்து வயசு குறைவு. திருவிழாவுக்குப் போகேக்கை என் தோளில் சுமந்திருக்கிறேன். நான் ஐரோப்பா செல்லும் போது அவள் நிறையவே அழுதாள். பல ஆண்டுகளுக்கு முன்பு அவளின் முதல் கர்ப்ப காலத்தில் எனக்கு ஒரு கடிதம் எழுதினாள். பாச இலக்கியம் என்று இன்னும் பொக்கிஷமாக அக்கடிதத்தைப் பொத்தி வைத்திருக்கிறேன்.

அன்புள்ள அண்ணாவுக்கு,

நாங்கள் நலம் என்னைத் தவிர ,
உங்கள் எல்லோரையும் நலமாக வைத்திருக்க இறைவனை வேண்டுகிறேன்.
நான் மிகவும் நலமாக இருக்கிறேன் என்று பொய் சொல்லமாட்டேன்.
காலங்காத்தாலைகளில் நாய் மாதிரி சத்தி எடுக்கிறேன். வீட்டை வாறவர்கள், என்ன ஆறு மாதம் என்கிறியள், ஒரு வவுத்தையும் காணேல்லை என்று கேட்கிறார்கள்.
அம்மா சொல்கிறா, எக்கணம்! நீ பல்லியைத் தான் பெறப் போகிறாய் என்று.
சுத்து மதில் கட்ட அனுப்பின காசு இன்னும் பத்திரமா பாங்கில் இருக்குது.
வேலியில் இருக்கிற சீமைக்கிளுவையைத்தான் ஆடுகளுக்கு போடுகின்றனான். சுத்து மதிலை கட்டினால் ஆடுகளுக்கு குழைக்கு எங்கை போறது?
இண்டைக்கு சிவப்பு அரிசிமா இடியப்பமும் பால் சொதியும் வச்சனான். அம்மா சொன்னா உனக்கு விருப்பமான சாப்பாடு என்று. இந்த அம்மாக்களுக்கு பொம்பிளைப் பிள்ளையளுக்கு என்ன பிடிக்கும் என்று தெரியாது. கல் வீட்டுக்கு வரும் போது பழைய சருவச்சட்டியெல்லாம் எறிந்து போட்டு வந்தனான்கள். ஆனா நீ குடிச்ச மூக்குப்பேணியை பத்திரமாக கொண்டுவந்து புளி போட்டு மினுக்கி ஷோ கேசில்லை வைத்திருக்கிறன்.

இப்படிக்கு
சின்ன தங்கச்சி

என் மனைவி பக்க மரபணுக்கள் நன்றாக இருப்பதால் என்னவோ எங்கள் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பில் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். என் மகள் ஒரு பல் மருத்துவர், என் மகன் கணனி அறிவியல் முதுகலைப் பட்டதாரி, ஜெர்மனியில் உள்ள அமெரிக்க நிறுவனத்தில் பணி-புரிகிறார். அவர் அடிக்கடி கணனி மாநாடுகளுக்காகக் கலிபோர்னியாவுக்குப் பறந்து செல்வார். அமெரிக்க மாநாடுகளில் ஆங்கிலத்தில் பேசுகிறார். ஜெர்மனியில் ஜெர்மன் பேசுவார், வீட்டில் தமிழ் பேசுவார். பிள்ளைகள் புத்தம் புதிய BMW கார்களையும் பெரிய வீடுகளையும் வாங்கினார்கள். நான் இன்னும் பழைய வீடு மற்றும் பழைய BMW கார் தான் வைத்திருக்கிறேன். குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும் என்று சொல்வார்கள்.
என்னைக் குட்டிய முதலாளிகள் ஒரு மோதிரம் தான் போட்டிருக்கவேணும். என் பிள்ளையளுக்குக் குட்டிய முதலாளிகள் எல்லா விரல்களிலும் மோதிரம் போட்டிருக்கிறார்களோ? இந்த அதிசயங்களையெல்லாம் பார்க்க என் அப்பு உயிருடன் இல்லையே என்று வருத்தமாக இருக்கிறது.

எனக்கு ஜேர்மன் ஓரளவு தெரியும். ஆனால் எனது டாக்குத்தரோடை கதைக்குறது என்றால் மகள் தான் மொழிபெயர்ப்பாளர். என் மகள் தனியார் பல் மருத்துவமனையில் பணிபுரிகிறாள். அவளுக்கு அங்கே ஒரு முதலாளி (Chief Dental Doctor) இருக்கிறார். என் மகனுக்கு அமெரிக்காவில் ஒரு பெரிய முதலாளி (CEO) இருக்கிறார். இங்கே ஜெர்மனியில், அவரது சின்ன முதலாளியைத் துணை அதிபர் (Vice President) என்று சொல்வார்கள். எங்கள் குடும்பம் தலைமுறை தலைமுறையாக முதலாளிகளுக்காக உழைக்கிறோம். இப்போதெல்லாம் ரஷ்யா, சீனா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளில் இருந்து பெரும் பணக்காரர்கள் லண்டன் மற்றும் நியூயார்க்கில் ஆடம்பரச் சொத்துக்களை வாங்குகிறார்கள்.
ஓய்வு நேரத்தில் முற்போக்கு இலக்கியம் வாசித்து வருகிறேன். அதில் மார்க்சியம், கம்யூனிசம் பற்றி எழுதியுள்ளனர். படிக்க நன்றாக இருக்கிறது, இருப்பினும் இலங்கையில் பரம ஏழைகளாக இருப்பவர்களுக்கு ஏதாவது விமோசனம் இருக்கா என்று இப்புத்தகங்களில் தேடுகிறேன். மார்க்சியம் புத்தகங்களில் மட்டும்தான் உயிருடன் இருக்கிறதா? அல்லது முற்போக்கு முதலாளித்துவத்தைப் பின்பற்றி படிப்படியாய் முன்னேறிய எனது அடிச்சுவடுகள் சரியா? எனக்குள் விவாதித்துக் கொண்டிருக்கிறேன்.
நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்?

- ஓடைக்காரன்

> நான் இளமையாக இருந்தபோது,
> கோபமும் கம்யூனிசமும் இல்லாதிருந்தேன்
> \- எழுத்தாளர் சுஜாதா

## புலம்பெயர் தேசத்தில் தமிழர் கலாசாரம் வளர்கிறதா? தேய்கிறதா?




மேற்படி தலைப்பில் பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல் விழாவில் சிறப்புப் பட்டிமன்றம் நிகழ்வு இடம்பெற்றது.

விவாதத்தின்போது பயன்மிக்க பல கருத்துகள் முன்வைக்கப்பட்டன. தமிழர் கலாசாரம் என்றாலே என்னவென்று தெரியாது அல்லது தெளிவில்லாது கலாசாரம் வளர்கிறதா? தேய்கிறதா? என விவாதம் நடாத்தமுடியாது.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என பழந்தமிழ் நூற்கள் சொல்லுகின்றன .
அந்த வகையில் பின்வருவனவற்றைத் தமிழர் பண்பாடுகளாகக் கொள்ளலாம்.
- இயற்கையினைப் போற்றுதல்,
- நீத்தார் வழிபாடு
- மூத்தோரை மதித்தலும் போற்றுதலும்
- அறம் பேணல்,
- காதலும், இல்வாழ்க்கையும்,
- விருந்தோம்பல்,
- செய் நன்றி மறவாமை,
- ஈகையும், கருணையும்,
- சொன்ன சொல், நா பிறழாமை ...

பண்பாடு என்பதற்குள் ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவுப் பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூகக் கட்டமைப்பு , மொழி, உணவு, இசை, நம்பிக்கைகள் என்பனவும் உள்ளடங்கும். நம் முன்னோர்கள் ஒன்றும் மூடர்கள் அல்ல. மனித இனத்தின் வளர்ச்சிக்கு அல்லது அறத்திற்கு எதிரான எதனையுமே பண்பாடு எனப் பற்றியிருக்கத்தேவையில்லை என்பது தமிழ் முன்னோர் எமக்கு சொன்ன அறிவுரை ஆகும் .

- பார்த்தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் நிகழ்வுகள்





1. Le 360 Paris Music Factory மண்டபத்தில் டிசம்பர் 2,3ஆம் தேதியில் நடைபெற்ற சூரிச் எக்ஸ்பெரி தியேட்டர் வழங்கிய "காலனித்துவ நீக்க ஆற்றுகை" ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழியில் நிகழ்த்தப்பட்டது. 90 நிமிடங்கள் நடைபெற்ற இவ் ஆற்றுகையில் வெளி நாட்டவர்களுடன் எம்மவர்களான இரண்டு தமிழர்கள் பங்கு பற்றியதுடன் அந்த நிகழ்வுக்கு பெரும்பங்காற்றியும் இருந்தனர்.

2.Salle des fêtes de la ferme மண்டபத்தில் இதழ் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகம் வழங்கிய
எங்கள் கலைஞர் 2023 கலை விழா
17.12.2023 அன்று பாரிசின் புறநகர் பகுதியில் நடைபெற்றது.
160 கலைஞர்கள் பங்கேற்ற பெருவிழா.

3. பிரான்ஸ் தமிழர் வர்த்தக சங்கம் நடாத்திய "வருக 2024" நிகழ்வில்
பல அரங்க நிகழ்வுகளும் பல் துறைசார் பணிகளுக்காகப் பன்னிரண்டு பிரான்ஸ் வாழ் ஆற்றலாளர்களுக்கு "தகமைசால் தமிழர் விருதும்" வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.
இந் நிகழ்வானது கடந்த 17.12.23 அன்று பாரிஸில் நடைபெற்றது...

4.இலங்கைத் தமிழ் பழையமாணவர் ஒன்றியம் வழங்கிய "நல்லதோர் வீணை செய்து..." கலைநிகழ்வு
07.01 2024 ஞாயிற்றுக்கிழமை
8 rue de la Philosophie, 93140 Bondy யிலும்
22. 01.2024 திங்கட்கிழமை பாரிஸ் 18 மண்டபத்திலும் நடைபெற்றது.
இந்நிகழ்வில் தாயகத்தில் இருந்து வருகை தந்திருந்த பிரபல தாயகக் கவிஞர்களுடன் இணைந்து பிரான்ஸ் வாழ் கவிஞர்கள் பங்குபற்றிய நகைச்சுவைக் கவியரங்கம். நடைபெற்றது.

6.தை 14 ஞாயிற்றுக்கிழமை பாரிசின் புறநகர்ப் பகுதியான லூபூசேயில் சிலம்பு அமைப்பினரினால் 18வது தடவையாக நடத்தப்பட்ட தமிழர் திருநாள் பொங்கல் கொண்டாட்டம் சிறப்பாக இடம் பெற்றது. இந்நிகழ்வில் புத்தகக் கண்காட்சி, உணவுக் கண்காட்சி, அரங்காற்றுகை நிகழ்வுகளும் இடம் பெற்றிருந்தன.

இதே தினம் திருமறைக்கலாமன்றத்தின் பொங்கல் நிகழ்வும் பாரிஸ்-11 மண்டபத்தில் இடம்பெற்றது.

7. வர்த்தகப் பெருமக்களின் ஆதரவுடன் தமிழர் வர்த்தக சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தைத்திருநாள் கொண்டாட்டம் தை 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தமிழர்களின் வர்த்தக மையங்கள் இருக்கும் இடத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், மகிழ்பறை இவைகளோடு அரங்க நிகழ்வுகளாக நடனங்கள், பட்டிமன்றம், பாடல்கள், ஈழத்தில் இருந்து வருகை தந்த கவிஞர்களால் கவியரங்கு போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன.

9. பிரெஞ்சு தேசிய நாடக அரங்கு தயாரித்து வழங்கிய 'ஒபர்லி வூட்' நாடகம் பிரான்ஸ் ஒபேவில்லியே அரங்கில் கடந்த ஜனவரி மாதம் இருவாரங்களாக அரங்கேறியது. இந்தியாவின் பிரபல நாடக இயக்குனர் குமரன் வளவன் இதை எழுதி நெறியாள்கை செய்திருந்தார்
அதிகமான காதல் கதைகளை எழுதிய ரசிய நாடக ஆசிரியர் மற்றும் சிறுகதை எழுத்தாளர் ஆன்டன் செக்கோவின் (Anton Chekhov ) கதையே நாடகமாக்கப்பட்டிருந்தது. கடல் பறவைகள் (THE SEA GULL )நாடகத்தை இயக்க முனையும் ஒரு இளைஞன் தனது மனப் போராட்டங்களுக்கு மத்தியில் அதைத் தன்னால் இயக்க முடிகிறதா ? என்பதே கதையின் சாரம்சம் , இத்திரைப்பட அரங்க நிகழ்வில் பிரபல்யமான பிரஞ்சு நடிகர்கள் நடித்துள்ளதுடன் எழுத்தாளர் ஷோபா சக்தியும் நடித்திருந்தார்.

தொகுப்பு : வே. கெங்கேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதைவஸ்துப் பாவனையின் தாக்கங்கள்

- சின்னையா இரவீந்திரன் (சுவிஸ்)

முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இந்த போதைவஸ்துப் பழக்கங்கள் ஒரு நாகரிகமாக கருதப்படுகிறது. அதாவது களியாட்டங்கள் கொண்டாட்டங்கள் போன்ற இடங்களில் எல்லாம் இந்த போதை வஸ்துகள் முதலிடம் வகிக்கின்றன. பல முன்னேற்றம் அடைந்த நாடுகளில் கூட இந்தப் போதை வஸ்து பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு முயற்சி செய்வதில்லை. காரணம் பல்வேறு நாடுகளின் அந்நியச்செலவாணி வருகை சுற்றுலாப்பயணிகளின் வருகை மூலமே ஈட்டப்படுகிறது. ஒவ்வொரு சுற்றுலாப்பயணியின் சுற்றுலாவின் நோக்கம் வெவ்வேறு பட்டதாக இருக்கும். சிலபேர் தங்களுக்குத் தேவையான ஓய்வைப் பெறுவதற்காகவும், சிலபேர்கள் இயற்கையை இரசிப்பதற்காகவும் அத்தோடு கூடிய வீதத்தினர் வெவ்வேறு வகையான இன்பங்களை அனுபவிப்பதற்காகவும் செல்கிறார்கள். அதில் இந்தப் போதைவஸ்து பாவனையும் ஒன்றாகும். இதனால் பல முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இதை முற்றாக தடுப்பதற்கு முயல்வதில்லை.

ஆனால் இலங்கை போன்ற வறிய நாடுகளை இந்தப் போதைவஸ்து பழக்கங்கள் பல்வேறு விதமான தாக்கங்களை உருவாக்குகின்றது. இன்று எமது நாட்டைப் பொறுத்த அளவில் பொருளாதார பிரச்சனையுடன் இந்த போதைப் பழக்கமும் சேர்ந்து பல்வேறு பிரச்சனைகளை உருவாக்குகின்றது. இன்று இந்த போதை பழக்கங்கள் வயது வித்தியாசம் இன்றித் தொற்றிக்கொண்டு இருக்கிறது. முக்கியமாக இளம் சமுதாயத்தை நன்றாக பற்றிக்கொண்டுள்ளது. இந்த போதை பழக்கம் எவ்வாறு இளம் சமுதாயத்தினரிடையே பரப்பப்படுகிறது. வியாபார நோக்கம் இன்றி இளம் சமுதாயத்தினரின் மனங்களைத் திசை திருப்பவும் வேறு விதமான சிந்தனைகள் மனதில் தோன்றாமல் இருப்பதற்காகவும் கூட இதைத்திட்டமிட்டு பரப்பப்படலாம்.

ஒருமனிதன் போதைப் பழக்கத்திற்கு அடிமையானால் அதில் இருந்து மீண்டு வருவது மிகவும் கடினம். 17 வருடங்களுக்கு மேலாக இந்தப் போதைவஸ்துப் பாவனையாளர்களைப் பராமரிக்கும் வைத்தியசாலை யில் வேலை செய்ததனால் எனக்கு இவர்களின் குணங்களைப்பற்றியும் தேவைகளைப் பற்றியும் ஓரளவுக்கு தெரிந்தபடியால் இதைச் சொல்கிறேன். போதைவஸ்துவிற்கு அடிமையானவன் போதைவஸ்து பெறுவதற்கு தேவையான பணத்தைப் பெறுவதற்கு அவன் எந்த எல்லை வரைக்கும் செல்வான். எமது நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடியால் பெற்றோர்கள் வேலை வேலை என்று அலைகிறார்கள். பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்று கவனிப்பதில்லை. ஆரம்பத்தில் ஏதேதோ காரணங்களைச் சொல்லி பெற்றோரிடம் காசைப் பெற்றுக்கொள்கிறார்கள். பின்னர் பெற்றோர்கள் கொஞ்சம் கவனித்துக் கண்டித்தால் அவர்கள் வேறு வழிகளில் காசைப்பெற முயல்கிறார்கள். தொடக்கத்தில் வீட்டில் திருட முனைகிறார்கள். பின்னர் அயலவர்களின் வீடுகளில் கை வைக்கிறார்கள் அதன் பின்னர் வேறு இடங்களில் திருட முனைகிறார்கள். அதாவது எவ்வாறாயினும் பணத்தைப்பெற்று போதைவஸ்துகளைப் பெற முயல்கிறார்கள். அதை விட இவர்களைப் பயன்படுத்தி பல பெரியவர்கள் தங்களுடைய தேவை-களைப் பூர்த்தி செய்கிறார்கள். தங்களுடைய எதிரி களைத் தாக்குவதற்கும் பல்வேறு சேதங்களை எதிரிகளுக்கு உருவாக்குவதற்கும் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள் இவ்வாறு மற்றவர்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுபவர்கள் பின்னர் தங்களின் சுயதேவைகளுக்காக வழிப்பறி நகைகளை அறுத்தல், கத்தி காட்டி பணம் பறித்தல் போன்ற தீய செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். போதைவஸ்துவிற்கு அடிமையானவர்கள் பெண்களைப் பார்த்தால் அதை விடக் கேவலமான செயல்களில் ஈடுபடுகிறார்கள் அவர்களில் பலர் பிற ஆண்களுடன் தகாத உறவுகளை வைத்தும் பல ஆண்கள் இவர்களின் பலவீனத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தி தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்கள். இன்று பத்திரிகைகளில் வரும் பல செய்திகள் மிகவும் அருவருக்கத்தக்க செயலாக உள்ளன. 6,7 வயது சிறுமிகள் கூட பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள். சாதாரண மனநிலையில் உள்ள ஒருவரால் இவ்வாறெல்லாம் செயற்பட முடியாது.

அடுத்ததாக மிக முக்கியமான விடயம். நோய்களைப் பரப்புதல். பலவிதமான நோய்கள் அளவுக்கதிகமான நெருக்கம் ஒருவர் மூச்சை இன்னொருவர் சுவாசித்தல் போன்றவற்றால் பரப்பப்படுகிறது. கொரொனா நோய் உள்ள காலகட்டத்தில் ஒவ்வொரு வைத்தியசாலைகளிலும் பல்வேறு வகையான பிரச்சனைகள். போதைவஸ்து பாவித்த ஒருவன் பராமரிப்பது எவ்வளவோ கஸ்டமான காரியமாக இருந்தது. இலங்கை போன்ற நாடுகளில் நோய்களைப் பற்றிய அறிவு மக்களுக்குக் கொடுப்பதற்கு பொருளா தார வசதிகள் இல்லாத காரணங்களால் பல நெருக்கடிகளை மக்கள் எதிர் நோக்க வேண்டி இருக்கும். இவை எல்லாவற்றையும் விட மிகவும் கொடிய நோயாகிய எய்ட்ஸ் பரவுதல். இந்த நோயைப்பற்றிய அறிவு எமது நாட்டில் அதிலும் வசதி குறைந்த மக்களிடம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இந்த நோயானது இரத்தம் மூலமே கூடுதலாக பரவுகிறது. பாதுகாப்பற்ற பாலியல் போன்றவையே நோய் பரவுவதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றது. இந்த நோயைப்பற்றிய போதிய அறிவு உள்ளவர்களே போதை ஏறியவுடன் தவறு செய்கிறார்கள். அது மட்டுமன்றி பொருளாதார வசதியின்மையும் ஒரு காரணமாகும். அதாவது ஊசி வேண்டவோ அன்றி பாலியல் உறவின்போது பாதுகாப்பு உறைகளை வேண்டுவதற்குப் பணம் இன்மையும் ஒரு காரணமாகும். பல முன்னேற்றம் அடைந்த நாடுகளில் இவற்றை எல்லாம் இலவசமாகக் கொடுக்கிறார்கள். அதனால் இந்த நோயின் பரவலை ஒரு சிறிதளவு கட்டுப்படுத்தக் கூடிய-தாக உள்ளது. அடுத்ததாக மருத்துவ வசதிகள் இலங்கையில் சாதாரண மருந்து வகைகளிற்கே பல வேளைகளில் தட்டுப்பாடு நிலவுகிறது. இப்படியான நாடுகளில் மிகவும் விலை கூடிய மருந்து வகைகளை இலவசமாக மக்களிற்கு வழங்குவதற்கு முடியாது. 2004ம் ஆண்டு சித்திரை மாசம் நான் இந்த வைத்தியசாலையில் வேலையில் சேர்ந்தேன். அப்போது மார்கழி மாசம் குளிர் தொடங்கும் போது பல நோயாளர்கள் மரணமடைந்தனர். நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த நோயாளர்கள் கூடுதலாக இறந்தனர். எய்ட்ஸ் நோய் உள்ளவர்களுக்கு இந்த நோய் எதிர்ப்பு சக்திகுறைவே முக்கியமாக உள்ளது. அதனால் குளிர்காலங்களில் வரும் சாதாரண நோயே இவர்களின் மரணத்திற்குக் காரணமாகிவிடுகிறது. ஆனால் 2021ஆண்டளவில் நான் வேலையை விடும்போது இந்த இறப்பு எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.காரணம் பல நவீன மருந்துகளின் கண்டு பிடிப்பே. ஆனால் இந்த மருந்துகளின் விலைகள் மிகவும் அதிகமாக இருக்கும். மேலை நாடுகளில் காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களின் உதவியுடன் நோயாளர்கள் இந்த மருந்துகளைப் பெற்றுக் கொள்வார்கள். ஆனால் இலங்கை போன்ற வறிய நாடுகளில் இது போன்ற வசதிகள் இல்லாமையால் இறப்புக்களின் எண்ணிக்கையைக் குறைக்கமுடியாது. இளம் வயதினரைக் குறிவைத்து பாடசாலைகளிற்கு அருகாமையில், போதை வஸ்து வியாபாரிகள் தங்களின் வியாபாரத்தை நடத்துகிறார்கள். இது ஏதாவது திட்டமிட்ட செயலாக இருக்குமோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

கல்வியைச் சீர்குலைத்தல் குறிக்கோளற்ற வாழ்க்கையை திணித்தல் தன்னைச்சுற்றி என்ன நடைபெறுகிறது என்ற சிந்தனையை சிந்திக்க விடாமல் செய்தல் போன்ற காரணங்களால் கூட இந்த போதைவஸ்துப் பழக்கத்தை மாணவர்களிடையே பரப்பலாம். நாட்டில் காணப்படுகின்ற பொருளா தாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பல வழிகளில் ஒவ்வொரு குடும்பமும் தங்களுக்குத் தேவையான மரக்கறி வகைகளை வீட்டுத்தோட்டம் மூலமும் வேறு வகையான மரவகைகளை நாட்டுதல், கோழி வளர்ப்பு, ஆடு, மாடுகள் போன்றவற்றை வளர்த்து வீட்டுத்தேவைபோக மிகுதி உள்ளவற்றை விற்பனை கூட செய்யலாம். ஆனால் இன்றைய நாட்டு நடப்பை உற்று நோக்கும்போது சட்டவிரோதமான பயிர்ச்செய்கை அதிகரிக்கும்போல் தோன்றுகிறது. இலங்கை ஒரு சிறிய தீவு மிகவும் கட்டுப்பாடாக வைத்திருக்கக் கூடிய நாடு. இதை உணர்ந்து தனி நபர் தொடக்கம் அரசாங்கம் வரை முயற்சி செய்தால் இந்தப் போதை வஸ்து பரப்பலை நிச்சயமாகத் தடுக்கலாம். இல்லையெனில் இன்னும் சில வருடங்களில் நாடு ஒரு சட்ட விரோத சக்திகளின் தீவாக மாறும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

○




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• சிறுகதை •

க. ஆதவன்

# மியா



காலம்
கதை சொல்லும்.
யார் யார் என்பதை.

பிறகுதான் தெரிஞ்சுது
நுணுக்கமாய்
நீ என்ன ரசிச்சாய் என்பது
துயர்கள் சூழ்ந்தவொரு பொழுதில்
சந்தித்தோம்.
மேலுமொரு பொழுதில்
நாம் சந்தித்திருப்போம் என
நீ நினைத்திருந்தாயா....

நிலவு காலித்திருந்த பொழுதில்
இப்படியே.
கவிதை எழுதிக் கொண்டிரு.
காலம்
கதை சொல்லிக் கொண்டுதானிருக்கும்.

மேற் சொன்ன கவிதையை
அவன் டெனிசில்
மொழிபெயர்த்துக்கொண்டிருந்தான்.

நீலக்கண்
சீவாமல் அப்படியே
சிக்கெடுத்காமல்... நேரிய
வெண்முடி.

தலையென்றால்.
எண்ணை வைக்க வேணும்
பேன் குத்த வேணும்
சிக்கெடுக்க வேணும்.

சுருளில்லாவிடில்
சுருட்ட வேணும்
கருப்பில்லாவிடில்
வெள்ளையாக்க வேணும்
வெள்ளை இல்லாவிடில்
கறுப்பாக.... மண்ணிறமாத்தனும்
பெயின்ற் அடிக்க வேணும்

ப்ளொன்றி பெண்களில்
அவனுக்கொரு ஈர்ப்பு அந்நாளிலிருந்து
இன்று வரை இருந்தது.

what your name என அன்று அவன்
கேட்ட பொழுது
மியா எனச்சொல்லி இருந்தாள்.
பதிலுக்கு அவனும்
I am supps என்றிருந்தான்.

Mea could you follow the text

I am trying

ஒரு கவிதையை
அன்னியமான ஒரு தளத்தில் வைத்து
மியாவும் சுப்ஸம்
கிளறிக் கொண்டிருந்தார்கள்.

கவிதை எக்கேடும் கெட்டுப் போகட்டும்
சனியன் வரும் போது வரும்
வராட்டிப் போகட்டுமன்
ஆரழுதது
மியாவின் கண்களும் அவள் அசையும்
பொழுது.. கழுத்துவரை கத்தரிக்கப்பட்ட
ப்ளொன் முடியும் நீல விழியும்
இதே கவிதைதானே

தோளொடு தோளுரசி
4ம் மாடியில்.. யன்னல் கரை மூலையில்
ஒரு கோப்பியை சிப் பண்ணிக்கொண்டு
ஒரு கவிதையை அனலைஸ் பண்ணும்
பாக்கியம் ஆருக்கு கிடைக்கும் ?
சுப்ஸ் எனக்கொரு பூனைக்குட்டி
இருந்தது
உனது தோள் எனது ஸ்பரிச உணர்வில்
அதை நினைவு படுத்துகிறது...

'மியா
தொடுகைதான் காதலென்றாச்சா
கடைசியில்...'

'No .....not at all...'

'அப்ப இது என்ன சனியன்..'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிறகுதான் தெரிஞ்சுது
நுணுக்கமாய்
நீ எனை ரசிச்சாய் என்று
what dose it mean..
ஏன் அப்படி எழுதினாய்...'

'உணர்ந்ததை எழுதினேன்
உணர்வுதானே கவிதை.'

'டெனிசில் மொழிபெயர்த்தாலும்
லற்றினில் மொழிபெயர்த்தாலும்
உணர்வு ஒன்றுதானே...'

'yes'

'ஒரே விசயத்தைத்தான் இருவரும்
உணர்ந்தும் பேசிக்கொண்டும்
இருக்கிறோம்.'

'நீ அப்படி நினைக்கிறாய்'

'நான் அப்படி நினைக்கிறன் எண்டு
நீ உணர்கிறாய்'

'ம்'

'அதுதான் கவிதை'

'we are going to close the
cafe in 10 mins'
சொல்லி விட்டுப்போனான்
மேசைகளைத் துடைத்துக்கொண்டிருந்தவன்.

'மியா
கவிதைகள் ஏன் புரிவதில்லை..?'

'சுப்ஸ்,
அவை எல்லைகள்
தாண்டுவதில்லை...'

'வெறும் பத்தே நிமிடத்தில்
கவிதையை கவிதையாக
மொழிபெயர்க்க முடியுமா...?'

ஏதோவொரு ஆய்வுக்காக
அரச நூலகத்திற்குச் சென்றிருந்தான்

பிறமொழிக்கவிதைகள்

டெனிஸ் mea மொழிபெயர்ப்பு

MEA
சிறப்பு. 1992

'துயர்கள்
சூழ்ந்தவொரு பொழுதில்
சந்தித்தோம்.
மேலும் ஒரு பொழுதில் நாம்
சந்திப்போம் என
நினைத்திருந்தாயா...?'

புனித நூல்களெல்லாம் வெட்கப்பட்டன...
தனது பெயரால் நடக்கும் போரில்
தன் அன்புக்குரிய குழந்தையின்
அவலக்குரல் கேட்டு...!
உங்களுக்கு எண்ணெய் பெரிது
தங்கம் பெரிது
மதம் பெரிது
அணு ஆயுதம் பெரிது
அவளுக்கு கிழிந்தாலும் எரிந்தாலும்
அவள் பாடசாலை கொண்டுபோகும்
அந்தப்புத்தகம் தான் பெரிது...!

புலனத்தில் அதிகம் பகிரப்படும் கவிதை.
நனறி : மீராபாரதி வ.க.செ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதாவின்
# ‘சூர்ப்பணகை’

- இளவாலை விஜயேந்திரன்
(நோர்வே)




**படைப்பாளி** ஒருவருக்கு அடிப்படையில் மனத்திருப்தி முக்கியமானது. படைப்பாளி, ஒரு-வகையில் மற்றவர்களுக்காய்ப் படைப்பதாய்ச் சொல்லிக்கொண்டாலும், முதலில் அந்தப் படைப்பு, படைப்பவரின் மனதைத் திருப்தி செய்யவேண்டும். படைப்பாளியைத் திருப்திப்படுத்தாத ஒரு படைப்பு, ரசிகர்களைத் திருப்தி செய்யுமா என்பது சந்தேகமான ஒரு விடயம் என்றே நான் நினைப்பதுண்டு.

நுண்கலைகளை மற்றோரோடு பகிர்வோர் அது எத்தனை தூரம் அவர்களைச் சென்றடைகிறது என்பது தொடர்பில் எவ்வளவு தெளிவாக உள்ளனர் என்பது பெரும் கேள்வியே. **நுண்கலைகள் மக்களின் ரசனை மட்டத்துக்குச் சற்று மேலே நிற்பதும், அதனைப் படைப்போர், தாம் அந்தத் தூரத்திலிருந்து கீழிறங்குவதிற் காட்டும் தயக்கமும் நாம் அறியாத ஒன்றல்ல. கலை மக்களைச் சென்றடைய வேண்டியது அவசியமா அல்லது மக்கள் தங்கள் கலைரசனையை உயர்த்திக்கொள்வது அவசியமா என்ற கேள்வி அவ்வப்போது வந்துபோவதுண்டு. நல்ல கலைவடிவங்களைத் தொடர்ச்சியாகத் தரும் கலைஞர்கள், தமது படைப்பு பலரிடம் சென்றடையும் வழியை இலகுவிற் கண்டடைவார்கள்.**

அவ்வாறான நிகழ்வொன்று இவ்வருட ஆரம்பத்தில் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவை அண்டிய சண்விக்கா நகரில் இடம்பெற்றது. அரங்கு நிறைந்த அந்தக் காட்சி வந்தவர்களை மகிழ்வித்ததுடன், கொஞ்சம் சிந்திக்கவும் வைத்தது. புலம்பெயர் நாடுகளிற் தமிழரை மையப்படுத்திய நிகழ்வுகள் பெரும்பாலும் பொழுதுபோக்காகவே அமைவன. அவற்றிற் கணிசமானவை திரையிசை சார்ந்தே நிகழ்த்தப்படுபவையும்கூட. திரையிசை இல்லாத, முழுநீள நிகழ்வுகள் பார்வையாளர்களைப் பெருமளவில் ஈர்ப்பதில்லை எனப் பொதுவாக நம்பப்படுகிறது. ‘சூர்ப்பணகை‘ என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்த நாட்டிய நிகழ்வு ஒரு விதிவிலக்கு, தொடர்ச்சியான பல விதிவிலக்குகளின் ஒரு பகுதி என அழைக்கப்படக்கூடியது. இது கவிதா லட்சுமி என்று கலை, இலக்கிய உலகில் அறியப்பட்ட ஒருவராற் சாத்தியப்பட்டது.

அன்றைய தினம் ஒஸ்லோவிலும் சுற்றுப் பகுதிகளிலும் வெப்பநிலை பூஜ்ஜியத்துக்கு கீழே 20 பாகை இறங்கி இருந்தது. பொதுவாக யாரும் வெளியில் செல்ல விரும்பாத ஒரு நாள். ஆனாலும் அன்று அரங்கு நிறைந்தது. இது ஒரு நாள் நடக்கிற நிகழ்வு அல்ல. தொடர்ச்சியாக, ‘சூர்ப்பணகை’யின் இயக்குனர் கவிதா லட்சுமி நடத்துகின்ற வருடாந்த அரங்க நிகழ்வில் இவ்வாறு ரசிகர்கள் கூடுவது வழக்கம். இது தற்செயலாக நடப்பதும் அல்ல. இந்த நிகழ்ச்சிக்கு வருபவர்கள், தாம் ஏற்கனவே கண்டிராத ஒரு நடன நிகழ்வை ரசிக்க வருகிறோம் என்ற தெளிவோடு தான் வருகிறார்கள். அவர்களது விருப்புகள் எப்போதும் பூர்த்தியாக்கப்பட்டு கொண்டே வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதில் நோர்வேக்குப் புலம்பெயர்ந்த கவிதா லட்சுமி தனது குடும்பச் சூழலில் இருந்து கலை இலக்கிய ஆர்வத்தை வளர்த்துக் கொண்டவர். அவருடைய தொடர்ந்த தேடலும், துணிச்சலான வெளிப்பாட்டு ஆர்வமும் நல்ல பல அரங்க நிகழ்வுகளை ஒஸ்லோவிலும் அதற்கு அருகில் உள்ள இடங்களிலும் தந்திருக்கின்றன. இவ்வாறான ஒரு தொடர்நிகழ்வின் ஓர் அம்சம் தான் சூர்ப்பணகை.

கல்கியின் 'சிவகாமியின் சபதம்', பாரதியாரின் 'ஞானரதம்', தமிழிலும் பல பிறமொழிகளிலும் புகழ்பெற்ற கவிஞர்கள் பலரது கவிதைகளுக்கு – பாடல்களுக்கல்ல – அமைக்கப்பட்ட நடனங்கள், குருஷேத்திரம், "பறை" மனிதத்தின் குரல், உயிர் மிகும் ஓவியங்கள் (ரவிவர்மாவின் ஓவியங்களுக்கான நடன வடிவம்), மாதவியின் பதினோராடல்கள் எனக் கவிதாவின் முயற்சிகள் புதிய தளங்களைத் தொட்டுச் செல்பவை. வேறு நாட்டிய ஆசிரியர்கள் தொடாத விடயங்கள்தான் அவரது மேடையை அலங்கரிப்பவை. அரங்க அமைப்பு, ஒளியமைப்பு, இசை என அரங்கப் பிரக்ஞையோடு நேர்த்தியாக உருவாக்கப்படுபவை.

எமக்கெல்லாம் சூர்ப்பணகை என்றதும் மனதிற் தோன்றும் படிமம் எதிர்மறையானது. பல தமிழ்ப்படங்களில் வரும் 'வில்லி'களைவிட மோசமானது என்றும் கூறலாம். அதேவேளை ராமன் புனிதனாகவும் ஏகபத்தினி விரதனாயும் எம்மனதில் உறைந்துவிட்ட எண்ணக் கோலங்கள் இவ்வரங்கில் முதன்முறையாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

ஓர் அரங்கில், நாம் முன்னரே அறிந்த விடயங்களை அப்படியே படைப்பதுதான் நடன நிகழ்வுகளாய் நாம் பொதுவாகக் காண்பது. அதிலிருந்து விலகி, சொல்லப்பட்ட விடயங்களைக் கேள்விக்குள்ளாக்குவது எல்லோரும் செய்யும் ஒரு செயலல்ல. கவிதாவிடம் இருக்கும் இலக்கிய அறிவும் தேடலும் ஏற்கனவே உள்ளதை அப்படியே படைப்பது சரியல்ல எனச் சொல்கின்றன. பொதுவாகப் பரதநாட்டிய நிகழ்வுகள் சொல்லப்பட்ட விடயங்களை அப்படியே பிசிறின்றிச் சொல்வது/ செய்வது என்ற ஒரே தடத்திற் பயணிக்கையில் சிலராவது இப்படி மாற்றி யோசிப்பது ரசிகர்களுக்குப் பயன்தருவது.

சூர்ப்பணகை ஒரு பெண்ணாக மேடையிற் தனது நியாயங்களை எடுத்துரைக்கிறாள். தான் மயங்கியமைக்கும், மையல் கொண்டதற்கும் ராமனும் காரணம் என்கிறாள். தனக்கு இழைக்கப்பட்டது அநீதி என்ற அவளின் குரல் அந்த நிகழ்வின் மேடையில் மிக உரத்து ஒலித்தது. அதைப் பார்வையாளர்களும் ஏற்கும் வகையில் மிக நேர்த்தியாகப் பிரதி வடிவமைக்கப்பட்டிருந்தது. இதுவொன்றும் இலகுவான விடயமல்ல. பலநூறு ஆண்டுகளாய்த் தூய்மையான, தெய்வத்தையொத்த (அவதாரமாக) ராமனின் கதைதான் நாம் அறிந்தது. நிறைந்த அரங்கொன்றில் அனைவர் முன்னிலையிலும் அவனது 'தூய்மை' கேள்விக்குள்ளாக்கப்பட்டது அன்றுதான். அதுவும், அயோத்தியில் ராமர் கோயில் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கிய காலத்தில் இப்படியொரு பிரதியை நேர்த்தியாக மேடையேற்றியது வரவேற்கப்பட வேண்டியது - அது தற்செயலாக நிகழ்ந்திருந்தாலும்.

இந்த நாட்டிய நாடகம் ஒரு தனியரங்காகவே நிகழ்ந்தது. வேறு நாட்டிய உருப்படிகள் இதற்குள் இணையவில்லை. அரங்கின் உள்ளே நுழைந்ததும் நிகழ்வு பற்றிய ஓர் அறிமுகத்தோடு காட்சிகள் விரிந்தன. இசையும், வண்ண ஒளிக்கோலங்களும் இணைய மேடைக்கு வந்த கவிதாவின் மாணவியர் எவ்விதத் தொய்வுமின்றி 'சூர்ப்பணகை 'யை நிகழ்த்தினர். இடைவேளை என ஒன்றே இல்லாமல் நிகழ்வின் இறுதியில், பார்வையாளர்கள் சிலரது கருத்துப் பரிமாற்றங்களோடு அரங்கு கலைந்தது. இவ்வாறான நிகழ்வு ஒஸ்லோவுக்குப் புதிது – ஒருவேளை தமிழ்கூறு நல்லுலகுக்கும்.

அரங்கிலும், பின்னணியிலும் இணைந்தோர் அறுபது பேர் வரை இருக்கலாம். இசை அஸ்வமித்ரா (தமிழ்நாடு), பிரதியில் கம்பர், அருணாசலக் கவிராயர், கவிதா லட்சுமி ஆகியோரது பாடல்கள் இணைந்திருந்தன. இந் நிகழ்வுக்கான பொருட்செலவும், நேரச் செலவும், பலரது அர்ப்பணிப்பும் கவனத்துக்குரியன. இவையெல்லாம் ஒரே மேடையேற்றத்துடன் முடிந்துபோவது எப்போதும்போல் இப்போதும் தோன்றும் ஒரு கவலை.

குறிப்பு : கம்பராமாயணத்தில் உள்ளபடியே 'சூர்ப்பணகை' என்று பெயரிடப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்

வளர் - காலாண்டிதழின்

# சிறுகதைப் போட்டி 2024

- இலங்கையில் வசிப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும்.
- வயது வரம்பு, பக்கங்கள் வரம்பு இல்லை.
- தெளிவான கையெழுத்து அல்லது தமிழில் தட்டச்சு செய்திருக்க வேண்டும்.
- வெளியிடப்படாத கதைகளை உங்களுக்குத் திருப்பி அனுப்ப முடியாது. எனவே கதையின் நகலை வைத்துக் கொள்ளவும்.
- கதையுடன் எழுத்தாளரின் பெயர், முகவரி, மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி எண் விவரங்களை அனுப்பவும்
- இது ஏற்கனவே அச்சு, இணையதளங்களில் வெளியிருக்கப்பட்டிருக்கக்கூடாது.
- இது உங்கள் சொந்தக் கற்பனை என்பதற்கு உறுதி மொழி தரவேண்டும்,
  உறுதி மொழி இல்லாத கதை போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.
- இந்த போட்டி முடியும் வரை நீங்கள் அதை வேறு எந்த ஊடகத்திற்கும் அனுப்பக்கூடாது.
- ஒரு போட்டியாளர் ஒரு கதையை மட்டுமே அனுப்ப முடியும்
- நடுவர்குழுவின் தீர்ப்பே இறுதியானது.

பரிசுத் தொகையினை
நீங்களும் வெல்வதன்மூலம்
தமிழ் இலக்கியத்திற்கு
வளம் சேருங்கள்!!

முதற் பரிசு
**ஒரு இலட்சம் ரூபா**

இரண்டாவது பரிசு
**50.000 ரூபா**

மூன்றாவது பரிசு
**25.000 ரூபா**

மேலும்
பதினொரு ஆறுதல் பரிசுகள்
**தலா 10.000 ரூபா**

வளர்

**தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி**
**1979 ம் வருட உயர்தர வகுப்பு மாணவர்**
**இலக்கிய குழாமின் வெளியீடு**
**காலாண்டு இலக்கிய இதழ்**

1வது பரிசு



வித்தகபுரம், தெல்லிப்பழை
**பண்டிதர் த. சுப்பிரமணியம்**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : சுப. கிருஸ்ணானந்தன்

2வது பரிசு



விராங்கொடை, தெல்லிப்பழை
**விஜயநாயகம் திருச்செல்வம்**
**நினைவுப்பரிசு**
வழங்குபவர் : விஜி நாகராஜா

3வது பரிசு



வறுத்தலைவிளான்
**பூரணலிங்கம் விக்னேஸ்வரி**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : ஜெயரதன்

ஆறுதல் பரிசு



மகாஜனக்கல்லூரி முன்னாள் ஆசிரியர்
**அம்பலப்பிள்ளை**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : ந. பத்மநாதன்

ஆறுதல் பரிசு



சிறுகதை எழுத்தாளர்
**எஸ். அகஸ்தியர்**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : சி.மனோகரன்

ஆறுதல் பரிசு



மயிலங்கூடலூர்
**பி. நடராசன்**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : கு. வாமதேவன்

ஆறுதல் பரிசு



மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர்
**பொ. கனகசபாபதி**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : புனிதா கணேஸ்

ஆறுதல் பரிசு



மகாஜனா முன்னாள் ஆசிரியர் (ஏழாலை)
**செல்லப்பா செல்லத்துரை**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : செந்தில்வாணி

ஆறுதல் பரிசு



அருணோதயக்கல்லூரி முன்னாள் ஆசிரியர்
**சாரதாமணி**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : சி. மனோகரன்

ஆறுதல் பரிசு



மகாஜனக்கல்லூரி முன்னாள் ஆசிரியர்
**செ. கதிரேசர்பிள்ளை**
**நினைவுப்பரிசு**
வழங்குபவர் : வித்தகபுரத்தான்

ஆறுதல் பரிசு



மகாஜனக்கல்லூரி முன்னாள் ஆசிரியர்
**வ. தம்பிராசா**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : சோ. முருகானந்தன்

ஆறுதல் பரிசு



மகாஜனா கனிஷ்டபிரிவு அதிபர்
**வரதராஜப்பெருமாள்**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : ஸ்ரீதர்

ஆறுதல் பரிசு



மகாஜனக்கல்லூரி முன்னாள் ஆசிரியர்
**ச. விநாயகரத்தினம்**
**நினைவுப் பரிசு**
வழங்குபவர் : சுப. கிருஸ்ணானந்தன்

ஆறுதல் பரிசு



மாவிட்டபுரம்
**கதிரவேலு நாகேஸ்வரி**
**நினைவுப்பரிசு**
வழங்குபவர் : யாழினி யோகேஸ்வரன்

**உங்கள் கதைகளை**
**அனுப்பவேண்டிய**
**முகவரி :**
Krishnasubram7@gmail.com

தபாலில் சேர்ப்பிக்க..
**'வளர்' சிறுகதைப்போட்டி**
c/o : T. Selvamanoharan
141, Kerniady
Thirunelvely, Jaffna.

வளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org